# திருவடிப் பெருமை சிந்திப்பரியன



எழுதியவர்

சிவத்திரு சிவ.சண்முகவடிவேல்

உ
சிவமயம்

# திருவடிப் பெருமை சிந்திப்பாரியன



எழுதியவர்
சிவத்திரு.சிவ.சண்முகவடிவேல்
அவர்கள்

வெளியீடு:
ஆத்மஜோதி தியான மணிமண்டபம்,
ஏழாலை.

| | | |
|---|---|---|
| வெளியீடு | – | ஆத்மஜோதி தியான மணிமண்டபம் |
| ஆசிரியர் | – | சிவ.சண்முகவடிவேல் |
| உரிமை | – | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | – | 2007 |
| பக்கங்கள் | – | 116, ஏனையவை 08 |
| விலை | – | 200 ரூபா |
| அச்சுப்பதிப்பு | – | ஐய்ராம் பிறின்ரேஸ்,<br>வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். |

குகமயம்

*மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மாவையாதீனம்*
*மஹாராஜ ஸ்ரீ சு.து. ஷண்முகநாதக்குருக்கள்*
*ஆதீன கர்த்தா – பிரதமகுரு குருக்கள்*

# ஆசியுரை

**"பழவினையற்ற பக்தன் ஒருவனே**
**பற்றற்று வாழ்வதற்குப் பழகமுடியும்**
**ஏனையோர் யாவரும் அன்புக் கடவுளின்**
**திருவடிகளைத் தொழுது அறப்பணி செய்வதைக்**
**கடைப்பிடித்தாலே போதுமானது"**

*- வசிஷ்டர் -*

**இறைவனிடம்** அழகுதமிழில் பாடி ஆனந்தக்கண்ணீர் சிந்தி அன்புக் கடவுளின் திருவடி நிழல்வேண்டி தியானம் செய்யும் ஒருவரை யான் இன்றைய காலகட்டத்தில் கண்டு உய்வடைந்து மகிழ்கின்றேன். இவர் நாயன்மார்களது வரிசையில் வைக்கப்பட வேண்டியவர்.

தீர்க்கதரிசிகளாகிய எமது முன்னோர்கள் தழுவி ஒழுகிய தவநிலை வழிகள் யாவும், இன்று உலோகாயத அலைகளுள் அகப்பட்டு மங்கி மறைந்து போகின்றன. ஆன்ம வலிமை கிடையாத மக்கள் அதிகமாக அறநெறி மறந்து தத்தமிஷ்ட்டப்படியான தத்துவங்களை சகல துறைகளிலும் பரப்புகிறார்கள். இத்தகைய சூழலுக்குள்ளேதான் ஞானவேட சின்னங்களணிந்து புன்சிரிப்போடு அமுத வார்த்தைகளால் தாய் சிசுவிற்கு ஆறுதலளிக்குமாப்போல் மக்கட்கு அறிவுரை தந்து ஆறுதலளிக்கும் ஒருவர் எம்மத்தியிலேயே உலாவுகிறார். அவருக்கு வெய்யிலுமில்லை மழையுமில்லை. மனிதர்களுள் வேற்றுமைகூட அறியாதவர். இகழ்ச்சி புகழ்ச்சி யாவும் இவருக்கு விதிவிலக்கு. **யாதும்ரே யாவரும் கேளிர்** என்ற வைராக்கிய உணர்வும், தெய்வமிகழேல், தேசத்தோடொத்துவாழ், வீடுபெறநில், மாதா பிதா குரு தெய்வம், இவர்களைப் போற்றுக என்பனவே இவரது இதயத்தின் சிந்தனைத் துளிகள். இவர்தான் மாண்புமிக்க தெய்வச் சிந்தனைகளுடன், தெய்வீகச் செயல்களால் தனது கரங்களில் அருட்சக்தி கொண்ட முத்திரைகளோடு இப்போதும் பவனிவரும் சிவதொண்டன் சிவ.சண்முகவடிவேல் அவர்கள். இவர்

'**திருவடிப் பெருமை சிந்திப்பரியன**' எனும் ஞானநூலை உலகிற்குத் தந்துணிற்கிறார். அருமையானதோர் முயற்சி இன்றைய கால கட்டத்தில் வேண்டத்தகுமோர் நூல். இருப்பினும் நூலின் பொருளை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டுமல்லவா.

திருவடிப்பேறின் பெருமை பற்றி வேதசிவாகமங்களும், இதிகாச புராணங்களும் அளவிற்கதிகமாகவே தரவுகள் தந்துநிற்கின்றன. கந்தபுராண '**திகடசக்கர**' என்ற காப்புச் செய்யுள் "**விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்**" என ஆரம்பத்திலேயே கச்சியப்ப சுவாமிகள் கூறிவிட்டார். சூரபத்மன்கூட முருகப்பெருமானது திருப்பெரு வடிவத்தைக் கண்டதுமே "சூழுதல் வேண்டும் தாள்கடொழுதிடல் வேண்டுமென" மனதிலேயே ஆழ்ந்து நினைத்துவிட்டான். அதோடு ஆரம்பத்தில் முருகனை நோக்கிய போது முருகப்பெருமானது பாதகமலங்கள் அவனுக்கு அருள்தருவனபோல் அமைந்த போது "**தண்டையும் சிலம்புமார்க்குஞ் சரணமும் தெரியக் கண்டான்**" என கந்தபுராணம் தகவல் தருகின்றது. தேவர்கள் கூட யுத்தகளத்தில் முருகனருளை வேண்டிய போது "**பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி**" என போற்றினார்கள். கச்சியப்பர் கூட "**துய்யதோர் மறைகளாலுந், துதித்திடற்கரிய செவ்வேள் செய்ய பேரடிகள் வாழ்க**" என முதலில் வாழ்த்தி பின்னர் தான் வேலும் மயிலும் வாழ்க எனத் தொடர்ந்தார். இராமாயணத்தில் கூட இராமனது பாதத்துளிகள் பட்டதனாலன்றோ கல்லாகச் சபிக்கப்பட்ட அகல்யை, தனது சுயவுருப் பெற்றாள். மானிட வாழ்வியலில்கூட விவாக சம்பவத்தில் மணமகன் மணமகளைப் பார்த்து" அம்மையே எனைத் தாங்கிநிற்கும் தாய் நீயே ஆகுவாய் எனக்கூறியே "தாலி" என்ற மாங்கல்யத்தைக் கட்டுகிறான். இப்படியே ஏராளமான பலாபலன்களை இறைவனது பாதங்களாலும், தேவர்களது அடிகளாலும், பக்தர்களதும் ஆசார்யர்களதும் பாதங்கள் மூலமாகவும் உறுதியான நிலையான சம்பத்துகளை தெய்வீகமார்க்கத்தின் துணைகளோடு பெறமுடியுமென்பது முடிந்தமுடிவாகும். மிகுந்த பிரயாசையோடு இரவுபகலெனப் பாராது தன்னலங்களைக் கருதாது உலகிற்கு உலக மாந்தர்கள் உய்வுபெற்று நல்லவர்களாக வாழ்ந்து நல்லதோர் உலகை வழிநடத்த வேண்டுமென்றே இந்நூலை இறையருளால் இறைவனது தூதுவன்போல் இவ்வுலகிற்கு சமர்ப்பித்துள்ளார். இது சாமான்யமான காரியமுமல்ல. மிகுந்த விவேகத்துடன் ஆழ்ந்த கருத்துக்களமைந்த வாசகங்களோடு இந்நூல் சூரியன் போன்று பிரகாசிக்கிறதென

ஏராளமானோர் இயம்புகின்றனர். யானும் அவற்றை அங்கீகரிக் கின்றேன்.

சிவஞானியாக தரிசனம் தரும் சுவாமி சிவ.சண்முகவடிவேல் அவர்கள் நன்றாகவே வாழவேண்டும். சகல ஐஸ்வர்யங்களும் திருவருட் செல்வங்களுடே இவர்பால் சொரிய வேண்டுமென யானும் மாவைக்கந்தனது பாதாரவிந்தங்களில் வில்வார்ச்சனை சமர்ப்பித்து பிரார்த்திக்கின்றேன். என்றும் இன்புற்று வாழ்ந்து உலகிற்கு இவ்வாறான இனிய நூல்கள் தந்து நல்லறங்களை முன்னெடுக்கும் வாய்ப்புக்களை செயற்படுத்தும் வகையில் நிறைந்து விடுக எனவும் ஆசீர்வதிக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்**
*மாவையாதீனகர்த்தா – பிரதமகுரு*



# வாழ்த்துரை

**பௌராணிகர் சிவ.சண்முகவடிவேல் அவர்களின்**
**கட்டுரைத் தொகுப்பு நூல்**

திருமுறைகளிலும் புராணங்களிலும் தோய்ந்த உள்ளமுடையவர் பௌராணிகர் சிவ.சண்முகவடிவேல் அவர்கள். இந்நூல்களை எழுத்தெண்ணிப் படித்து மனனமாக்கிக் கொண்டவர் இவர். எங்கள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கடந்த பல ஆண்டுகளாக கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆசியவற்றை புராணபடனமாக நிகழ்த்தி வந்துள்ளார். கருத்துச் செறிவும் நுட்பமான புலமையும் இவரிடத்தில் காணப்படும் சிறப்புகளாகும். சைவத்தையும், தமிழையும் உயிராகப் பேணிவரும் ஏழாலைப்புதி இவருடைய பிறப்பிடமாகும். சைவத்திருக்கோலம், திருமுறைகளை ஓதிக்கொண்டிருக்கும் திருவாய், எதிலும் திருப்தி காணும் செம்மையான உள்ளம் இவரிடம் காணப்படும் சிறப்புகளாகும். தோத்திரமும் சாத்திரமும் இவருக்குக் கைவந்த கலைகள். இதனாலேயே **"திருவடிப் பெருமை சிந்திப்பரியன"** பற்றி நாற்பத்தாறு கட்டுரைகளை நன்கு ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். சைவப் பற்றுடையோர் இந்நூலை வாங்கிப் படித்து உயர்வடைவார்களாக.

> **"சிந்திப் பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்த செந்தேன்**
> **முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு**
> **பந்தித்து நின்று பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி**
> **அந்திப் பிறையணிந்தாடும் ஐயாறன் அடித்தலமே"**

*கலாநிதி. செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி*
*சமாதான நீதிபதி,*
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

# முன்னுரை

இப்புனித நூலின் மூலப்பிரதியைக் கையெழுத்திலே கண்டு படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. புத்தகக்காடு என்று சொல்லும்படிக்கு பலவிதமான நூல்கள் வெளிவந்தன. ஆனாலும் இவ்விடயத்தில் அமைந்துள்ள அற்புதங்களை எண்ணி எண்ணி நான் மெய்சிலிர்க்கிறேன். இதற்கு கருத்துரை வழங்க அடியேனெனக்கு தகுதி உண்டா என்பதை என்னுள் எழுந்த வினாக்கள். சிவ.சண்முகவடிவேல் ஐயா அவர்கள் புராண படலங்கள், திருவாசகம், முற்றோதல் அவர் எந்தக்கோயிலில் நிற்கிறாரோ அங்கே ஒரு நிகழ்ச்சியை காணலாம். அவர் வெளியிட்ட நூல்களில் சில சிவபெருமான் அர்ச்சனை மாலை 3 பதிப்புகள், நித்திய வழிபாட்டுத் தோத்திரட்டு 4 பதிப்புகள், அத்தனைப் பெருவிழாவில் ஆராதிக்க முத்தமிழ் வேதம் 3 பதிப்புகள் வெளியாகி இப்பொழுது சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன், இப்பொழுது மாவை ஆதினத்தில் ஆசியுடன் **திருவடிப் பெருமை சிந்திப்பரியன** நூலை வெளியிட்டு இருக்கிறோம். சைப்பெரியோர்கள் நல்லாதரவு வழங்குவார்கள் என நினைக்கிறேன்.

சிவதொண்டன்
**நா. முருகையா**
ஆத்மஜோதி மண்டபம்,
ஏழாலை.

*தொடர்பு:*
*ஊரெழு கிழக்கு,*
*சுன்னாகம்.*



## வாசகர்களுக்கு!

நல்ல நூல்களுக்காக தரப்படும் தொகை செலவல்ல மூலதனம்! நமது சிறப்பான எதிர்கால வாழ்வுக்காக தரப்படும் பொக்கிஷம் புத்தகத்தின் ஆயுட்கால வாழ்க்கைக்கான யோசனைகள் நிறைந்து இருக்கும்.

நீங்கள் செலவிடப்படும் தொகையியில் சிறுபகுதியையாவது பயன்தரும் புத்தகங் களுக்காக செலவிடுங்கள்.

# திருவடிப் பெருமை சிந்திப்பரியன

சிவ : சண்முகவடிவேல்

01

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே (138)

**இதுவும் திருமந்திரம்.**

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்திலே (1598)

*(திருமந்திரம், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமட பதிப்பு)*

இவையும் இவை போல்வனவான திருவடிப் பேறு பற்றிக் கருத்து வெளிப்படுத்தும் திருமந்திரங்களைச் சிந்திக்கின்ற போது இந்த உயிரை மும்மலச் சிறையிலிருந்து விடுவிக்க வல்லமை உள்ளது இறைவனுடைய திருவடியேயாகும் என்ற மெய்யுணர்வு தெற்றெனப் புலனாகும். சூரபன்மனுடைய வீரமகேந்திரச் சிறைகளத்தினின்றும் முருகப்பெருமான் தேவர்களை சிறை மீட்டமை போலாகும். சிவபெருமானுடைய சேவடிப் போது அநாதியே ஆன்மாவை அருஞ்சிறைப்படுத்திய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை முப்புரத்தை முடித்தது போல அழித்து உயிரைத் துன்ப சாகரத்தினின்றும் மீட்டு எடுத்து உய்யக் கொள்ளும் வல்லமை உடையது.

இறைவனுடைய திருவடி ஆற்றலினைத் தெளிந்ததினால் அன்றோ நக்கீரரும் நல்லதமிழில் "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" என்று திருமுருகனுடைய திருவடிக்குத் திருப்புகழ் பாடுவார்.

திருமூலநாயனாரும் நன்குணர்ந்தாராதலின் சிவபெருமானுடைய திருவடிப் பற்றே சீவனைச் சிவமாக்கும் விந்தையை வெளிப்படுத்துவார் ஆராய்ந்தால் மேலான வீட்டின்பமும் திருவடியாகும். இதனோடு, காரைக் காலம்மையார் கயிலாய நாதரிடத்தில் கனிந்து வேண்டிக்கொண்ட, நான் மகிழ்ந்து பாடி அறவாநீ யாடும் போதுன் னடியின்கீழிருக்க வென்றார் என்னும் வாக்கினோடு ஒப்பு நோக்கு உண்மை வெள்ளிடை மலைபோல தெள்ளிதினிற் தெளிவாகும்.

திருவடி ஞானம் உயிரைப் பந்தித்த மும்மலத்தினின்றும் மீட்க வல்லது. அந்தத் திருவடி ஞானமே எட்டுச் சித்தி தரும் முத்திப் பேறாகிய வீட்டின்பத்தில் சேர்க்கவும் வல்லது.

தெளிந்தால் சிவனடியே சிவமாகும். சிந்திப்பார்க்குச் சிவலோகமாவது திருவடியே ஆகும். உண்மையை உள்ளவாறு உரைத்தால் உயிர் செல்லுங் கதியது திருவடி. உள்ளத்தில் கள்ளமின்றித் தெள்ளத் தெளிவார்க்குத் திருவடியே சரணகமலாலயம்

இதனால் முப்பொருள் உண்மையின் உள்ளீடாக உறைந்திருப்பது திருவடிப் பெருமை எனத் தெளியலாம்.

பதிஞானத்தைப் பசுவைப் பற்றவிடாது பாசஞானத்தைக் கொடுத்து மாயை மயக்கும் ஆன்மா மலநீக்கம் பெற்றவிடத்து தன்னை உணர்ந்து தலைவன் தாளில் சாரும். வெற்றிவேல் பெருமான் கூரார்ந்த ஞான சக்தி வேலால் கிரவுஞ்சமலையைப் பிளந்தார் என்றால் ஆன்மாவிற்கு மும்மலம் நீக்கி ஆதிபொருளோடு ஆனந்திக்க வழிவகுத்தார் என்று தானே பொருள்.

பொய்யை மெய் என்று மயங்கிக் கிடக்கும் ஆன்மாவிற்கு மெய்யறிவு ஊட்டிப் பொய்நீக்கம் செய்து மெய்யோடு மேவுதல் செய்து வைப்பது இறைவனுடைய இணையடிகள் ஆகும்.

"யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்" என்று அழுதார் – அழுதடி அடைந்த அன்பர்.

பொய் என்றும் மெய்யை வெல்லாதாயினும், மெய்யைப் போர்த்து மூடிக்கட்டி மறைத்து வைத்திருக்கும் வல்லமை பொய்மைக்கு உண்டு. அதனால் பொய்யினுடைய ஆளுமையை கழற்றுவது அருமை. அதனுடைய ஆற்றலையும் வல்லமையையும் வெல்லுவதாயின் இறைவனுடைய திருவடி ஞானம் ஒன்றே உறுதுணை.

'பொய்யான உடம்பிற்கு மெய் என்று பெயர். அது உள்ளே மெய்ப் பொருள் உறைந்திருப்பதனாலும், மெய்ஞானத்தை மேவுவதற்குத் துணை செய்வதினாலும், பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே' ஆவதனாலும் மெய் என்னும் பெயர் பெறுகின்றது.

பொய்யைப் பொய்யாகப் போகவிடாமல் மெய்யாக்குகின்ற வல்லபம் மிக்க திருவடி ஞானத்தைச் சிறிது சிந்திப்போம்.

## 02

பசுஞான பாச ஞானங்களால் அறியப்படாதது பதிஞானம். அதனால் அது சிவபெருமானுடைய திருவடிகளையே சிந்தித்தலாகிய சிவஞானம் - பதிஞானம் நிகரற்ற கலைஞானத்தையும் பிறவிக்கு ஏதுவாகிய மலவாதனையையும் நீக்கி மேலாக விளங்கும் ஞானமாதலின் பதிஞானம் திருப்பெருகு சிவஞானமாகும். அது உணர்வதற்கரிய மெய்ஞ்ஞானம், அபரஞானம், பரஞானம் ஆகிய இருவகை ஞானங்களையும் தவமுதல்வ ராகும் ஞானசம்பந்தர் ஞானப்பால் அமுது செய்த அந்நிலையில் உணர்ந்து கொண்டார்.

**சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில் -**

( பெரிய — புராணம் 1968)

சிந்திப்பரிய திருவடிப் பெருமை உணர்வரிய மெய்ஞ்ஞானத்தால் உணரப் பெறுவது. அதுவும் கோடானு கோடி சீவர்களுக்குள் கோடானு கோடி பூர்வ புண்ணிய வசத்தால் வந்து கோடானு கோடி மாதவப் பயனாகக் கைகூடப் பெறுவது.

திருநாவுக்கரசுநாயனார் முன்னைய சனனத்தில் வாகீச முனிவராகத் திகழ்ந்த தவப்பயன் இப்பிறப்பில் திருவடிப் பெருமையைச் சேவிக்கும் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட செல்வரானார். அதனைப் பின்னால் காண்போம்.

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பொருளாகியும் பின்னைப் புதுமைக்குப் பேர்த்தும் அப்பெற்றியனுமாகும் முழுமுதற் பரம்பொருளு டைய திருவடிகள் பொன்னார்ந்தன. அப்பொன்னார்ந்த திருவடி மலர்கள் கீழ் உலகம் ஏழினுக்கும் அப்பாலாய் கீழ் சொல்லின் அளவைக் கடந்தது "**பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்**" என்பது திருவாசகம்.

சொல்லினைக் கடந்து நிற்கும் பாதமலரின் பெருமையைக் கண்டறிவார் யார்? அருமையை உணரவல்லார் ஆர்.

அருமையாலும் பெருமையாலும் அளக்கலாகாத அம்மலர்ப் பாதங்களை அருளாளர்கள் பொருளாழம் புலப்படப் போற்றுவார்கள்; ஏத்துவார்கள்; துதிப்பார்கள்.

இறைவனுடைய இன்னருளையே அதிசூக்குமமாகத் திருவடிகள் வெளிநின்று விளங்குவன

சிவபெருமான் அருவம் உருவம் அருவுருவம் என்ற எந்த நிலையில் நின்றாலும் ஒன்றாய் உடனாய் வேறாய் எந்தக் கோலத்தைக் கொண்டாலும் அந்த நிலையிலும் அந்தக் கோலத்திலும் இறைவனுடைய அருள் திறத்தை உணர்ந்தே திருவடியாகக் கண்டு அருளாளர்கள் சிந்தனை செய்வார்கள்.

திருநாவுக்கரசு நாயனாரைக் கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சிய "பொழுது" இமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த் தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே" என்னும் நாயனார் மெய்ம் மொழி எம்மையிலும் இன்பம் பயப்பது.

இவ்வாறாக இறைவனுடைய திருவடிப் பெருமையைத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருமுறைகளில் பரக்கக் காணலாம். ஏனைய திருமுறைகளில் இல்லாமல் இல்லை; இங்கு ஒன்றும் அங்கொன்றுமாக இலைமறை காய் போல் இருக்கக் காணலாம்.

சிந்திப்பரியன திருவடிப் பெருமையைத் திருமுறைகள் பன்னிரண்டிலும் இருந்து தெரிந்து எடுத்துத் தொகுத்துத் திரட்டித் தருவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மணி மணியான — முத்து முத்தான மாணிக்கச் சொற்பதங்களால் திருவாதவூரடிகளார் திருவாசகம் திருக்கோவையாரைப் பாட எடுத்துக் கொள்ளும் போது, நமச்சிவாயத்தை முன் வாழ்த்தி நாதனுடைய நறுமலர்ப் பாதங்களை நன்கு வாழ்த்திய பின்பு திருவாசகம் செப்பும் நேர்மை சிந்தையில் கொள்ளத் தக்கது.

**நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள் வாழ்க**
**கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க**
**ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க**
**ஏகன் அனேகன் இறைவ னடி வாழ்க**

**வேகங் கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க**
**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க**
**புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க**
**கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க**
**சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க**

**ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி**
**தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி**
**நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி**
**மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி**
**சீரார் பெருந்துறைநம் தேவ னடி போற்றி**
**ஆராத இன்பம் அருளு மலை போற்றி**
**சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்**
**சிந்தை மகிழ –**

என்று இவ்வாறு இறைவனுடைய செய்ய பொற்பாத மலரடி இணைகளை இன்தமிழால் – ஞானத் தமிழால் - தமிழ் ஞான வேதத்தால், வாழ்க - வெல்க – போற்றி என்று அறிபவன், அறிவு, அறியப்படும் பொருளாயுள்ள பெருமானை – திருவடிப் பெருமையை வாழ்க – மேம்படுக – காப்பதாக என வணங்கும் வண்ணம் நாம் வணங்குவதற்கு உரியது.

மேற்கூறியவற்றின் விளைபொருள் இதுவாகும். பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர் சிந்திப்பரியன. சிந்தனை செய்யச் செந்தேன் முந்திப் பொழிவன. அது திருப்பெருகு சிவஞானத்தைத் தரும்; சிவஞானம் பாவத்தை நாசம் பண்ணும்.

உலகில் மிக உயர்ந்த மெய்ஞ்ஞானத்தை நல்குவதால் சிவபெருமானுடைய திருவடிப் பெருமை ஒன்றே சிந்தனைக்கு உரியது.

## 03

ஒரு நாமம் ஓருருவம் ஒன்றும் இல்லாத ஒரு பொருள் ஒப்பற்ற சிவபெருமான். ஆயினும் ஆயிரம் திருநாமம் பாடிப் பரவுதல் சைவ மரபில் நிகழும் பாரம்பரியம்.

ஆடாமலும் ஆன்மாவை ஆடுவிக்காமலும் அமரும் அரும் பொருள் சீவகோடிகள் மேல் கொண்ட கடல் போன்ற கருணையினால் ஐந்து தொழிலுக்குரிய நட்டுவாங்கத்தை நடாத்துகின்றது. இறைவனுடைய ஐந்து திருத்தொழிலுக்குமான குறியீடு ஐந்து எழுத்துக்கள். திருவைந் தெழுத்துக்கள் பஞ்ச கிருத்தியத்தை வெளிப்படுத்தி நிற்பன.

ஐந்து தொழில்களாவன படைத்தல்,காத்தல்,அழித்தல், மறைத்தல், அருளல் என்பன ஐந்து தொழிலுக்கு உரித்துடையவன் இறைவனா தலினால் ஐந்து எழுத்து மந்திரம் இறைவனுடைய நாமம் ஆயிற்று. "நந்தி நாமம் நமச்சிவா யவெனும்" சந்தையால் தமிழால் விளக்கிப்பாடுவார் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர். திருநாமம் அஞ்செழுத்து என்பது வாகீசர் வாக்கு.

திருவைந்தெழுத்து : நமச்சிவாய, இதில்
நகரம் - உயிருக்குத் துணைபுரியும் மறைப்புச் சத்தி :
"**பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை**" என்பது திருவாசகம்.
மகரம் - மலம், பந்த பாசங்கள்.
சிகாரம் - சிவபெருமான்
யகாரம் - ஆன்மா

நமச்சிவாயத்தைத் தூய பஞ்சாக்கரம் எனவும் சிவாயநம என்பதனைச் சூக்கும பஞ்சாக்கரம் எனவும் வழங்குவர்.

திருவாதவூரடிகளார் திருவாசகத் தொடக்கத்தில் சிவபெருமான் ஐந்தொழில் நிகழ்த்தல் காரணமாகப் பெற்ற திருப்பெயரால் நாதனை முதலில் "**நமச்சிவாய வாஅழ்க**" என்று வாழ்த்திச் சிவபுராணத்தைப் பாட எடுத்துக் கொண்டார்.

ஆன்மநாயகருடைய திருவங்கங்களில் திருவடிகளை முதன்மைப் படுத்தி வாழ்த்தத் தொடங்குகின்றார். திருவடிகளைத் தான் என்னும் பெயரால் வாழ்த்துகின்றார். ஐந்து வகையாகத் திருவடிகளை ஏத்துகின்றார். ஐந்து விதமாகத் திருப்பாதங்களை மேன்மைப்படுத்து கின்றார். எட்டு வகையாகத் திருவடிகளைப் போற்றுகின்றார். அடிகளார் இறைவனுடைய திருவடிகளில் வைத்த அன்பை ஆரறிவார்?

நமச்சிவாயத்தை வாழ்த்திய திருவாதவூரடிகளார், நமச்சிவாயத்திற் குரிய நந்தி நாமங்களை நவின்று நறுமலர்ப் பாதங்களைப் போற்றிப் புகழ்வார். மாயப் பிறப்பறுக்கும் மன்னவனுடைய மலரடிகளை மூன்று வகையாக வாழ்த்துவார். பதினெட்டு முறைகள் போற்றுவார். சிவபெருமானுடைய செம்மலர்ச் சேவடிகளை வாழ்த்தியும் ஏத்தியும் போற்றியும் வணங்கியே திருவாசகத்தைப் பாட எடுத்துக் கொள்வார்.

நெஞ்சில் நின்றும் நீங்காத செம்மலர் நோன்றாளைப் பக்தியோடு பரவிப் பணிந்து பாடும் பண்பில் மிக்க அன்பின் அழகு இது.

**நமச்சிவாயம் எஞ்ஞான்றும் எவ்வுலகிலும் வாழ்வதாக.**
**நமச்சியத்துக்குரிய நாதனுடைய தாள்கள் வாழ்வதாக.**
**இமைப்பொழுதிலும் என் நெஞ்சில் நின்றும் நீங்காத**
**நிமலனுடைய தாள்கள் வாழ்வதாக.**

என்னைத் திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் ஆண்டு அருள் செய்த தலையாய மாணிக்கத்தினுடைய மலர்த்தாள்கள் வாழ்வதாக.

ஆகமத்தின் அரும்பொருளாகி வீடுபேறு அருளும் அண்ணலுடைய அரிய தாள்கள் வாழ்வதாக.

ஒருவனாகவும் அனேகனாகவும் உலகம் உயிர் எங்கும் உறையும் இறைவனுடைய தாள்கள் வாழ்வதாக.

மனோ வேகத்தை மாற்றித் திருவருள் தந்து ஆண்ட மன்னனுடைய அடிகள் மேம்படுவதாக.

பிறப்பினை வேரறுக்கும் அழகிய தலைக்கோலத்தையுடைய பெருமானுடைய வீரக்கழல் விளங்கும் கழல்கள் வெல்வதாக.

அன்பிற்குப் புறம்பானவர்களுக்கு தூரத்தே உள்ள சிவபெருமான் உடைய பூப்போன்ற கழல்கள் வெற்றியில் திகழ்வதாக.

கைகளைக் கூப்பி வணங்குபவர்களுடைய உள்ளம் நெக்குருகு வதற்குக் காரணமாகிய மன்னருடைய கழல்கள் வெல்லுவதாக.

சிரம் தாழ்த்திச் சேவிப்பவர்களை மேன்நிலைக்கு உயர்த்தும் அழியாப் புகழுடைய அரனார் கழல்கள் வெல்வதாக.

இறைவனுடைய அடிகள் நம்மைக் காப்பதாக. ஈசனுடைய அடிகள் எம்மைக் காப்பதாக. ஒளி திகழும் மேனிப் பெருமானுடைய அடிகள் காப்பதாக. சிவபெருமானுடைய செவ்வடிகள் காப்பதாக. அன்பினில் விளங்கும் மாசிலாதவருடைய மலரடிகள் காப்பதாக.

வஞ்சைப் பிறவியை வஞ்சிக்கும் வள்ளலுடைய அடிகள் நம்மைக் காப்பதாக.

அழகு மிக்க திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் தேவனுடைய திருவடிகள் காப்பதாக.

தெவிட்டாத தேனருவி சிந்தும் மலை போலும் மாதேவர் நம்மைக் காப்பதாக.

சிவபெருமான் முழுமுதற் கடவுள். அப்பெருமான் என்னுடைய சிந்தையில் தெவிட்டாத தெள்ளமுதாகத் திகழ்பவர். அப்பெருமானுடைய திருவருள் துணை கொண்டு அவருடைய திருவடிகளை வணங்குவதால் என்னுடைய சிந்தை மகிழ்ச்சியில் திளைக்கும்.

திருவடி வழிபாட்டினோடு திருவாசகம் தேனினும் இனிமையாகத் தித்தித்துத் திகழும்.

## 04

எமது கண்கள் இரண்டும் சிவபெருமானுடைய வீரக் கழல்களைக் கண்டு களிப்பன ஆகட்டும்.

எமது கைகள் இரண்டும் நாராயணன் நாடி நாடொணாத அத் திருவடிகள் இரண்டையும் கூப்பி வணங்குவன ஆகட்டும்.

**"கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு**
**களிப்பன ஆகாதே**
**மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்**
**வணங்குதும் ஆகாதே"**

என்னும் திருவாசக மணி வாக்குகள் சீவோபாதி

ஒழிதல் என்னும் தலைப்பில் திருவாசகத் தேனில் அமைந்த முதலாவது திருப்படை ஆட்சியில் இருப்பன. அவை சிவபெருமானுடைய கழலடிக் காட்சியினையும் வணக்கத்தையும் தெரிவிப்பன. கண்களுக்கும் கைகளுக்கும் கருத்திற்கும் நல்விருந்தாக நயப்பன.

சிவபெருமானுக்குரியன அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திறத் திருமேனிகளாகும். உருவத் திருமேனியில் கழல் இணைகள் போன்று ஏனைய பொலிவோடும் திகழ்தல் வெளிப்படை. அங்ஙனம் அமையினும் எம்பெருமானுடைய சிந்திப்பரியன திருவடிப் பெருமை யாதலால் பாத மலர்கள் பரிந்து பாடப் பெறுவன.

சீவன் பிறவியில் புகுவதற்கு முன்பிருந்து சிவமாகும் தகுதியைச் சார்தல் வரையிலான இன்பங்களையும் அனைத்துச் செல்வங்களையும் அருளவல்லது சரணகமலாலயங்களே ஆகும். அதனால் ஈசனுடைய இணையடிப் பெருமை சொற்பதத்துள் சுருங்குவன அல்ல.

**தாடந் தளிக்குந் தலைவனே சற்குரு**
**தாடந்து தன்னை யறியத் தரவல்லோன்**
**தாடந்து தத்துவா நீதத்துச் சார் சீவன்**
**தாடந்து பாசந் தணிக்கு மவன் சத்தே**
என்பது திருமந்திரம் (2049)

தலைவன் தாளைச் சென்று கூடுவதற்கு ஓர் ஆன்மாவாகிய நாயகி என்ன பாடு எல்லாம் பட்டாள்.

சித்தம் அழகிய ஒரு கன்னிப் பெண்ணானவள் முன்னதாகச் சிவபெருமானுடைய திருநாமத்தைக் கேட்டறிந்தாள். ஆர்வம் மீதூர மூர்த்தியாகிய அப்பெருமான் அமரும் தன்மையைக் கேட்டு அறிந்தாள்.

மேலும் ஆர்வம் மீதூர அப்பெருமானுடைய அரிய ஊரை வினாவித் தெரிந்து கொண்டாள்.

நாமம் வினாவி, அமரும் வண்ணம் வினாவி, ஊரை உசாவி, அத்தனிடத்தில் அன்புப் பிச்சியான நங்கை பெற்ற அன்னையை அகன்றாள்; பேணும் பிதாவையும் புறகிட்டாள். சுற்றம், சூழல், வளர்விடம், வாழ்விடம், பழகும் பண்டங்கள் பாத்திரங்கள், ஆசாரம் அத்தனையும் அன்றைய நாளில் நீத்தாள். அகலிடத்தை அகன்றாள்.

தன்னையும் மறந்தாள்; தன்னுடைய நாமத்தையும் மறந்தாள். தலைவனுடைய திருத்தாளைச் சென்றடைதலையே குறிக்கோளாகக் கொண்டாள்; பொன்னனையாள் பொற்பாதம் பொருந்தப் புறப்பட்டாள்.

அந்த அரும்பொருளை நாவேந்தர் நற்றிருத் தாண்டகமாக திருவாரூர்த் திருப்பதிகத்தில் தீந்தமிழாகத் தரும் அழகே அழகு.

**முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்**
**தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே –**
(ஆறாம் திருமுறை)

நங்கை ஞானநெறி நின்றமைக்கு இத்திருத்தாண்டகம் சிறந்த எடுத்துக்காட்டு. கேட்டாள் என்பதனால் கேட்டலும், நீத்தாள் என்பதனால் சிந்தித்தலும், தன்நாமம் கெட்டாள் என்பதனால் தெளிதலும் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே என்பதனால் நிட்டை கூடலும் உள்ளீட்டுப் பொருளாகும்.

தலைவனுடைய திருத்தாளைச் சென்று கூடும் தலைப்பட்ட அன்பிற்கு-தன்பற்றோ, தன் அகப்பற்றோ, அல்லது தன்னுடைய புறப்பற்றோ – அன்றி அவை மூன்றும் ஒருவழிப்பட்ட உணர்வு இச்சையோ உயர்வாகவோ ஒப்பாகவோ மாட்டாது என்னும் தத்துவம் இதனால் புலப்படுமாறு காண்க.

பாசஞானம் பசுஞானங்களால் அடைய ஒண்ணாத பதிஞானம் இதுவாகும். பதிஞானம் ஒன்றே வீடுபேறான முத்தி இன்பத்தைத் தரவல்லது.

திருவாசகத்தில் திருவெம்பாவை மார்கழி நீராடலுக்கான ஒரு தனித்துவமான திருப்பதிகம். திருவெம்பாவை இருபது பாடல்களைக் கொண்டது. திருவெம்பாவை ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ் சோதி என்று இறைவனுடைய அருவத்திருமேனிப் பரவலோடு ஆரம்பமாகின்றது.

"**போற்றி அருளுக**" என்று ஆரம்பமாகும் இருபதாம் பாடல் இறைவனுடைய சிந்திப்பரிய திருவடிப் பெருமைச் சிந்தனையோடு வந்தனை செய்து வணங்குகின்றது.

இமைப்பொழுதும் நெஞ்சை விட்டு நீங்காத நின்மலனைப் பற்றியும் மும்மலத்தில் மூழ்கிக் கிடக்கும் ஆருயிரைப் பற்றியும் சீவன் சிவனாகும் அத்துவிதக் கலப்பையும் திருவாசகம் தெளிவுபடுத்தும்.

வேறு எங்கும் எதிலும் கண்டு அறிய அரிய திருவடி மேன்மைப் பாடல் திருவடியில் முப்பொருள் உண்மையை உணர்த்தும் நிறம் என்றும் போற்றத் தகும்.

இறைவனுடைய திருப்பாதம் என்றும் வாழ்வதாக நம்மைத் திருவடி நீழலில் வாழ்விப்பதாக.

## 05

"போற்றி அருளுக ...." என்னும் திருவெம்பாவைப் பாடல் புகலும் பொருள் இறைவனுடைய திருவடிப் பெருமையின் சிந்தனைத்தேன் ஆற்று ஊற்று உற்று நோக்குங்கால் உண்மை வெளிப்படும்.

அரும் பெருஞ் சோதியே! நின்னுடைய எவ்வகைத் தோற்றங்கட்கும் ஆதியாக உள்ள திருவடி மலர்க்ள் நம்மைக் காப்பதாக.

நின்னுடைய தோற்றங்கள் எல்லாவற்றிற்கும் முடிவாகவுள்ள செந்நிறம் பொருந்திய தளிரனைய திருவடிகள் எம்மைக் காத்தருள்வதாக.

நின்னுடைய எல்லா உயிர்களுக்கும் பிறப்பிடமாகவுள்ள பொன் போன்ற திருவடிகளைப் போற்றுதல் செய்கின்றோம்.

தோற்றிய உயிர்களுக்கு எல்லாம் பொருந்துவனவான போக போக்கியங்களை அருளும் நின்னுடைய பொலிவினையுடைய கழல்களைக் கை தொழுகின்றோம்.

அனைத்து உயிர்களினுடைய ஒழுக்கத்திற்கு உறைவிடமாக உள்ள நின்னுடைய இணையடிகளை இறைஞ்சுகின்றோம்.

நாராயணன் நான்முகன் நாடற்கரிய நின்னுடைய நற்பதங்களாகிய செந்தாமரை மலரடிகளைச் சேவிக்கின்றோம்.

எம்முடைய முத்தி இன்பத்தின் பொருட்டு எளிதாக வந்து ஆண்டு கொண்டருளும் நின்னுடைய பொன்மலரடிகளைப் போற்றுதல் செய்கின்றோம்.

நாம் மகிழும் மார்கழி நீராடலுக்கு வந்தனங்கள்

எம்பெருமானுடைய திருவடி இணைகள் அனைத்து சீவர்களுக்கும் ஆதியானது; அந்தமானது; தோற்றமானது; போகமானது; முடிவானது. பிரமவிட்ணுக்கள் அறிய ஒண்ணாதது. பக்குவான்மாக்களுக்குப் பரகதிப் பேறு அருளுவது.

இவ்வாறான பரமனுடைய பாதார விந்தங்களைச் சிந்தித்து வந்தித்து பந்தங்களைப் போற்றிப் பரகதிப் பயன் பெறுதல் சிற்றுயிரின் பெருங் கடனாகும்.

இறைவனுடைய சிந்தனைக்கு எட்டாத பெருமைமிக்க திருவடி களை மாணிக்கவாசகர் எப்படி எல்லாம் புகழ்ந்து மனங் குழைகின்றார்.

பாதமலர், செந்தளிர்கள், பொற்பாதம், பூங்கழல்கள், இணையடிகள், புண்டரிகம், பொன்மலர்கள் இவை போல்வன இன்னும் எத்தனையோ வண்ணமாக முத்திக்கு வித்தாகும் பத்தி நெறியைப் பரப்புகின்றார். ஊழிமலி திருவாதவூரர்.

நாமும் ஒரு முறை அத்திருப்பாடல் மூலமாக சிவபெருமானுடைய திருவடிகளைப் போற்றுவோமாக.

**போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்**
**போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்**
**போற்றிஎல் லாஉ யிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்**
**போற்றிஎல் லாஉ யிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்**
**போற்றிஎல் லாஉ யிர்க்கும் ஈறாம் இணையடிகள்**
**போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்**
**போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்**
**போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.**

பத்தி உணர்வு பரந்த வெள்ளம் போல் பாய்கின்ற இத்திருப்பாடலில் மேலுமோர் நுட்பம் நோக்கத்தக்கது.

இறைவன் சட உலகிற்கும் சிந்து உலகிற்கும் ஆதியும் அந்தமுமாக விளங்குபவன். ஆன்மாக்கள் முத்தொழில் வயப்படுவன. ஆணவத்தில் ஆன்மா அழுந்தும். மறைப்புச் சத்தியில் ஆன்மா மயங்கும். ஆடுந் திருவடி ஐந்தொழில் இயற்றும் தன்மைகளையும் கண்டுகளிக்கலாம்.

அருமைக்கும் பெருமைக்கும் அறிதற்கரிய திருவடியை வழுந்துமாறு அரச வண்டை ஆதரிக்கின்றார் வாதவூர் அடிகளார்.

"அரச வண்டே! விடையேறும் பெருமானுடைய வித்தகத் திருவடியை தாமரைத் தவிசுக் கடவுள் அறிய மாட்டான். தேவர்கோன் தெரியமாட்டான். அழகிய நா இருக்கையளான கலைமகள் காணமாட்டாள். திருமாலும் தெளியமாட்டான்.

நான்கு வாக்குகளும் நன்குணர மாட்டா. காளைமேல் காட்சி தரும் ஒளி வடிவான உருத்திரனும் உணரமாட்டான். தேவர்களும் அறியமாட்டார் கள். சேவேறு பெருமானுடைய திருவடியை நீ சென்று உன்னுடைய வாயினால் ஊதக்கடவாய்.

**பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த**
**நாவேறு செவ்வியும் நாரணனும் நான் மறையும்**
**மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்**
**சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

(கோத்தும்பி—1)

## 06

மேலே பேசப்பட்டவர்கள் எல்லோரும் மேலான தேவர்கள். அவர்களாலேயே, தேவர்கள் எல்லோருக்கும் தேவரான மகாதேவருடைய மலரடிகள் அறிதற்கு அரியன. அத்தேவர் தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன் பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே மெய்த்தேவர் தேவர் திருவடியை ஆரறியவல்லார்?

திருநாவுக்கரசுநாயனார் அச்சேவடிகளை அறிவார்; சிவபெருமானுடைய ஆரும் கண்டு அறியாதன; ஆருங் கண்டறியாத திருப்பாதங்களை நான் கண்டேன் என்று அழுத்தந் திருத்தமாகப் பாடுகின்றார். திருவையாறு திருப்பதிகத்தில் காந்தாரம் பண்ணில் பாடிக் காட்டுகின்றார்.

**"கண்டேனவர் திருப்பாதங்**
**கண்டறியா தனகண்டேன்"**

திருநாவுக்கரசு நாயனார் இறைவனுடைய திருவடிகளைத் தேடிக் கண்டு கொண்டார். தேடாமலே அத்திருவடிகளைக் கண்டவன் ஒருவன் இவ்வுலகத்தில் உளன். அவன் இயமன் என்பான்.

அயன் அன்னப் பறவை வடிவம் எடுத்து ஆகாயத்தில் பறந்து சென்று இறைவனுடைய திருமுடியினைக் கண்டிலன். திருமால் பன்றி வடிவங் கொண்டு இப்பூமியை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அகழ்ந்து சென்று அலுத்தும் இறைவனுடைய திருவடிகளைக் காணப்பெற்றிலன். இருவரும் மனம் மயங்கினார்கள்.

சிவபூசையில் தம்மை அர்ப்பணித்திருந்த மார்க்கண்டர் மீது பாசத்தை வீசுவதற்குச் சென்றான் காலன். பாசத்தை வீசிப் பார் மீது ஆவியை இழந்தான் அந்தகன். எம்பெருமான் அறிதற்கரிய அரிய பாதங்களால் இயமனை உதைத்த பொழுதில் இறைவனுடைய கழலடிகளைக் காலன் கண்டு கொண்டான் என்ற ஓர் உண்மையையும் வாக்கின் மன்னவனார் மறைக்காமல் மறவாது பாடுகின்றார். நாலாம் திருமுறையில் காணப்படும் அப்பாமாலைப் பாடல் இதுவாகும்.

**மேலு மறிந்திலன் நான்முகன்**
**மேற்சென்று கீழிடந்து**
**மாலு மறிந்திலன் மாலுற்ற**
**தேவழி பாடுசெய்யும்**
**பாலன் மிசைச்சென்று பாசம்**
**விசிறி மறிந்த சிந்தைக்**
**காலன் அறிந்தான் அறிதற்**
**கரியான் கழலடியே.**

கால காலனுடைய கண்டறியாத காலடியைக் காலன் காணும் பேறு பெற்றான். ஒரு காலத்தில் அக்காலின் ஒரு திருவிரல் நுனி செய்த அற்புதம் தான் என்னே.''

ஒரு சமயம் கயிலை மலையில் கண்ணுதலான் தியானத்தில் திகழ்ந்திருந்தார். அருகாக உமை அம்மையார் அமர்ந்திருந்தார். அவ்வேளை இராவணன் புட்பக விமானத்தில் ஆகாய மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தான். தன்வழிச் செல்ல மலை ஒன்று தடுக்கின்றதே என்று தருக்கடைந்தான் இராவணன். இராவணன் மலையைத் தூக்கி அப்பால் வைத்துவிட்டுத் தன் பயணத்தை மேற்கொள்ளக் கருதினான். புட்பக விமானத்திலிருந்தும் பூமிக்கு வந்தான். இராவணன் தனது தவவலிமையைத் துணைகொண்டு தோளினால் கயிலையைத் தூக்க முனைந்தான். மலையினுடைய அசைவைக் கண்டு மலைமகள் மனம் மறுகினார். அச்சந் தவிர அருகாக அமர்ந்திருந்த ஐயனை அணைத்துக் கொண்டார். அத்தன் கண்களை விழித்து நோக்கினார். இராவணன் கயிலையைப் பெயர்ப்பதைக் கண்ணுற்றார். புன்னகை புரிந்தார். தமது திருப்பாதத் திருப்பெரு விரலைச் சிறிது அழுத்தினார். கயிலை மலையினுள் நசுஞ்கினான் இராவணன்.

கயிலையைப் பெயர்க்க வந்த இராவணன் கைலாச வாகனனானான். அலர்ந்த இராவணன் உலர்ந்து போனான்.

கைலாசத்தை அமுத்தி இராவணனை அமுங்க வைத்த திருவிரலைக் கொண்ட அழகிய திருவடித் தாமரைகளை என் உச்சியின் மீது சூட்டினார் உலக மூர்த்தி. வெண்ணிலா முகிழ்த்த மூர்த்தி என்னுடைய சிரசின் மீது வைத்த பாதங்கள் வருந்துமே என்று நான் வருந்தினேன். மனம் ஒடுங்கினேன் என்று திருநாவுக்கரசு நாயனார் பாடும் பண் சுமந்த பாடலின் பரிசு தான் என்னே!

**உய்த்தகா லுதயத் தும்பர்**
**உமையவள் நடுக்கந் தீர**
**வைத்தகா லரக்க னோதன்**
**வான்முடி தனக்கு நேர்ந்தான்**
**மொய்த்தகால் முகிழ்வெண் திங்கள்**
**மூர்த்தியெ னுச்சி தன்மேல்**
**வைத்தகால் வருந்து மென்று**
**வாடிநான் ஒடுங்கி னேனே.** *(நாலாம் திருமுறை)*

கண்ணுதல் பெருமானுடைய கால்கள் கயிலை மலையைக் கலங்க வைத்தது. அதே கால்களைத் திருநாவுக்கரசு நாயனார் தலையில் தாங்கிக் கொண்டார். கழலடிகள் கன்றிவிடுமே என்று கலங்குகின்றார் கலைவாய்மைக் காவலனார். கைலை மலையினும் பார்க்கக் கண்ணுதல் அன்பர் தலையானது கனதியானதா?

கடினமும் மென்மையும் திருவடியைத் தாங்கும் உள்ள அன்பால் உணர்வதல்லாமல் கருவி கொண்டு அளவிட்டுக் கணிப்பதன்று.

**"மூர்த்தியெ னுச்சி தன்மேல்**
**வைத்தகால் வருந்து மென்று**
**வாடிநான் ஒடுங்கி னேனே**

**சுவை மிக்க அருள் தமிழின்பம் தான்**
**இருந்தவாறு என்னே!!**

## 07

மோப்பக் குழையும் அணிச்சத்திலும் முகந் திரிந்து நோக்கக் குழையும் விருந்தினும் நொய்மை மிக்கது அன்பு. அடியவர்களுக்கு அண்ணலாருடைய அருள் திருவடி என்று ஆளுடைய அரசுகள் காட்டக் கண்டோம்.

சிந்திப்பரிய அத்திருவடிப் பெருமையை நன்கு உணர்ந்து கொண்டவர் சுந்தரமூர்த்தி நாயனார். நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தைப் பாடியருளிய சந்தர்ப்பத்தில் திருவாரூர் திருக்கோயிலுக்குச் சென்றருளினோர் தேவாசிரியன் மண்டபத்தில் கூட்டமாக அமர்ந்திருந்த அடியார் திருக்கூட்டத்தை கண்ணுற்றார். நான் இந்த அடியவர்களுக்கு அடியேனாவேன் என்னும் அன்பு அவருடைய திருவுள்ளத்தில் மேலிட்டு எழுந்தது. வன்றொண்டர் உட்கோபுரத் திருவாயிலை வணங்கினார். கோபுரத்தில் கட்டப் பெற்ற கொடிகள் காற்றின் அசைவினால் படபடத்தன. அது அவர் எண்ணத்திற்குத் திருவருள் வெற்றி கிட்டுவதாக விளங்கியது. நாயனார் உச்சியில் கூப்பிய கரத்தினராக உள்ளே புகுந்தார்.

பூங்கோயிலில் அமர்ந்தருளிய புற்றிடங் கொண்ட புராதனரைப் போற்றிப் புகழ்ந்தார். பொற்பாதங்களில் அன்பு பெருக்கினார். தம்பிரான் தோழர் தியாகேசப் பெருமானைச் சிந்தனை செய்தார். ஆரா அன்பால் ஆதரித்தார். பேரா அன்பு பெருக்கினார். வாராப் பரமானந்தம் வரப்பெற்றார். வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்தார்.

நாயனாருக்குத் தியாகேசப் பெருமான் கண்ணெதிரே காட்சி கொடுத்தருளினார். மணமும் அழகும் மிக்க கொன்றை மாலை கண்டார். கண்ணீர் சிந்தினார். தியாகேசப் பெருமானை வணங்கினார். திருவடி மலர்களைத் தமது சிரசின் மேலாகத் தாங்கிக் கொண்டார்.

தாம் இரண்டு கண்களாலும் கண்டு களித்த திருவடித் தாமரை களைப் பின்வருமாறு செப்புகின்றார்.

"என் எதிரே தாமாகப் போந்த பொற் பாதங்கள் அழிவில்லாத பெருஞ் செல்வத்தை அளிப்பன. அளவில்லாத வேதங்களாகிய வண்டுகள் மொய்த்து ஒலிப்பன. அன்பினால் சிந்திப்பாரது சிந்தையில் தேனை முந்திச் சொரிவன. உள்ளச் செந்தாமரையில் நல்ல பரமானந்தம் ஊற்றெடுப்பன. தகுதி இல்லாத என் தரத்தும் தருவன. தாமாகவே எதிர் போந்து நிற்பன.

**மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்ந்**
**தன்பர் சிந்தை யலர்ந்தசெந் தாமரை**
**நன்பெ ரும்பர மானந்த நன்மது**
**என்ற ரத்து மளித்தெதிர் நின்றன.**

உலகத்தை உய்வடையச் செய்வன. ஐந்து தொழிற் கூத்தை இயற்றுவன. அம்பலத்தே ஆடுவன. கூற்றுவனைக் கூறுபடுத்தக் கோபித்தன. ஏலவார் குழலா ளுமை நங்கை என்றும் ஏத்துவன. கரந்தரும் பயன் இது எனக் கருதி உபசரித்து தடவச் சிவந்து காட்டின நின் திருவடித் தாமரைகள்.

**ஞால முய்ய நடமன்று ளாடின**
**கால னாருயிர் மாளக் கறுத்தன**
**மாலை தாழ்குழன் மாமலை யாள்செங்கை**
**சீல மாக வருடச் சிவந்தன.**

நீதியில் நிற்கும் தவமுடையவர்களுடைய நெஞ்சில் நிலைத்து நிற்பன. செம்பொற் சோதியாகத் திகழ்வன. அறியாதவர்களுக்கும் உண்மையை உணர்த்துவன. சோதி, சுடர், விளக்கு, சோதியுட் சோதியாகத் திகழ்வன. ஆதிநாராயணன் அறிய ஒண்ணாத அளவினை யுடையன. பூத நாத நின் புண்டரிகப் பதம்.

**நீதி மாதவர் நெஞ்சிற் பொலிந்தன**
**வேதி யாதவர் தம்மைவே திப்பன**
**சோதி யாயெழுஞ் சோதியுட் சோதிய**
**ஆதி மாலவன் காணா அளவின**

"பூத நாதருடைய திருவடி மலர்கள் வேதங்களாகிய யானையின் மீது நிற்பன. அறியாமை உடைய அடியேன் செய்த பிழைகளைப் பொறுப்பன. என்னை ஆள்வன. மேல் வருங் குற்றங்களை எல்லாம் போக்கவும் உடன்பட்டு நின்றன.

**வேத வாரண மேற்கொண் டிருந்தன**
**பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன**
**ஏத மானவை தீர்க்க விசைந்தன**
**பூத நாதநின் புண்டரீ கப்பதம்.**

இந்நான்கு செய்யுள்களும் அருண்மொழித் தேவரால் அருளிச் செய்யப் பெற்றவை.

பெரிய புராணம் - தடுத்தாட் கொண்ட புராணத்தில் இடம் பெறுவன.

பூங்கோயிலில் அமர்ந்த புற்றிடங் கொண்ட பிரானுடைய பூங்கழலின் பொற்பினைச் சுந்தரமூர்த்தி நாயனார் வாயிலாக உலகவர் உணர்ந்து உய்ய உரைப்பன.

சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருவடிப் பூசையின் தூய்மை திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்தை சைவ உலகிற்குத் தந்த பெருங் கருணைத் திறம் இது.

## 08

என்ஞான்றும் மறக்கலாகாத மகத்தான உண்மை இது. சிவபெருமானுடைய திருவடியே சக்தியினுடைய வியாபகம். திருவடியே இறைவனுடைய திருவருள். திருவடியே இறைவனுடைய கடல் போன்ற கருணை. திருவடியே சிற்றுயிரை முத்தியில் சேர்ப்பது. திருவடியே முன்னின்று காப்பது. திருவடியே சிந்திப்பார்க்கு முத்தித் தேனைச் சொரிவது. திருவடியே ஞானமும் கல்வியும். திருவடியே சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு. திருவடியே கேவலத்தில் அழுந்துவோரை வேறுபடுத்திச் சகலத்தில் சேர்ப்பது. திருவடியே ஆள்வன. திருவடியே பரமானந்தம். திருவடியே திருப்பெருகு சிவமெய்ஞானம். திருவடியே நன்னெறி காட்டுமே.

அத்திருவடிப் பெருமை ஞானம் உணரான் இராவணன். மன்னவன் மகாதேவரை மதியான். தனது தவவலிமையினாலும் மனோ வலிமையினாலும் இறுமாப்புற்று மலையை எடுத்தான். உமாபதி தமது திருவடிப் பெருவிரலினால் சிறிது உதகரணஞ் செய்தருளினார். மன்னன் மாண்பிழந்தான். கயிலை மலையின் கீழ் அகப்பட்டு அலைந்து உலைந்து வீரம் தொலைந்தான். இச்செய்தியினை முன்னரும் கண்டோம்.

திருநாவுக்கரசு நாயனார் இறைவனுடைய ஆண்மையினையும் இராவணன் மாண்பிழந்தமையையும் இருவேறு திருப்பதிகங்களில் வைத்துப் பாடியருளினார். அச்செந்நெறி நின்று நாமும் அவ்வுண்மையை ஈரிரு இடங்களில் இயம்ப வேண்டுவதாயிற்று. எல்லாம் சிவபெருமானுடைய திருவடிப் பெருமையைக் கலக்கமின்றித் துலக்கமுற விளக்கும் பொருட்டேயாம்.

திருநாவுக்கரசு நாயனார் திருமறைக்காடு திருநேரிசைத் திருப்பதிகப் பத்துத் தேவாரத்திலும் மகாதேவருடைய மாண்பைத் துலங்கப் பாடியருள்வார். இறுமாப்பினால் ஏணழிந்த இராவணனுடைய இழிவையும் பண் சுமக்க எடுத்துப் பாடியருள்வார்.

அதே போலத் திருக்கயிலாய நேரிசைத் திருப்பதிகப் பத்துத் தேவாரப் பாடல்களிலும் பத்திமை நெறிமையினால் பாடுவார். உதாரணத்திற்கு ஓரொன்றும் ஏனைய பதிகங்களில் இரண்டுமாக நான்கு பாமாலைப் பாடல்களைத் தருகின்றோம்.

*திருமறைக்காடு — திருநேரிசை*

பத்துவாய் இரட்டிக் கைக
ளுடையன்மா வலிய னென்று
பொத்திவாய் தீமை செய்த
பொருவலி அரக்கர் கோனைக்
கத்திவாய் கதற அன்று
கால்விர லூன்றி யிட்டார்
முத்துவாய்த் திரைகள் மோதும்
முதுமறைக் காட னாரே

*திருக்கயிலாயம் - திருநேரிசை*

கடுத்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
எடுத்தலும் மங்கை அஞ்ச
இறையவ னிறையே நக்கு
நொடிப்பள விரலா லூன்ற
நோவது மலறி யிட்டான்
மடித்திறை யுன்றி னானேல்
மறித்து நோக் கில்லை யன்றே.

தசபுராணத் திருப்பதிகத்தில் பதினோராம் பாடல் இது.

*பண் :- பழம்பஞ்சுரம்*

கடுகிய தேர்செ லாது கயிலாய
மீது கருதேலுன் வீரம் ஒழிநீ
முடுகுவ தன்று தன்ம மென நின்று
பாகன் மொழிவானை நன்று முனியா
விடுவிடு வென்று சென்று விரைவுற்
றரக்கன் வரையுற் றெடுக்க முடிதோள்
நெடுநெடு இற்று வீழ விரலுற்ற
பாதம் நினைவுற்ற தென்றன் மனனே.

*(நாலாம் திருமுறை)*

ஐந்தாம் திருமுறையில் அமைந்த பூமாலை போலப் போற்றிய பாமாலைப் பாடல் ஒன்று. சித்தத்தொகை என்னும் தலைப்பில் காணலாம். திருக்குறுந்தொகைப் பண்ணைச் சார்ந்தது. முப்பதாம் தேவாரம் இது :-

**இலங்கை மன்னனை ஈரைந்து பத்துமன்**
**நலங்க லோடுட னேசெல வூன்றிய**
**நலங்கொள் சேவடி நாடொறும் நாடொறும்**
**வலங்கொண் டேத்துவார் வானுல காள்வரே.**

திருநாவுக்கரசு நாயனாருடைய திருமுறைப் பாமாலையில் பூமலர்கள் ஏராளம் உள - இவை போல்வன. அவை யாவையும் ஆங்குக் கண்டறிந்து கொள்க, யாவும் எம்பெருமானுடைய திருவடிப் பெருவிரல் செய்த சின்னஞ் சிறிய திருவிளையாடலாகும்.

## 09

என்ன தான் மனத்தை அடக்கி, அன்பின் வழி நின்று, செம்மை தரும் சிவநெறியில் ஒழுக ஆசைப்பட்டாலும் அது விடாது. அது தான் தான் என்று முன் வந்து முட்டுக்கட்டை போடும். முட்டுக்கட்டை போட்டாலும் பரவாயில்லை. அது முட்டுக்கட்டை தான் என்றும் வெளிக்காட்டிக் கொள்ளாது.

அது என்பது ஆணவம். ஆணவம் சிவபூசையினுள் கரடி புகுந்தது போல நுழைந்து விடும்.

எங்கும் சரி எதிலும் சரி, எந்தச் சந்தர்ப்பத்திலும் சரி நான் நான் என்று மார்பு தட்டும். நல்லனவற்றை நாசம் பண்ணி விடும். ஆணவம் என்னும் முனைப்பு இருளிலும் பார்க்கக் கொடுமை மிக்கது. இருள் பிற பொருட்களை மறைத்தாலும் தன்னையாவது காட்டும். தன்னை அறியத் தருவது இருள் செய்யும் பேருதவி எனலாம். ஆணவம் இருக்கிறதே! அது தன்னையும் வெளிக்காட்டாது. செய்யும் செயலிற்குக் காரண கர்த்தாவையும் தன்னுள் மறைத்துக் கொள்ளும். அதனால் இருளிலும் பார்க்க ஆணவம் கொடிது என்பார்கள்.

ஞானவான்கள், மதம் கொண்ட யானையை மடக்கிக் கட்டுவது போல ஆணவத்தை அடக்கி விடுவார்கள். மெய்யன்பை மேன் மேலும் பெருக்கினால் ஆணவம் தன்வலி இழக்கும். பார்ப்பான் பசு ஐந்தும் பாலாகச் சொரிவது போல இன்பமாகச் சொரியும்.

வள்ளுவப் பெருந்தகையார் அன்பினுடைய அழிவற்ற ஆற்றலினை அறிந்து கொண்டாராதலினால், அன்பு அறத்தோடு சார்வது அன்று — மறத்திற்கும் அன்பு துணை செய்யும் என்பர்.

**அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்**
**மறத்திற்கு மஃதே துணை.** (76)

ஒருவரிடத்தில் கள்ளம் இல்லாத அன்பு வெள்ளம் உள்ளத்தில் நின்றும் ஊற்றுக் கொள்ளுமாயின் ஆணவவலிமை அந்த வெள்ளத்தினோடு அள்ளுண்டு போகும். அல்லாமல் ஆணவத்தால் வேறு என்ன தான் செய்ய முடியும்?

'**அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்**' என்று அதிசய வினாவை முன் வைக்கின்றார். வான் புகழ் கொண்ட வள்ளுவனார். என்பையும் நெகிழ்விக்கும் அன்பு கைவரப் பெற்றால் ஆணவம் மாத்திரமன்றி அல்லனவும் தாழிட்டுத் தடுக்க மாட்டாது.

**அன்பிற்கு முண்டோ அடைக்குந்தா ழார்வலர்**
**புன்கணீர் பூச றரும்** (71)

மனுநீதிச் சோழனிடத்தில் அன்பு வெள்ளம் மடை திறந்தது. ஆணவ அடைப்பை உடைத்தது. ஆவின் அருந்துயர் அறிந்தான். அழுங்குதல் இன்றிச் செயற் கருஞ் செயலைச் செய்தான்.

ஆ படு கன்றுப் பிரிவுத் துயர் பார்த்து அன்பு செய்தான். தான் அத்துயர் கொள்ள விரும்பினான். தனது அரசுரிமைத் தனிக் கன்றைப் பலியிட்டான்.

மனு வேந்தன் தன் மைந்தன் - மருமம் தன் தேராழியுற வூர்ந்தான்.

அது அறச் செய்கையா — அல்லது மறமா?

அது மறம் ஆகாது — அறத்தையே சாரும் ஆணவத்திற்கு அப்பாற் பட்ட தன்னலமற்ற தகைசால் அன்பு.

தமிழன் கண்ட அன்பு நெறி வழக்கின் பாற்படும்.

தன்னுயிர் போல மன்னுயிர் பேணும் உள்ளப் பண்பின் உயர் நிலை.

சேக்கிழார்ப் பெருந்தகை உலகத்தவரைப் பார்த்து உசாவுவது போல உரைக்கின்றார்.

" **அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோ தான்.** "

அரசன் சுமக்கும் இராச்சிய பாரம் கனமானதோ அல்லதேல் காற்றுப் போன்றதோ"

அன்பின் வழியது உயர்நிலை. அது உணர்ந்தார்க்கு உணரலாம் தன்மையது. அன்றி உணர்வு இல்லாதவர்க்கு ஒன்றும் இல்லையாம். உலகப் பொது மறையும் அதனை ஒப்புக் கொள்வது போல அறிவு ஒளி பரப்பும் திருக்குறள் இது :

**அன்பின் வழிய துயிர்நிலை யஃ திலார்க்**
**கென்புதோல் போர்த்த வுடம்பு** (80)

இவ்வளவும் சொல்ல வந்தது திருவடிப் பெருமையும் அன்பின் வழியது என்பதைக் காட்டவே. அன்பின் வழி நின்று திருவடிப் பெருமையை உணர்த்த ஒரு கதையை எடுத்துக்காட்டுவாம்.

## 10

மண் சுமந்த மதுரை நாயகர் அன்பில் பெரிய அடியவனுக்காகக் கான் மாறி ஆடின வரலாறு அது. திருவிளையாடற் புராணத்தில் நிகழ்ந்த திருவிளையாடலுள் இருப்பது நான்காவது இது.

திருவிளையாடலைத் தெரிந்துகொள்வதற்கு முன்னதாக ஒரு கருத்தைக் கவனத்தில் கொள்வது நல்விளைவான பயனை நல்கும்.

திருநாவுக்கரசு நாயனார் உலகத்தவரைப் பார்த்து உரிமையோடு உரை செய்கின்றார்.

"சிவபெருமான் அனுப்பிரமாணம் அளவு பெருவிரல் ஊன்றினான். இராவணன் வக்கிர தந்தப் பற்கள் விளங்க வாயை அங்காந்தான். மலை போன்ற தோளுடைய மன்னன் மலையின் கீழ் அலறி வீழ்ந்தான். இருவரும் ஒருவரான திருவுருவங் கொண்ட அந்த வள்ளலாராகிய சிவபெருமானுடைய திருவடியைத் தலையில் தாங்கிச் சுமக்கின்றேன். பாருங்கள் - பார் எங்கும் நான் திரிகின்றேன்."

என்று தமது திருவருட்செய்கையைப் பகிரங்கப்படுத்தும் பண்பாட்டை ஒரு தரம் பாட்டில் படித்துப் பாருங்கள் :-

பெருவிரல் இறைதா ஹுன்றப்
பிறையெயி றிலங்க அங்காந்
தருவரை அனைய தோளான்
அரக்கனன் றலறி வீழ்ந்தான்
இருவரும் ஒருவ னாய
உருவமங் குடைய வள்ளல்
திருவடி சுமந்து கொண்டு
காண்களான் றிரியு மாறே-

*(நாலாம் திருமுறை)*

அரனாருடைய அருட்கருணையையும் இராவணனுடைய அடாத செயலையும் அந்த நிகழ்வை நினைத்து தாம் படும் துயர்ப்பாட்டையும் திருநாவுக்கரசு நாயனார் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பண் சுமக்கப் பாடும் தேவாரம் இது :-

உமாபதி உமையம்மையாருடைய அச்சத்தால் ஏற்பட்ட நடுக்கம் தீரத் திருவுளங் கொண்டார். இராவணனுடைய இருபது தோள்களும் இற்றுப் போனது. சிவபெருமான் தமது கால் பெருவிரலைச் சற்று அசைத்தருளினார். இலங்கை வேந்தனைக் கயிலை மலைக் கீழ் அழுத்திய திருப்பாதத்தை என்னுடைய மூர்த்தி என் தலையில் சூட்டியருளினார். திருநல்லூர்ப் பிரானுடைய திருவடி வருந்தும் என்று நான் வருந்தினேன்; ஒடுங்கினேன்.

**உய்த்தகா லுதயத் தும்பர்**
**உமையவள் நடுக்கந் தீர**
**வைத்தகா லரக்க னோதன்**
**வான்முடி தனக்கு நேர்ந்தான்**
**மொய்த்தகான் முகில்வெண் திங்கள்**
**மூர்த்தியெ னுச்சி தன் மேல்**
**வைத்தகால் வருந்து மென்று**
**வாடிநான் ஒடுங்கி னே னே —** *(நாலாம் திருமுறை)*

மலையில் உறையும் மகாதேவருடைய மலரடிகள் மலை மகளாருடைய மனமறுக்கத்தை மாற்றியது. அத்திருவடிகள் மன்னவனுடைய மணி முடிகளை மலையடியில் அமிழ்த்தியது. நல்லூர்ப்பெருமானார் நல்லவாறு அத்திருவடிகளை எனது முடிமேல் நாட்டினார். என்னுடைய முரட்டுத் தலையில் பிரானாருடைய மென்மையான பூப் போன்ற பாதங்கள் பொறுக்கமாட்டாது என்று நான் வாடினேன்; வருந்தினேன்; ஒடுங்கினேன்.

என்னுடைய வாட்டம் ஆட்டங் காணப் பத்தர்கள் பாருங்கள் வள்ளலாருடைய திருவடிகளை நான் திரிகின்றேன்.

திருநாவுக்கரசு நாயனார் தமது உள்ளத்து ஊறும் அன்பின் வெள்ளப் பெருக்கை வெளிப்படுத்தும் சொற்பதங்களின் அற்புதத்தை ஒரு தரம் உற்று நோக்குங்கள் :-

"மூர்த்தி என் உச்சி தன்மேல் வைத்த கால் வருந்தும் என்று வாடி நான் ஒடுங்கினேனே"

**இருவரும் ஒருவ னாய உருவம் அங்குடைய வள்ளல்**
**திருவடி சுமந்து கொண்டு காண்க நான் திரியுமாறே —**

என்று திருநாவுக்கரசு நாயனார் இறைவனுடைய திருவடியின் பெருமையை மதுரவாக்கில் சேர்வாகும் தீந்தமிழில் செப்பும் செம்மை தான் என்னே?

திருவடியைப் பற்றிய சிந்தனை அது. திருவடி மறவாத திரு அது. திருவடியில் அறாத அன்பு அது. திருவடியில் வைத்த இறவாத இன்ப அன்பு அது. திருவடி ஞானத்தைத் தேசம் எல்லாம் உய்ய உணர்த்தும் உன்னத அன்பின் அழகு தான் என்னே."

வாழ்க நாதன் திருவடிகள்.

திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடி அன்பின் சுவையை ஒருவாறு உணரப் பெற்றோம். அது ஒரு வகை. அதே போல மதுரை வெள்ளியம் பலத்தில் ஆடும் ஆனந்தக் கூத்தருடைய திருவடிகள் மீது பாண்டிய நாட்டு வேந்தன் வைத்த பற்றுத் தான் என்னே" அது பிறிதொரு வகையான அன்புச் சுவை.

பாராள் மன்னனுக்குப் பராபரப் பெருமான் பாதங்களில் எழுந்த பரிவு தான் என்னே! பரம் பொருளுடைய பாதங்கள் வலிக்குமே என்று பார்த்திபன் பட்ட படுதுயர் சொல்லும் தரமன்று. சேவடிச் சேவிப்பில் வைத்த செம்மை தான் என்னே!

திருவடியில் செல்லாத அன்பு செலுத்துவதற்கு அந்நிகழ்வு பெருந் துணை நிற்கும்.

## 11

இன்னுயிராம் தன்னுயிரையே காணிக்கையாக்கத் துணிந்து சிவபெருமானுடைய திருவடியில் வைத்த சிவ அன்பினைச் சிந்திக்கச் சிந்திக்க சிந்தை சிலிர்க்கும். அரன் அடியை ஆதரிக்க அன்பு வெள்ளம் அள்ளிச் செல்லும். மனத்தில் மாசு மங்கும். சிவ ஒளி பொங்கும்.

முன்னொரு காலத்தில் இராசசேகரபாண்டியன் இந்நிலவுலகத்தை இராச்சிய பரிபாலனம் செய்து வந்தான். மதுராபுரியில் அவனுடைய இராசதானி இலங்கியது. மன்னன் வெண்கொற்றக்குடை நீழலில்

வீற்றிருந்தான். குடி ஓம்புங் கொள்கையில் அரசன் செங்கோல் வழுவாமல் இறைமையை முறை செய்து வந்தான்.

இராசசேகரபாண்டியன் ஒப்பற்ற மன்றின்கண் ஆடியருளும் இன்ப வடிவமான இறைவனுடைய திருநடனத்தில் பேரா அன்பு பெருக்கினான். பரதக்கலை தவிர்ந்த ஏனைய அறுபத்து மூன்று கலைகளையும் ஐயந் திரிபறக் கற்றான். அறநெறி வழாது பாண்டி நாட்டை இறை முறை செலுத்தி வந்தான் இராசசேகரபாண்டியன்.

அந்நாளில் சோழ தேசத்தைக் கரிகாற் பெரு வளத்தான் என்னும் பெருமன்னன் அரசாட்சி புரிந்திருந்தான். சோழ வேந்தனும் பராபரப் பெருமானிடத்தில் முதிர்ந்த பத்தி உள்ளவன்.

சோழநாட்டில் ஒலிக்கின்ற தெள்ளிய அலைகளைக் கொண்டது காவிரிநதி. காவிரியாற்றின் அழகிய தண்ணிய நீர்த்துறையுடையது திருவானைக்கா. ஆனைக்காவில் சிலந்தி வாயின் நூலால் பந்தர் செய்தது. பந்தரிடமாகச் சிவபெருமான் வீற்றிருந்தருள்வார். சிவந்த கண்களை யுடைய திருமால் சிவவழிபாடு செய்வார். ஆனைக்கா அண்ணலாரிடத்தில் அன்பு கலந்த உள்ளத்தை உடையவன் கரிகால் அரசன். கரிகாற் பெருவளத்தான் ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் வல்லமை மிக்கவன்.

காவிரி நாட்டுக் கரிகாற்சோழ காவலனுடைய அரண்மனைப் புலவன் ஒருவன் பாண்டி நாட்டிற்கு வந்தான். புலவன் வேப்பமாலை அணிந்த இராசசேகர மன்னனுடைய மாளிகையை எய்தினான். முதலில் பாண்டிய மன்னனைத் துதித்தான். பின்னர் பகருகின்றான்.

"ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த எங்கள் கரிகாற்சோழ அரசருக்கு அறுபத்து நான்கு கலைகளும் கைவரும். தங்களுக்கு ஒரு கலை கைவராது. அது பரதக் கலை. ஆதலால் பாண்டிய மன்னர் அனைத்துக் கலைகளையும் கற்றவர் அல்லர்" என்று எடுத்துப் புலவன் புகன்றான்.

வேற்று அரசனுடைய வாயிற் புலவன் சொன்ன வார்த்தையை இராச சேகரபாண்டியன் செவிமடுத்தான். சோழ வேந்தனை விடத் தான் ஒரு கலையில் தாழ்ந்தவனாகி விட்டேனே என்னும் எண்ணம் அரசனுக்குப் பகைமையையும் மானத்தையும் வருவித்தது. மன்னன் துன்பத்தில் அழுந்திய மனத்தினனானான்.

மன்று வேத முடிவானது. அங்கு கண்கள் மூன்றுடைய இறைவன் ஆடியருளும் திருக்கூத்தினை ஒன்றிற்கும் பற்றாத சிறியேனும் ஆடுவதற்கு என் உள்ளம் விரும்புகின்றது. அதுவும் இறைவனுடைய திருவருள் ஆணையே என்று பாண்டியமன்னன் மனம் ஆறினான். உள்ளந் தேறினான்.

இராசசேகரபாண்டியன் நாடக நூலை நுனித்துக் கற்றுக்கரை கண்ட கலைஞனைத் தேடினான். பரத நூலில் கூறிய வழி ஆடல் பயின்று தேர்ச்சி பெற்ற தேசிகனைத் தேடினான். அவர்கள் வேண்டுவனவற்றை மனம் மகிழும் படி கொடுத்தான். பரதக் கலை வல்லுநர்களிடத்தில் மன்னவன் குற்றம் நீங்கப் பரதக் கலையைப் பயிலத் தொடங்கினான். நாளடைவில் அக்கலையில் பாண்டித்தியம் உடையவனானான். அரசன் கூறிய கூத்தைக் கற்கும் போதில் தனது உடம்பில் மிகத் துன்ப நோய் அடையப் பெற்றான்.

இராசசேகரபாண்டிய மன்னன் தான் அனுபவிக்கும் அத்துன்பம் நான்கு வேதங்கள் அறியாத பொருளாகியும் ஞானவடிவாயும் வெள்ளியம் பலத்தில் ஆடி நின்றருளும் கூத்தப் பிரானுக்கும் உண்டு என்னும் உண்மையை உள்ளத்தில் உணர்ந்து கொண்டான்.

நான்முகன் நாராயணன் நாடுதற்கரிய நற்றாள் ஒன்றே துன்புறு கின்றது. காலாதி காலமாகக் கால் மாறாமல் நிற்கும் கழற் கால் வலிக்காதா? நெடுங்காலமாக ஆடிய வண்ணம் நிற்கின்றதே அரிய அடிகள். ஐயகோ! பரத நூலைக் கற்றதனால் வருந்தும் அனைத்துத் துன்பத்தை அறிந்தும் நான் வாளா இருப்பதேயோ! உடலில் உயிரைச் சுமந்து உழலலாமா? என்று மன்னன் வெள்ளி அம்பலப் பிரானாருடைய திருவடியை நினைந்து நினைந்து நைந்தான். உள்ளம் உருகினான். உடலம் பதை பதைத்தான். பாராளும் பார்த்திபன்.

## 12

இறைவன், பிறவிக் கடலின் கரையைக் காணுதற்குரிய நன்னாள் வந்து எய்தப் பெற்றவர் யாவராயினும் அவர் அனைவருக்கும் இன்பத்தை யும் வீடு பேற்றையும் அளித்தருள்வான். அவ்விளைவை எதிர்நோக்கி அவர் இயற்றும் அந்தக் கூத்தினைத் தடுப்பது தகுதி அன்று, ஆயினும் வலிக்கும் திருவடி வருந்துவதை எப்படிப் பொறுமையோடு சகித்துக் கொண்டிருப்பது? என்று சிந்தனை செய்தான் மன்னவன்.

சிந்தனையின் விளைவாக அரசன் ஒரு நல்ல முடிவிற்கு வந்தான். அம்பலத்தாடியாரைக் கால் மாறி ஆடச் செய்தால் கால் வலிப்பு இருக்காது என்று ஒரு கருத்தைப் புத்தியில் கொண்டான். அதற்குரிய செவ்வியையும் நன்னாளையும் அரசன் எதிர்நோக்கி இருந்தான்.

இராசசேகரபாண்டியன் ஒரு மகாசிவராத்திரி நன்னாளில் சோமசுந்தரக் கடவுளுக்கு மிகச் சிறந்த சிவபூசனையைச் செய்யலானான். நான்கு சாமங்களிலும் சிவாகம விதிப்படி சிறந்த பூசனை புரிந்தான்.

கடவுளின் கருணையை நினைந்து மன்னன் கண்ணீர் பெருக்கினான். பெருமானுடைய தாமரை மலர் போன்ற திருவடியைத் துதித்தான்.

வெள்ளி அம்பலத்துள் அன்பர்களுடைய தொண்டு பூண்ட உள்ளத் தாமரை மலர நின்ற பேரொளிப் பெருமானுடைய உண்மை ஞானத் திருக் கூத்தைத் தரிசித்தான். மனம் மகிழ்ந்து மன்றாடுவான். கண்கள் ஆனந்த அருவி நீர் சொரிந்தன. கைம்மலர் உச்சியின் மீது குவிந்தன. பாண்டிய மன்னன் பின்வருமாறு பிரார்த்தனை செய்யத் தொடங்குவான்.

"வெள்ளி அம்பலத்துள் நின்று ஆடும் அருள் வெள்ளமே! கருணைக் கடலே! என் அன்பே! என் இன்னுயிரே! ஊன்றிய திருப்பாதத்தைப் பெருமான் மேலெடுத்து ஆட வேண்டும். தூக்கிய திருவடியை நிலத்தில் ஊன்ற வேண்டும். அதனால் கண்ணுதல் கால் வலி மாறியதை நான் உணர்தல் வேண்டும். இன்றைய நன்னாளில் எனது கண்கள் இரண்டும் உனது கழல்கள் மாறி ஆடுவதைக் கண்டு களிப்புற வேண்டும். என் துன்பத்தைக் துடைத்து விட வேண்டும். நான் இன்புற்றிருக்க உதவுதல் வேண்டும். அங்ஙனம் அருளாது ஒழிந்தால் நான் உயிர் நீப்பேன்."

இவ்வாறு இராசசேகரபாண்டிய மன்னன் கூத்தப் பெருமான் சந்நிதியில் விண்ணப்பித்து நின்றான்.

இறைவன் அரசனுடைய வேண்டுதலுக்குச் சற்றும் இரங்காமை கண்டான். தன்னால் செய்யத்தக்க அடுத்த கட்டத்திற்கு அரசன் ஆயத்தமானான்.

அன்பு மலை போன்ற இராசசேகரபாண்டிய மன்னன் உடை வாளின் மீது குப்புற வீழத் தீர்மானித்தான்.

அரசன் உடைவாளை உருவினான். பூமியில் வாளை நாட்டினான். வாளின் மீது அரசன் வீழத் துணிந்த போது திடீரென்று அற்புதம் நிகழப் பெற்றது. வெள்ளி அம்பலத்துள் ஆடும் நடராசர் தமது இடது பாதத்தை நிலத்தில் ஊன்றினார். தமது வலது திருவடியைத் தூக்கி ஆட்டத்தைக் காட்டினார். அரசன் ஆண்டவன் கால் மாறி ஆடக் கண்டான்.

வெள்ளி அம்பலத்து அற்புதர் அன்று முதல் இன்று வரை கால் மாறி ஆடிய நிலையினராகக் காட்சி தந்தருளுகின்றார்.

கன்னி நாடவனுடைய கவலை கழிந்தது. மும்மலங்கள் தம் வயம் இழந்தன. இராசசேகரபாண்டிய மன்னன் பரமானந்தக் கடலுள் மூழ்கினான்.

அரசன் ஆடிய பாதத்தில் வைத்த அன்பு தான் என்னே!! திருவடிப் பெருமை தான் என்னே!! அந்த ஆனந்த உணர்வை அவரவர் உணர்வில் கண்டு கொள்வது அல்லாமல் அதன் நீள அகலத்தை அளவிட்டுச் சொல்ல வல்லார் ஆருளர்?

உலகப் பொது மறை என்று எல்லோரும் போற்றும் திருக்குறள் கடவுள் வாழ்த்தோடு தொடங்குகின்றது. இறைவனுடைய உருவ அருவ அருவுருவத் திருமேனிகளைச் சுட்டி உணர்த்தவில்லை. இறைவனுடைய தாளை வணங்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றது. திருவடியை வணங்குவதால் அடையும் பயனை உறுதிப்படுத்தப் பொய்யா மொழி தவறியதில்லை.

திருக்குறள் என்னும் அறநூலை தெய்வத் திருவடி வணக்கத்தோடு வள்ளுவனார் பாட எடுத்துக் கொண்டார் என்றால் திருவடிப் பெருமை திண்மை உடையது என்பது புலனாகின்றது அன்றோ!!

## 13

வள்ளுவர் வாக்குப் பொய்யா மொழி. திருக்குறளில் முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து. 'கடவுள்' என்று எடுத்தலுமே வான் புகழ் கொண்ட வள்ளுவனார் ஆத்திகர் என்பது தெற்றெனப் புலனாகும். திருக்குறளில் நூற்றி முப்பத்து மூன்று அதிகாரங்களும் சராசரி பத்துக் குறள்களால் நடப்பன.

கடவுள் வாழ்த்தில் அமைந்த பத்துத் திருக்குறள்களில் ஏழு குறள்கள் இறைவனுடைய திருவடிகளை வணங்குவதால் அடையும் பேறுகளை வெளிப்படையாக விளக்குவன.

இறைவனுடைய பாத தாமரைகள்- தாள், அடி என்னும் சொற்பதங் களால் கற்பிக்கப்படுவன.

*திருவடிப் பெருமை பேசும் கருத்துக்கள் இவை:*

(1) மெய்ப்பொருள் பெருமானுடைய நல்லதாள்களைத் தொழாராயின் கற்ற நூற் பயன் யாது?
அதனால் கல்வியின் பெரும் பேறு கடவுளுடைய கழல்களை வணங்குவதாகும் என்னும் உட்கருத்துச் சூசகமாக உணரத்தக்கது. கடவுளை வணங்குவதற்குக் கல்வி வேண்டும் என்னும் உண்மையை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய, "கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்" என்னும் திருவாக்கால் அறியலாம்.

(2) உள்ளக் கமலத்தில் உறையும் உத்தமருடைய மேலான திருவடி களை அடைந்தவர். வீட்டின்பமான முத்திப் பேறு எய்தி என்றும் இன்புற்றிருப்பர்.
இதனால் இறைவனுடைய மாண்புடைய மலரடிகளைச் சிந்தியாத வருடைய உயிருக்கு என்றும் ஆன்ம ஈடேற்றம் இல்லை என்ப சொல்லாமற் சொல்லியவாறு.

(3) விருப்பு வெறுப்பு இல்லாத இறைவனுடைய பாததாமரையை அடைந்தவருக்கு பிறவித் துன்பம் இலவாகும்.
இதனால் திருவடி அடையாதவர் பிறவிக் கடலில் கிடப்பர். இக் கருத்தைத் திருநாவுக்கரசு நாயனாருடைய ஆறாம் திருமுறைத் திருவாக்கான, "....பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்பதனோடு ஒப்பு நோக்கி இன்புறற் பாலது.

(4) தமக்குப் பிறிது ஒருவர் ஒப்பில்லாத கடவுளுடைய திருவடியைச் சார்ந்தவர்களுக்கு அல்லாமல் மனக் கவலை மாற்றுதல் அரிது. எனவே தனக்குத் தானே நிகரான தயாபரனுடைய தாள்களைச் சேரமனக் கவலைகள் இலகுவாக மாறும்.

(5) அறக்கடலாகிய அந்தணனாருடைய அடிகளைப் பற்றியவர்களுக்கு அல்லாமல் துன்பக் கடலைக் கடத்தல் அரிது.
ஆக, கருணைக் கடலாகிய கடவுளுடைய கழலடிகளைச் சேரக் கடக்க முடியாத துன்பக் கடல்களை எல்லாம் கடந்து இன்பக் கடற்கரை சேரலாம்.

(6) எண்குணப் பெருமானுடைய எழில் மிகு பாதங்களைப் பணியாதவர் கள் புலன் வழிச் செல்வர்.
எனவே, புன்னெறி அதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி நடத்தல் வேண்டுமாயின் எண்குணப்பெருமானுடைய தாளை வணங்குதல் தலையாய கடனாகும்.

(7) இறைவனுடைய திருவடிகளைப் பற்றிக் கொண்டவர்கள் பிறவிக் கடலினின்றும் கரைசேர்வர். அல்லாதவர்கள் பிறவி என்னும் ஆழியில் கிடந்து அழுந்துவர்.
ஆக இறைவனுடைய திருப்பாதங்களைப் பற்றிக் கொண்டவர்கள் பிறவாமை பெற்றவர்கள் ஆவார்கள்.
சுருங்கச் சொல்லின், வான்புகழ் கொண்ட வள்ளுவனார் வகுத்த உலகப் பொதுமறை சிந்திப்பரிய திருவடிப்பெருமையை உணர்த்தும் முறை இது :-

1. கல்விப் பயன் கடவுளுடைய கழலடி தொழுதல்
2. இறைவனுடைய திருவடி அடைந்தவர் என்றும் இன்புற்றிருப்பர்
3. இறைவனுடைய திருவடி அடைந்தவர் இம்மை அம்மையில் துன்புறமாட்டார்.
4. இறைவனுடைய திருவடி சேர மனக்கவலை மாறும்.
5. இறைவனுடைய திருவடி அடைந்தவர் எல்லாத் துன்பக் கடலையும் கடந்தவராவார்.
6. இறைவனுடைய தாளைத் தலையினால் வணங்குபவர்கள் பள்ளம் படர் புனல் வழிச் செல்லும் சிறியோர் போல் புலன் வழிச்செல்ல மாட்டார்.
7. இறைவனுடைய திருவடியைச் சேர்ந்தவர் பிறவிப் பெருங்கடலைக் கடப்பர்.

மேல் காட்டிய பொருள் பொதிந்த திருக்குறள் கீழ்த் தரப்படுவன.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ**
**னற்றா டொழாஅ ரெனின்** – 2

**மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்** – 3

**வேண்டுதல் வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்**
**கியாண்டு மிடும்பை யில** – 4

**தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்ற லரிது** – 7

**அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்த லரிது** – 8

**கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை** – 9

**பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா**
**ரிறைவ னடிசேரா தார்** – 10

இறைவனுடைய திருவடியை மறவா மனத்தினோடும் அருச்சனை பூசை வழிபாட்டினாலும் பெறுதற்கரிய பெரும் பேறு பெற்ற மெய்யன்பாளர்களில் மாணிக்க வாசகனாரும் ஒருவராவார்.

## 14

சிவபெருமானுடைய திருவடிப் பெருமையை மாணிக்கவாசக நாயனார் திருவாய் பொலியத் தித்திக்கும் திருவாசகம் என்னும் தேனாகச் சுவைத்துப் பாடுவார்.

**"சிந்தனை நின்தனக்கு ஆக்கி**
**நாயினேன் தன் கண் இணை**
**நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி,"**

என்பது திருவாசகத்தில் வரும் மணி வாக்கு,

நாயினேனுடைய நினைவு எல்லாவற்றையும் நின்னிடத்து நிகழ்வித்து என் இரு கண்களையும் நின்னுடைய திருவடிப் போதுக்கு உரிமையாக்கி, என்னுடைய வணக்கத்தையும் அத்திருவடி மலர்களுக்கு உரித்தாக்கி என்று எம்பெருமானுடைய சிந்திப்பரிய திருவடிப் பெருமையைச் சிந்திக்கின்றார் மணிவாசகச் செம்மலார்.

சிவபெருமான் மணிவாசகனாருக்குக் குருவடிவாகிக் குவலயந் தன்னில் திருவடி தந்தார். அத்திருவடிப் பெருமையால் திருவாதவூரடிகளார் பெறுதற்குரிய பேறுகளையும் பெறுதற்கரிய பேறுகளையும் பெற்றுப் பரிபூரணரானார்.

கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகளார் சிவபெருமானுடைய திருவடிகள் தீண்டப் பெற்ற செய்தியைப் புராணத்தில் பின்வருமாறு உறுதிப் படுத்துகின்றார்.

**அண்டருக் கரியாய் போற்றி**
**யடியவர்க் கெளியாய் போற்றி**
**வண்டமிழ்ப் பாண்டி நாடு**
**வாழமண் சுமந்தாய் போற்றி**
**கண்டனக் கினிய மேனி**
**காட்டியென் சென்னி மீது**
**முண்டகத் திருத்தாள் வைத்த**
**முத்தனே போற்றி போற்றி.**

'என்னுடைய கண்களுக்கு இனிய ஞானதேசிகத் திருமேனியைத் தரிசிப்பித்து என் புன்தலை மீது உன் செந்தாமரை போலும் உபய திருவடிகளைச் சூட்டியருளிய அநாதிமல முத்தரே அடியேனைக் காத்தருள்க' என்று எழில் வாதவூரர் அழிவில் பெருமானுடைய திகழும் திருவடிப் பெருமைச் சிந்தனையை உலகவர்க்கு உணர்த்தாது உணர்த்துகின்றார்.

அடிகளார் முன்னரும் திருப்பெருந்துறையில் முன்னவன் பொன் போலும் திருவடிகளை அபிடேகித்து அருச்சனை புரிந்தார். அவ்வுண்மையை,

**"விண்ணவ ரதிபன் பொற்றாள்**
**விளக்கியர்ச் சனைமுன் செய்து"**

என்னும் கடவுள் மாமுனிவர் வாக்கால் கண்டு கொள்க.

மேலும் அடிகளார் பாண்டி நாட்டினின்றும் பரமாசாரியாரைப் பணியச் சென்ற செய்தியை முனிவர் செப்புகையில், "திருவாதவூரடிகள் தமது முத்தி வறுமை நீங்கிடத் திருவடிதீட்சை செய்தருளிய குருமணி வீற்றிருந்தருளும் திருப்பெருந்துறையை நோக்கி நடக்கும் பொழுதிலும் திருவடிப் சிறப்பைச் சேவிக்கின்றார்.

**"மிடை கெட வைத்த பாத**
**வித்தக ரூரை நோக்கி**
**நடையிடு மெல்லை -**

என்று கடவுள் மாமுனிவர் வாக்கில் காண்க.

பின்னரும் ஒரு சந்தர்ப்பத்தில் பரம்பொருளாம் குருமணி பரமாச்சாரிய கோலத்தில் திருவாதவூரடிகளாருடைய சிரசில் திருவடி சூட்டினார். அச்சம்பவத்தைக் கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தில்,

**"பரவி மென்பதம் பணிபவர் படிமேற்**
**படிய வீழ்ந்தனர் வாழ்ந்தார் பரிவால்**
**மருவு மிங்கிவர் சென்னியி லிருதாள்**
**மகிழ வைத்தனர் மதிநதி முடிப்பார்."**

என்று எடுத்து ஏத்துவார்.

துதித்து மென்மையான திருவடிகளை வணங்கும் திருவாதவூரடிகளார் பூமியில் எட்டு உறுப்பும் தோயச் சந்நிதியில் வீழ்ந்து வணங்கினார். அடிகளார் பெருவாழ்வு பெற்றார். அப்போது குருமூர்த்தி தீவிரதர பக்குவம் பொருந்திய அவ்வடிகளது சிரசிலே தம்முடைய ஞானசக்தி கிரியா சக்திகளாகிய இரண்டு திருவடிகளையும் அவர் மனம் மகிழுமாறு சூட்டியருளினார்.

## 15

குருமணியாம் சிவபெருமான் திருவாதவூரடிகளாருடைய சிரசின் மீது திருவடி சூட்டுதலும் அடிகளாருக்கு முன்னுள்ள பசு கரணங்கள் தந்தன்மை தவிரப் பெற்றன. பழைய மித்தியா ஞானமாகிய சந்தேக விபரீதங்கள் சாயப்பெற்றன. திருவருளினாலே இனிய சிற்சத்தி பதியுஞ் சிவகரணங்களாகப் பசுகரணங்கள் பரிமளித்தன. கைவல்லிய சுகத்தைத் தரும் சிவஞானம் அக்கரணங்களில் நின்றும் தோன்றப் பெற்றார் திருவாதவூரடிகளார்.

கயிலைக்குச் செல்லும் பிரிவுக்கு அஞ்சிய திருவாதவூரடிகளாருக்குப் பரம்பொருள் பரிந்தருள் பாலித்துப் பரிந்துரை பகர்கின்றார். அவ்வுரையிலும் திருவடிப் பெருமையே உயிர் நாடியாக ஊசலாடுகின்றது.

"மணமிகுந்த இந்தக் குருந்த மரநீழலில் தெய்வத் தன்மை பொருந்திய பீடிகை ஒன்றை அழகோடு அமையுங்கள். அதன் மீது திருத்தமாகிய வேதங்களும் தேடும் நம்முடைய திருவடிகளைப் பிரதிட்டை செய்யுங்கள்.

**"பரிந்தழு மடியார் தம்மேற்**
**பரமனு மன்பு கூர்ந்து**
**வருந்துவ தொழிமி னிந்த**
**மணமலி குருந்த நீழல்**
**பொருந்திய தெய்வ பீடம்**
**பொலிவொடு குயிற்றி மீதே**
**திருந்திய மறையுந் தேடு**
**நம்பத மாகச் செய்து**

திருவாதவூரடிகளாருடன் உடன் உறையும் ஏனைய அடியவர்களுக்குமாக மேலும் உணர்த்துகின்றார்; உண்மைப் பொருளானார்.

நமது பிரிவால் சகித்தற்கரிய துன்பத்தினின்றும் நீங்குங்கள். அத் திருவடியை யாமே என்று பாவனை பண்ணுங்கள். நீங்குவதற்கு அரிய அன்பினாலே நாள்தோறும் திருவடியை விருப்பினோடு வணங்குங்கள். திருவடி அருச்சனை ஆற்றுங்கள். திருவடி வழிபாட்டில் வழுவாதீர்கள்.

அத்தன்மையைத் திருவாதவூரடிகள் புராணம்,

"தாங்கரு மரந்தை நீங்கி
யாமெனுந் தன்மை கண்டு
நீங்கரு மன்பி னாலே
நித்தலு நயந்தி றைஞ்சி
யீங்கருண் மனத்த ரெல்லா
மமர்ந்திரும் ......"

இத்தன்மைத்தாக எடுத்து இயம்பா நிற்கும்.

சிவபெருமான் குருமணியாக எழுந்தருளி வந்து திருவாதவூரடிகளாருக்கு திருவடிப் பெருமைச் சிறப்பு அருளினமையைப் புராணவாயிலாக அறிந்தோம். அது புறச்சான்றாகலாம். புயங்கப் பெருமான் திருவடிப் பெருமையை அறிந்து அனுபவித்து உணர்ந்து திருவாதவூரடிகள் உய்தி பெற்றமைக்கு அகச்சான்று திருவாசகத்தில் அனேகம் உண்டு உதாரணத்திற்கு எடுத்தாளப்படும் மேற்கோள் அகச்சான்று சில இவை :-

*1. "நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி —*

*2. தில்லை மூதூர் ஆடிய திருவடி —*

*3. வழுத்தியுங் காணா மலரடி யிணைகள் வழுத்துதற் கெளிதாய்*
*வார்கடல் உலகினில் -*

*4. ...... உன்விரை, யார்கழற்கென்*
*கைதான் தலைவைத்து,*

*5. அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய் -*

*6. சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.*

*7. திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை*
*உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான் -*

*8. இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே*
*துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன் -*

*9. கூத்தா உன் சேவடி கூடும் வண்ணம் தோள் நோக்கம்.*

*10. ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடி —*

*11. ...... பூங்முகழற் கிணைதுணை மலர்கொண்டு*
*ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்*
*எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்.*

12. செழுக்கமலத் திரளனநின் சேவடி –

13. கருடக் கொடியோன் காணமாட்டாக்
கழற்சே வடி –

14. பருதி வாழ் ஒளியாய் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்

15. பாவ நாசா உன் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய் -

16. செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே –

17. கரும்புதரு சுவை எனக்குக் காட்டினையுன் கழலிணைகள்

18. அடியேன் நின், பூங்கழல்கள் அவையல்லா
தெவையாதும் புகழேனே –

19. தன், பொன்னடி யிணைகாட்டி –

20. தூய மாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி
மன்னிச் சுடருமே

21. போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட்
டுடையான் கழல் புகவே –

22. பிறப்பறுத்தேன் நல்ல,
மருந்தினடி என் மனத்தே வைத்து.

23. கண்க ளிரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பன ஆகாதே –

16

24. மின்னே ரனைய பூங்கழல்கள் அடைந்தார்
கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு போற்றா
நின்றார் அமரரெல்லாம்.

25. திருவடிப் பெருமையைத் திருவாசகம் நிலைநாட்டும் அழகே அழகு – சிறப்பே சிறப்பு – பெருமையே பெருமை. திருவாசகத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் நடுவிலும் திருவடியை வாழ்த்தியும் வணங்கியும் அருளினைப் பெற்றமையையும் கண்டு இன்புறற்பாலன.

திருவாசகத்தின் ஆதியில் "**நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க**" என்று வாழ்த்தப்படுகின்றது.

நடுப்பகுதியில்,

"எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்" என்று தொழுது வணங்கப்படுகிறது.

முடிவில்,

" .....முதலாய முதல்வன் தாள்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்து அம்மை எனக் கருளியவாறு .." என்று அருளலோடு அமைதி பெறுவது கண்டு ஆனந்தம் அடையலாம். திருவருளில் திளைக்கலாம்.

திருவாதவூரடிகள் சிவபெருமானுடைய திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டார். திருவாசகமணி வாக்கால் வரைவதானால் திருத்தாளைச் சிக்கெனப் பிடித்தார். திருவடிப் பிடிப்பும் கூத்துடையான் கழற் கன்பும் பத்தியும் அடிகளாருக்கு அருளிய செல்வப் பேறு சொல்லில் அடங்காது . ஆயினும் ஆசையால் சில சொல்லுகின்றேன்.

**"ஒள்ளிய, கன்னற் கனிதேர்களிறெனக் கடை முறை இருக்கப்பெற்றார்."**

**"கருணை வான்தேன் கலக்க அருளொடு பரவமு தானார்."**

பிறவி நாசமானார். பிறவி யென்னுமிக் கடலை நீத்தப் பேரருள் பெற்றார். ஆடினர். கூத்துடையான் கழற் கன்பினரானார். என்புருகிப் பாடினர். பதைப்பதும் செய்தனர். பணிந்தனர். பாதமலர் சூட்டினர். சிவன் எவ்விடத்தான் என்று தேடினர். தெருவு தோறும் அலறினர். பொய் தான் தவிர்ந்தனர்.

மாய வாழ்க்கையை மெய்யென்றெண்ணி மதித்திடாவகை பெற்றார். வம்பனாய்த் திரிந்தவர் வல்வினைப்பகை மாய்ந்தார். பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும் மெய்யாக் கருதிக்கிடவாதவரானார்.

குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தன் குரைகழற்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருகப் பெற்றார்.

**"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கும்**
**அத்தன் அருள் பெற்றார்**
**மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன்தாள்**
**தம்மையுமோர் பொருளாக்கப் பெற்றார்"**

மேலே காட்டிய யாவும் திருவாதவூரடிகளாருடைய வாய்மொழி எனலாம். அதனால் விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளினுடைய தாளினைச் சூடியும் சூட்டியும் வணங்கியும் வாழ்த்தியும் ஏத்தியும் எய்திய பேற்றிற்கு அகச்சான்றாகச் சாற்றலாம்.

சுருங்கச் சொன்னால், திருவடிச் சேவிப்பினால் திருவாதவூரடிகளார் மனிதப் பிறவியினால் பெறும் பேற்றை முழுமையாகப் பெற்றுக் கொண்டார். அவருடைய ஆன்மா பரிபூரணம் அடையப் பெற்றது. உலகவரையும் உயர் கதிக்கு வழி வகுத்தது. உண்மையை யாவரையும் உணரச் செய்தது. பொய்யிற் கிடந்து புரளாமல் மெய்யில் திளைக்க வைத்தது.

அத்தேவர், இத்தேவர், உத்தேவர் என்று மனத்தை அங்கு இங்கு எங்குமாக அலையவிடாமல் மெய்த்தேவர் சிவபெருமான் என்று பத்திக் கடலுள் பயில வைப்பன திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்த திருவாசகம், திருக்கோவையார் என்னும் செந்தமிழ் வேதம்.

அப்பனுவல்களைப் பொருள் உணர்ந்து சொல்லுவார் சிவனடிக் கீழ் செல்லுவார் என்பதும் வாதவூரடிகளார் வாய்மை.

**"சொல்லிய பாட்டின்**
**பொருளுணர்ந்து சொல்லுவார்**
**சிவபுரத்தின் உள்ளார்**
**சிவனடிக்கீழ்ப் பல்லோரும்**
**ஏத்தப் பணிந்து!"**

## 17

**"திருப்பெருந் துறையுறை சிவனே**
**ஒன்றும் நீ அல்லை அன்றியொன் றில்லை**
**யாருன்னை அறியகிற் பாரே"** — (394)

ஆராலும் அறிய இயலாத அப்பரம்பொருளிடத்தில் திருவாதவூரடிகள் செய்யும் வேண்டுதல் இது :

**"திருப்பெருந் துறையுறை சிவனே**
**யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்**
**வந்துநின் இணையடி தந்தே** — (396)

திருவாதவூரடிகள் இறைவனுடைய இணையடியில் ஈடு இணையற்ற இன்பமும் அன்பும் வைத்தவர்.

இணையடியை வாயினால் வாழ்த்துகின்றார். நெஞ்சினுள் நிறைக்கின்றார். சிரசின் மேல் தரிக்கின்றார். கைகளினால் கூப்பித் தொழுகின்றார். கோத்தும்பியைக் குரைகழல் ஊத ஏவுகின்றார்.

அடிகளார் ஆதிபரம்பொருளுடைய அருமைத் திருவடிகளில் வைத்த பேரன்பால் அரச வண்டைப் பார்த்து அருளுகின்றார்.

"அரச வண்டே! விடைப்பாகரது செவ்விய திருவடியைத் தாமரைத் தவிசில் தங்கும் நான்முகக் கடவுள் அறியமாட்டார். தேவேந்திரன் தெரிய மாட்டான். அழகுமிக்க நாவில் அமரும் நாமகளும் நாடமாட்டாள். நாராயணன் நண்ணமாட்டான். நான்கு வேதங்களும் தேடி ஏங்குவன. காளை மேலவரான ஒளி உருவாகிய உருத்திரர் உணரமாட்டார். அமரர்கள் அறிய மாட்டார்கள். அறிதற்கரிய திருவடிமலரை அடைந்து வாயார ரீங்காரஞ் செய்வாய்.

**"பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த**
**நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்**
**மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்**
**சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ,** (215)

"அரச வண்டே, தேவாதி தேவராகிய மகாதேவர் என்னை ஆண்டு கொள்ளாமல் இருந்திருப்பாரேயாயின், நான் ஆராவேன். என்னுடைய உள்ளம் எத்தகையது ஆகுமோ. என்னுடைய அறிவு தான் என்னாகுமோ. என்னை உலகத்தில் யார் ஞானி என்று அறிவார்கள். அறிவு அருளில் மயங்கினமையால் போல தசை கலந்த உடைந்த கபாலத்தில் உண்ணும் உணவைப் பிச்சையாக ஆய்ந்து கொள்ளும் அம்பலத்தே அருநட்டம் ஆடும் இன்பத்தேன் பொதிந்த திருவடிக்கமலங்களை அடைந்து ஊதுவாயாக."

**"நானார் என் உள்ளமார் ஞானங்களார் என்னையா ரறிவார்**
**வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி**
**ஊனா ருடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்**
**தேனார் கமலமே சென்றூதாய் - கோத்தும்பீ —** (216)

"அரச வண்டே! அன்னப் பறவைகள் அருளில் திளைக்கும் அழகிய தில்லைச்சிற்றம்பலத்து அம்பலவன் என்னை ஆண்டு கொண்டவன். நான் இளகாத இரும்பார்ந்த மனத்தவன் என்றும் பாராமல் ஆண்டு கொண்டவன். வஞ்சகன் என்றும் ஆண்டு கொண்டவன். கருணையினால் என் நெஞ்சக் கன கல்லை நெகிழ்வித்து ஆண்டு கொண்டவன். அந்த அம்பலவனுடைய பொற்கழல் அணிந்த பொற்றிருவடிக்கும் போய் ஊதுவாயாக."

**வன்நெஞ்சக் கள்வன்**
**மனவலியன் என்னாதே**
**கன்நெஞ் சுருக்கிக்**
**கருணையினால் ஆண்டுகொண்ட**
**அன்னந் திளைக்கும்**
**அணிதில்லை அம்பலவன்**
**பொன்னங் கழலுக்கே**
**சென்றூதாய் கோத்தும்பீ.** (225)

"அரச வண்டே! சிவபெருமான் நீண்ட சடாமுடியுடையார். அப்பெருமான் சிவமும் சக்தியுமாக வந்து ஆண்டு கொண்டார். அவர் என்னை ஆண்டு கொள்ளவில்லை ஆயின் நான் அவருக்கு எத்துணை தூரத்தில் உள்ளேனோ!"

என்னுடைய உள்ளம் எத்துணை தூரத்தில் இருக்குமோ! என்னுடைய ஆன்ம நாயகர் வானகமாக உள்ளார். திசைகளுமாகத் திகழுவார். பெருங்கடல்களாகவும் காட்சி தருவார். அவருடைய தேன் சிந்தும் செய்ய திருவடி மலரிடத்தே செல். உன் நாதத்தை நவிற்றுவாய்.

**நானும் என் சிந்தையும்**
**நாகனுக்கு எவ்விடத்தோம்**
**தானும்தன் தையலும்**
**தாழ்சடையோன் ஆண்டிலனேல்**
**வானும் திசைகளும்**
**மாகடலும் ஆயபிரான்**
**தேனுந்து சேவடிக்கே**
**சென்றூதாய் கோத்தும்பீ** — (229)

"அரச வண்டே! நான் நிலையில்லாத செல்வத்தை நிலைப் பொருள் என நினைத்தேன். தினந்தோறும் அச்செல்வத்தில் மூழ்கி அழுந்தினேன். பொருளற்றுக் கிடந்த என்னை ஆண்டு அருளிய ஆன்ம நாயகரே! என் தலைவனே! என் அரிய உயிரே! அம்பலத்தே ஆடும் அரும் பொருளே! என்று ஏத்து அவருடைய செம்மை நலத் தாமரைத் திருவடிகளைச் சென்று ரீங்காரம் இசைப்பாய்."

**பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்**
**மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட**
**ஐயா என் ஆருயிரே அம்பலவா என்று அவன்தான்**
**செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ** — (231)

**கள்வன் கடியன்**
**கலதிஇவன் என்னாதே**
**வள்ளல் வரவர**
**வந்தொழிந்தான் என்மனத்தே**
**உள்ளத்து உறுதுயர்**
**ஒன்றொழியா வண்ண மெல்லாம்**
**தெள்ளும் கழலுக்கே**
**சென்றூதாய் கோத்தும்பீ** — (233)

## 18

"அரச வண்டே! எம்பெருமான் இவன் கள்வன் என்று கடியவில்லை. இவன் இரக்கமில்லாத கல்நெஞ்சன் என்று தள்ளிவிடவில்லை. இவன் கீழான குணத்தவன் என்று ஒதுக்கி விடவில்லை. அருள் வள்ளலாவார் அம்பலவர். படிப்படியாக என் மனத்தில் குடிகொண்டனர். என் உள்ளத்திலுள்ள இன்னல்கள் எல்லாவற்றையும் ஒன்றும் ஒழியாத வண்ணம் உணர்த்தி அருளினர். எனக்கும் தெளிவைத் தந்த திருவடிகளுக்குச் சென்று ரீங்காரம் பண்ணிச் சேவிப்பாயாக."

என்று இவ்வாறாக வாதவூரடிகள் சிவபெருமானுடைய திருவடி மகத்துவத்தை அரச வண்டின் மூலம் அகில லோகத்திற்கு அறிவிக்கும் அருமை ஆனந்தமானது.

மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி மாண்பு அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச் சிந்தை மகிழ முன்னர் சொன்னோம்.

தில்லையில் அருளிய திருத்தெள்ளேணம் என்னும் திருவாசகத்தில் திருவாதவூரடிகளார் சிவபெருமானுடைய திருவடிச் சிறப்பைச் செப்பும் திறன் இது.

* *திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை*
*உருநாம் அறிய ஓர் அந்தணாய் ஆண்டு கொண்டான்.*

* *பூவார் அடிச்சுவடு என்தலைமேல் பொறித்தலுமே*
*தேவானவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ.*

* *மறந்தேயும் தன்கழல்நான் மறவாவண்ணம் நல்கியஅத்*
*திறம்படல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.*

* *கல்நார் உரித்தென்ன என்னையுந்தன் கருணையினால்*
*பொன்னார் கழல்பணித் தாண்டபிரான்.*

* *கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்.*

* *மருவித் திகழ் தென்னன் வார்கழலே நினைந்தடியோம்*
*திருவைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.*

* *அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்*
*சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ.*

* *கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்*
*செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.*

* *கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்*
*தென்னாதென் னாஎன்று தெள்ளேணம் கொட்டாமோ.*

* *அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற*
*சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.*

திருவாதவூரடிகளார் சிவனோடு ஐக்கியப்பட்ட உள்ளக்கிடக்கை ஆகிய திருக்கோத்தும்பி திருவாசகத் திருப்பதிகத்தைத் தில்லையில் செப்பி அருளினார். அரச வண்டின் வாயிலாகச் சிந்திப்பரிய சிவபெருமானுடைய திருவடிப் பெருமையைத் திருவடிச் சிறப்பை, திருவடித் திருவருளைச் சிந்தனைக்கு ஆக்குகின்றார். பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பின் திருவடிப் பூசையால் அருச்சனையால் வணக்கத்தால் வழிபாட்டினால் அடிகளார் அடைந்த அரிதின் பயனை ஓரளவிற்கு இவ்வாறு திருவருள் வெளிப்பாட்டு விளைவாகச் சிந்தனையில் கொள்ளலாம்.

1. *சிவபெருமானுடைய சேவடியை எத்தேவரும் அறியமாட்டார்கள்.*
2. *கல்நெஞ்சு உருக்கிக் கருணையினால் ஆளும் பொன்னங் கழல்*
3. *உள்ளத்தால் சேய்மையானாலும் அணிமையாக ஆளும் தேனுந்து சேவடி.*
4. *உள்ளப்படாத திருவுருவை உள்ள வான் கருணைக் களிதரும் செய்யார் மலரடி.*
5. *மெய்யாக் கருதும் செல்வத்தைப் பொய்யாக்க வல்ல செய்யார் மலரடி*
6. *உள்ளத் துறு கள்ளத்துயர் ஒழிக்குந் தெள்ளுநங் கழல்.*

மாணிக்கவாசக நாயனார் சிவனோடு அடைவுபட்டுத் திருத்தில்லையில் அருளியது திருத்தெள்ளேணம் என்னும் திருவாசகத் திருப்பதிகம். அப்பதிகப் பாடலில் மெய்த்தேவர் திருவடி செய்த திறத்தை வரித்துரைக்கின்றார்.

1. *ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார் திருவடியை உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்.*
2. *அரிய சிவன் பூவார் அடிச்சுவ டென்தலைமேற் பொறித்தலுமே தேவான வானேன்.*
3. *மறந்தேயும் தன்கழல் நான் மறவாவண்ணம் நல்கினான்.*
4. *கன்னார் உரித்தென்ன என்னையுந்தன் கருணையினால் பொன்னார் கழல்பணித் தாண்டபிரான்.*
5. *கனைகழலோன்*
   *புனவேய் அனவளைத் தோளியொடும் புகுந்தருளி*
   *நனவே எனைப் பிடித்தாட் கொண்டான்.*
6. *உருகிப் பெருகி உளங் குளிர*
   *பருகற்கு இனிய வார்கழல்.*

*7. அத்தன் அருட்கழல்கள் பிறப்பறுத்த.*

*8. கழலிணைகள் உவலைச் சமயங்கள்*
*ஒவ்வாத சாத்திரமாம்*
*சவலைக் கடலுளனாய்க்*
*கிடந்து தடுமாறும்*
*கவலை கெடுத்தன.*

*9. கருணைக் கழல் கண்ணார வந்து நின்ற*

*10. சிலம்பாடல் நலம் பாவின.*

இவ்வாறாக ஒரு சீவான்மாவைப் பரமான்மாவிடத்தில் பக்குவப் படுத்திய திருவடிப் பெருமையின் அருமையில் சிலவற்றை மணிவாசகருடைய அணி மொழிகளால் அறிந்து பணிவோமாக.

## 19

அன்பினில் விளைந்த ஆரமுது. "நாயிற் கடையாம் நாயேனை நயந்து இனிது ஆட்கொண்டு தாயிற் சிறந்த தயாவாகிப் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரியும் பாவியேனுடைய ஊனினை உருக்கும் உள்ளொளி பெருக்கும். உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும் புறம்புறந் திரியும் செல்வம். அந்தச் சிவபெருமான் ஒப்பிலா மணி அம்மையுமாம் அப்பனும் ஆகும். பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் கண்ணார் அமுதமுமாய் நின்றாய் கழல் பரவப் பாயும் இன்ப அன்பு ஊற்றை இன்னும் சிறிது சிந்தித்து இன்புறலாம்.

மாயா விஷயம் நீக்குதல் திருப்பூவல்லி. தில்லையில் சொல்லிய நல்லவருந் தமிழ்த் திருவாசகம் பூவல்லி திருவாதவூரடிகளார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற புணையான் திருவடி செய்யுந்திறத்தைச் சொல்லக் கேட்போம்.

இணையற்ற திருவடிகளைக் குருமணி சிரசிடமாகப் பதித்தலும் பாற்றலாகாத பந்த பாசப்பற்றுகள் அடிகளாரை விட்டுப் பாறின. சிவபெருமான் தானாக வந்து அடிகளார் நெஞ்சினுள் புகுந்தார். வார்கழல் புகழ் பாட வாய் அருளப்பெற்றார். நெடுங்காலம் பணி செய்து கிடப்பப் பாதமலர் நெஞ்சில் பதித்தார் நினைப்பரியோன். பொன்னான திருவடியால் கல்லில் நார் உரித்தாற் போல் என்னை ஆண்டு கொண்டார். பேராசையான இந்தப் பிண்டம் விண்டு போகச் சிறந்த திருவடியை என்தலை மீது பிரான் வைத்தார். பராபரனுடைய திருவடித்தாமரை சிவலோகநெறி அறியத்தரும் செந்நெறி. அருந்தவருக்கு ஆலின் கீழ் அறம் அருளும் திருவடிகள். பாதங்கள் என்நெஞ்சினுள்

பதித்தருளினார். நாராயணன் முதலாம் வானவர் அறியாத பொன்னார் திருவடி என் அகத்தில் பொலிய வைத்தார். அடியேன் அகமகிழும் திருவடிச் சிலம்பு ஒலி பூப்போன்ற பொன்னடிகள் நம்மைப் பணி கொள்வன. இவ்வாறான இறைவனுடைய இணையடிகள் தரும் பரிசினை அடிகளார் வாக்கில் காணலாம்.

1. *இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே*
*துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்.*

2. *நடம்பயிலும் வானாடர்கோ*
*ஊனாடி நாடிவந் துள்புகுந்தான்.*

3. *வார்கழல்வாய் வாழ்த்த*

4. *பன்னாட் பரவிப் பணிசெய்யப் பாதமலர்*
*என்னாகம் துன்னவைத்த பெரியோன்.*

5. *கன்னா ருரித்தென்னை யாண்டுகொண்டான்*
*கழலிணைகள்.*

6. *பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்*
*சீரார் திருவடியென் தலைமேல் வைத்தபிரான்.*

7. *குரைகழல்கள்*
*ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே.*

8. *அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி*
*நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறும்*
*நின்றார ஏத்தும் நிறைகழல்.*

9. *படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்து*

10. *பொன்னார் திருவடி*
*என்னாகம் உள்புகுந் தாண்டு கொண்டான்*

11. *சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே*
*ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழ*

12. *பெருந்துறையான்*
*கோவாகி வந்தெம்மைக்*
*குற்றேவல் கொண்டருளும்*
*பூவார் கழல்*

திருவாசகத்தில் பிரபஞ்ச சுத்தியைப் பேசுவது திருத்தோணோக்கம் என்னும் பாடற் பகுதி. அதில் மாயை மெய் என்று மாழாமல் சேவடி காத்த செய்தி தெளிவாகப் படும்.

பேய்த்தேரைப் பூத்தாரும் பொய்கைப் புனல் எனக் குறித்துப் பருகாமல் தீர்த்தது கூத்தப்பிரான் திருவடி. ஆயிரம் தாமரைப் பூவில் ஒன்றாகத் திருமால் கண்ணை இடந்து திருவடி பூசை செய்யச் சக்கரம் ஈந்தனர் மெய்யர். பெருமானுடைய திருவடிகளை நினைந்து அருள் பெற்று ஆனமாகி நின்ற தோள் நோக்க ஆடுவோம்.

1. **பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்**
   **பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே**
   **கூத்தா உன் சேவடி கூடும் வண்ணம் தோணோக்கம்.**

2. **பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்**
   **தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே**
   **சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவாறு**
   **எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ.**

3. **........ தென்னன் வார்கழலே நினைந்தடியோம்**
   **ஆனந்தக் கூத்தன் அருள் பெறில்நாம் அவ்வணமே**
   **ஆனந்த மாகிநின் ருடாமோ தோணோக்கம்.**

இன்னோரன்ன வகையில் அடிகளார் சிவபெருமானுடைய திருவடிச் சிந்தனை, வந்தனை, பூசை, வழிபாட்டால் தாம் பெற்ற இன்பம் வையகம் பெற்று உய்ய அனுபவ ஞானத்தை மெய்ஞ்ஞானத்தோடு குழைத்து வழங்கிய அருளாரமுதத்தை மூலபண்டாரமாக முகந்து கொண்டோம்.

இனிமேல் திருவாசகத்தில் மேலும் அடிகளார் அள்ளூறி அனுபவித்த திருவடி ஞானப் பேற்றினை மணிவாக்கால் பணியத் துணிந்து பிறவிப் பிணியைத் தணிப்போமாக.

## 20

*திருப்பெருந்துறையில் சிவபுராணத்தில்*

**"பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியன் நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டினார்"** என்று எடுத்து ஏத்துவார் எழில் வாதவூரர் நாயனார். அத்திருவருள் நிகழ்வைத் திருவண்டப் பகுதியைத் தில்லையில் பாடும் போது உறுதிப்படுத்துவது போல அமையும்.

**"புவனியிற் சேவடி தீண்டினன் காண்க**
**கண்ணால் யானுங் கண்டேன் காண்க."**
**"தாயான ஈசன் நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகன்"**
என்று திருக்கோத்தும்பியில் பாடுவார்.

**நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்**
**பேயேனது உள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை**
**சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்**
**தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ** — (226)

இவ்வாறாக அடிகளாரை அண்ணலாருடைய திருவடிகள் செய்பணிகளை திருவாசகத்திலிருந்தும் மணிவாக்குகளைப் பொறுக்கி எடுத்துப் போற்றுவாம்.

1. *ஊழி முதல்வ சயசய என்று*
   *வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்.*
2. *கதியடி யேற்குன் கழல்தந்*
   *தருளவும் ஊன் கழியா*
   *விதியடி யேனை விடுதிகண் டாய்.*
3. *பொய்யனேன் அகம்நெகப் புகுந்தமு தூறும்*
   *புதும லர்க்கழல் இணையடி பிரிந்தும்*
   *கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ.*
4. *செழுக்கமலத் திரளனநின் சேவடி*
5. *...... தட மலர்த்தாள்*
   *வாழிஎப் போதுவந் தெந்நாள்*
   *வணங்குவன்.*
6. *கருடக் கொடியோன் காண மாட்டாக்*
   *கழற்சே வடியென்னும் பொருளைத் தந்து.*
7. *கையால் தொழுதுன் கழற்சே வடிகள்*
8. *இரவும் பகலும் எழிலார்பாதப்*
   *போதாய்ந் தணைவ தென்று*
9. *பாடிப் பாடிப் பணிந்து பாதப்*
   *பூப்போ தணைவ தென்று*
10. *........ உன்னுடைய*
    *கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே*
11. *தேற்றமி லாதவர் சேவடி*
    *சிக்கெனச் சேர்மின்களே*
12. *சீருடைக் கழலே செல்வமே சிவபெருமானே*
13. *கரும்புதரு சுவை எனக்குக் காட்டினையுன் கழலிணைகள்*
14. *அடியேற்குன் பாதமலர் காட்டியவாறு*

15. வாக்கியலால் வார்கழல் வந்து
உற்றிறுமாந் திருந்தேன்
16. மருவினியை மலர்ப்பாதம்
17. பூங்கழல்கள் அவையல்லா தேவையாதும் புகழேனே
18. "உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே
19. தேடும் பொருளும் சிவன் கழலே எனத்தெளிந்து
20. தாட்செய்ய தாமரைச் சைவனுக்கு
21. பொன்னடி யிணை காட்டி
22. பொற்கழல் இணை காட்டி
23. திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிட
24. மென்மலர்க் கழல் காட்டி
25. தப்பி லாது பொற் கழல்களுக் கிடாதுநான்
26. விரை மலர்க் கழல் காட்டி
27. இணை மலர்க் கழல் காட்டி
28. தூய மாமலர்ச் சேவடிக்கண் நம்சென்னி
மன்னிச் சுடருமே.
29. வட்ட மாமலர்ச் சேவடி
30. பொங்கு மாமலர்ச் சேவடி
31. சேய மாமலர்ச் சேவடி
32. அத்தன் மாமலர்ச் சேவடி
33. திறமை காட்டிய சேவடி
34. வழுவிலா மலர்ச் சேவடி
35. செம்பொன் மாமலர்ச் சேவடி
36. சித்த மார்தருஞ் சேவடி
37. தன் கழல் காட்டி
38. பெய்கழல் அடி காட்டி
39. இணைமலர் அடி காட்டி
40. உயர்ந்த பைங்கழல் காண
41. பாதம் கண்டு கண்களி கூர
42. உடையான் கழல் புகவே
43. புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
44. புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
45. பூவார் கழல்

46. *சிவன் தாள் வணங்கி*

47. *ஆள்வான் பொன்னடிக்கே*

48. *திருப்புயங்கன் திருத்தாள்*

49. *போரப் புரிமின் சிவன் கழற்கு*

50. *வார் கழல்கள் வந்திக்க*

51. *ஆண்டான் இணையடி*

52. *அங்கமலப் பாதம்*

53. *நல்ல மருந்தினடி*

54. *கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு*
*களிப்பன ஆகாதே*

55. *உன்னடி யாரடி யோம்*

56. *மின்னே ரனைய பூங்கழல்கள்*

57. *தாயே என்றுன் தாளடைந்தேன்*

58. *தன் கழலே சேரும் வண்ணம்*

59. *முதலாய முதல்வன் தாள்*

ஆதியும் அந்தமும் மிலா அரும் பெருஞ் சோதியினுடைய திருவடித்தாமரை தரும் மெய்ப்பொருள் மெய்ஞ்ஞானத்தை வேதவாக்குப் போல மெய்த்தமிழ் அதனால் திருவாதவூரடிகளார் மொழிந்தருளிச் செய்தார். அனைத்துத் தோற்றத்திற்கும் நிலை பேற்றிற்கும் முத்திப் பேற்றிற்கும் பாதமலரே உயிரோவியம் என்னும் உண்மையை முன்னரே உணர்த்தினோம்.

பாதமலர் பாறையை உருக்கும். அஞ்ஞானத்தை அகற்றும். மெய்ஞ்ஞானத்தை நிலைபெறுத்தும். மும்மலங்களுடைய முனைப்பை நாசமாக்கும். நல்லன எல்லாம் தரும். அல்லன அனைத்தையும் அகல்விக்கும் இரும்பைப் பொன்னாக்கும். மறவாமையை மறப்பிக்கும். நிலையாமையை நினைப்பிக்கும். நிலை பேற்றை நிறுத்தும். என்றும் இன்பம் பெருக்கும் இயல்பினது.

திருவாதவூரடிகளார் திருவடி ஞானத்தால் அன்பின் ஐந்திணை இன்பம் பெற்றார். திருவடியைப் பொன்னே போல் போற்றினார். போற்றாதவரை போற்றும் நெறி காட்டினார். அந்த மெய்யாக மிளிர்கின்ற ஞானம் என்னும் உலகை வாழ்விப்பதாக.

**பாட வேண்டும் நான் போற்றி நின்னையே**
**பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்**
**காட வேண்டும் நான் போற்றி அம்பலத்**
**தாடு நின்கழற் போது நாயினேன்**
**கூட வேண்டும் நான் போற்றி இப்புழுக்**
**கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்**
**வீட வேண்டும் நான் போற்றி வீடுதந்**
**தருளு போற்றி நின் மெய்யர் மெய்யனே** (104)

சிந்திப் பரிய திருவடி ஞானத்தை இனி நாம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாதமலர் தலைக் கொண்டு உற்று உணர்வோமாக.

சீத வள வயற்புகலித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மலரும் தருணத்தில் மதுவுண்ணும் ஆசை கொள்ளும் வண்டுகள். வண்டுகள் மணம் தேனைப் பருகும் கொன்றை மலர் மாலையை அணிந்தவர் சிவபெருமான். சிவபெருமானுடைய திருவடி மலர்களே அன்றிப் பிறிதொன்றைப் பேணுதல் இல்லாதவர் சம்பந்தப்பிள்ளையார்.

அந்த உண்மையை அர்ச்சனை பாட்டேயாகப் பேணும் சுந்தர மூர்த்தி நாயனார் வாயிலாக அறியலாகும்.

**"வம்பறா வரிவண்டு மணநாற மலரும்**
**மதுமலர்க் கொன்றையா னடியலாற் பேணா**
**வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்.**

*- திருத்தொண்டத்தொகை -*

## 21

திருப்பழனத் திருநகரத்தில் சிவபெருமான் வேதம் ஓதுவர். வெண்ணூல் அணிவர். புலித்தோல் ஆடை புனைவர். வெள்ளை எருதின் மேல் எழுந்தருள்வார். பூதங்கள் சூழப் பொலிவோடு வருவார்.

பழன நகராரை நாதா என்றும் நக்கா என்றும் நம்பா என்றும் நின்று பாதம் பணிபவர்களுடைய பாவங்களைத் தீர்த்து வைப்பார்.

பாவங்கள் பற்றற்றால் பரகதிப் பயன் பெறலாம் என்று பகர வேண்டுவ தில்லை. அவ்வுண்மை தேவாரத்திலுள்ள நாலாவது வரியால் ஊகித்து உணர்ந்து கொள்ளத்தக்கது.

**வேத மோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப்**
**பூதஞ் சூழப் பொலிய வருவார் புலியி னுரிதோலார்**
**நாதா வெனவு நக்கா வெனவு நம்பா வெனநின்று**
**பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே** (1–67–1)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் உலகவர்க்கு உணர்த்தும் அருமை அது. சிவபெருமானுடைய திருவடிக்குச் செலுத்தும் அன்பினால் அடையும் பயனாகிய திருவடிப்பேற்றினை நன்கு சிந்திக்கச் செய்கின்றது அப்பாமாலைப் பாடல்.

**"காண்பார்யார் கண்ணுதலாய் காட்டாக் காலே,**
**அவனரு ளாலே அவன்தாள் வணங்கி**
**தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான்"**

போன்ற தமிழ் வேதமான திருமுறை ஞானமொழிக்கு ஒரு வடிவம் பெற்றவர் போன்று விளங்கியவர் முத்தமிழ் விரகர்.

ஞானப்பிள்ளையாருடைய மூன்றாம் ஆண்டுப் பராயத்தில் சிவபெருமான் திருவருளால் உமையம்மையார் சிந்திப்பரிய சிவஞான இனிய அமுதினைத் திருமுலைப்பாலுடன் குழைத்தருளிப் பாலமுதத்தினை உண்பாயாக என ஊட்டியருளினார். அருட்கண்ணர் பிள்ளையாருடைய அழுகை தீர்த்து அருள் புரிந்து ஆதரித்தார். அனைத்துப் புவனத்திலும் உள்ள உயிர்களுக்கும் அம்மை அப்பர் அளித்தருளியமையால் பிள்ளையார் சிவஞானத்தோடு சம்பந்தம் ஆயினார்.

பிள்ளையார் முன்னை நாளிலும், "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர்" (பெரியபுராணம் 1953) ஆதலினால் இம்மையிலும் திருப்பெருகும் திருவடி ஞானம் கைவரப் பெற்றார்.

ஞானப்பால் உண்டருளிய ஞானசம்பந்தர் அந்த வேளையில் தவமுதல்வராயினார். தவமுதல்வராயினமையினால் பிறவிக் கேதுவாகிய மல வாதனையை வேரற மாற்றும் ஞானமாகிய உணர்தற்கரிய மெய்ஞ்ஞானத்தையும் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்திப்பதால் செம்மை பெருகச் செய்யும் சிவஞானமாகிய ஒப்பற்ற கலைஞானத்தையும் உடனாகத் தாம் உணர்ந்து கொண்டார்.

"திருவடிஞானம் சிவமாக்குவிக்கும் என்னும் "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தோடு" ஒப்புநோக்க மெய்யார்கள் எப்போது எங்கிருந்து சொல்லும் உண்மைவாக்கு ஒரே தன்மைத்தாகும் என்னும் உண்மையை ஓர்ந்து இன்புறலாம்.

**சிவனடியே சிந்திக்கும்**
**திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை யறமாற்றும்**
**பாங்கினில்ஓங் கியஞானம்**
**உவமையிலாக் கலைஞான**
**முணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர்**
**தாமுணர்ந்தா ரந்நிலையில்** (1968)

தவமுதல்வர் சம்பந்தர் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் பன்னிரு திருமுறைகளில் முதலாம், இரண்டாம், மூன்றாந் திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. முதல் மூன்று திருமுறைகளிலும் வேண்டிய அளவு திருவடிப்பேறு, திருவடி ஞானம், திருவடி வணக்கம் இடம்பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்கு சீர்காழியில் அம்மை அப்பர் ஞானவாரமுது ஊட்டிய புறச்சான்றிற்கு அகச் சான்றாகச் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருவாக்கைத் துணைக் கொள்ளலாம்.

நாயனார் திருநனிபள்ளிப் பெருமான் மீது பாடும் பாமாலையில்,

**"ஊனமில் காழிதன்னுளுயர்**
**ஞான சம்பந்தர்க்கன்று**
**ஞானமருள் புரிந்தா**
**னண்ணு மூர் நனிபள்ளியதே** (7-97-9)

என்னும் திருவாக்குச் செம்மையில் நிற்பது.

காவி உடுத்தும் தாழ்சடை வைத்தும் காடுகள் புக்குத் தடுமாறியும் காய்கனி துய்த்தும் காயம் ஒறுத்தும் காசினி முற்றும் திரிந்தும் அடைய முடியாத அருந்தவத்தை நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தருடைய தமிழ் கற்று வல்லவருடைய அடிகளை வணங்குவதால் பெறலாம் என்பது குளிர்காழி ஞானசம்பந்தர் வாக்காகும்.

**"குளிர் காழியுணர் ஞான**
**சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுத றவமே.** (1-10-11)

வீட்டின்பமும் மெய்ஞ்ஞானமும் விரும்பியவர்கள் விரதங்கள் நோற்று வருந்தி நோன்பிருந்தும் அடையலாகாததை ஞானசம்பந்தருடைய ஞானச் செந்தமிழ் இசைபாடும் ஞானம் வல்லவர்களுடைய அடிகளை அடைவது மெய்ஞ்ஞானமாகும் என்று ஞான போனகரே நற்றமிழ் உரைப்பார்.

**வீடும் ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்**
**வாடி ஞானமென் னாவதும் எந்தை வலஞ்சுழி**
**நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை**
**பாடும் ஞானம்வல் லாரடி சேர்வது ஞானமே.**

(திருவலஞ்சுழி, இரண்டாம் திருமுறை)

## 22

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய ஞானத்தமிழ் வல்லவருடைய அடியைப் பேணுதல் தவமாகும். ஞானசம்பந்தருடைய செந்தமிழைக் கொண்டு இசை பாடும் ஞானம் வல்லவர்களுடைய அடியை அடைவது ஞானம். தவத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் தரவல்ல ஞானத்தமிழைத் தந்தருளிய முத்தமிழ் விரகர் சிவபெருமானுடைய திருவடியில் வைத்த பக்தியை யார் அளவிட வல்லார்?

சுந்தரமூர்த்திநாயனார் ஒருவரால் தான் அது ஆகும். ஆன தன்மைராதலினால் தான் ஞானக்குழந்தையினுடைய திருவடி ஞானத்தைத் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தில் வெளிப் படுத்தினார்.

"எம்பிரான் சம்பந்தன் வம்பறா வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்கள் கொன்றையா னடியலாற் பேறான்" என்று 'அடியலால் பேறான்' என்று அறுதி இட்டு உறுதிப்படுத்தினார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநீல கண்டப் பெருமானாரு டைய திருவடி அன்பால் திருப்பெருகு சிவஞானம் அணையப் பெற்றார். திருப்பெருகு சிவஞானம் பர அபர ஞானங்கள் எய்தப் பெற்றார். அப்பர முனிவர் அருந்தமிழால் உரைத்த திருவடி ஞானத்தமிழ் இன்ப உலகில் நுழைவோம்.

சம்பந்தப் பிள்ளையாருடைய சிந்திப்பரிய திருவடி ஞானப் பெருமை அவர் அருளிச் செய்த நற்றமிழில் நிறையக் காணலாம். அவற்றில் கவுணிய குல தீபர் தாம் பெற்ற திருவடி இன்ப ஞானத்தைப் பாடியுள்ளார். அடியார்களுடைய இடர்களைக் களையுமாறு இறைவனிடத்தில் வேண்டுதல் செய்து பாடியுள்ளார். சிவலோக நெறி நடப்பதற்கு வழிகாட்டிப் பாடியுள்ளார். வழித்துணையாக வகுத்துப் பாடியுள்ளார். பிறவித்துயர் தீர்க்கப் பாடியுள்ளார் என்றும் இன்புற்று அன்புற்றிருக்கப் பாடியருளியுள்ளார். இவ்வாறு பலபட விரித்துப் பாடிய பதிகங்களில், பாடல்களில், சொற்றொடர் வாக்குகளிலிருந்து ஒரு சிலவற்றை எடுத்து அடைவுபட ஆசையால் காட்டுகின்றோம்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தநாயனாருடைய சொற்றமிழ் முதலாம் திருமுறையில் நாற்பதாவது நற்பதிகம் திருவாழ்கொளி புத்தூரில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் வண்டமர் பூங்குழலி சமேத மாணிக்கவண்ணர் பெருமான் மீது பாடப்பெற்றது.

'கல்லுயர் மாக்கட னின்றுமு ழங்கும்
　　கரைபொரு காழிய மூதூர்
நல்லுயர் நான்மறை நாவி
　　னற்றமிழ் ஞானசம் பந்தன்
வல்லுயர் சூலமும் வெண்மழு வாளும்
　　வல்லவன் வாழ்கொளி புத்தூர்ச்

சொல்லிய பாடல்கள் ஒவ்வொன்றும் சக்தியோடு சிவத்தையும் இணைத்து இசைக்கப் பெற்றவை. வாசனை மிக்க உகந்த மலர்கள் இட்டு இறைவனுடைய திருவடிகளைக் காண்போம் - சேர்வோம் - சார்வோம் என்று பாடல்கள் நிறைவுபெறுவன, துன்பிலா இன்ப அன்பு மிக்க அடியார்களையும் இணைத்துக் கூட்டு வழிபாடாகப் பாட்டமைந்திருப்பது சிந்தனையிற் கொள்ளத் தக்கது.

1. *வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாக*
　　*மாயவன் வாழ்கொளி புத்தூர்க்*
　*கடிகமழ் மாமல ரிட்டுக்*
　　*கறைமிடற் றானடி காண்போம்.*

2. *வரைகெழு மங்கைய தாகமோர் பாக*
　　*மாயவன் வாழ்கொளி புத்தூர்*
　*விரைகமழ் மாமலர் தூவி*
　　*விரிசடை யானடி சேர்வோம்.*

3. *வாணெடுங் கண்ணுமை மங்கையோர்*
　　*மாயவன் வாழ்கொளி புத்தூர்த்*
　*தாணெடு மாமல ரிட்டுத்*
　　*தலைவன தாணிழல் சார்வோம்*

4. *வாரிடு மென்முலை மாதொரு பாக*
　　*மாயவன் வாழ்கொளி புத்தூர்க்*
　*காரிடு மாமலர் தூவிக்*
　　*கறைமிடற் றானடி காண்போம்.*

5. *வனமுலை மாமலை மங்கையொர் பாக*
　　*மாயவன் வாழ்கொளி புத்தூர்*
　*இனமல ரேய்ந்தன தூவி*
　　*எம்பெரு மானடி சேர்வோம்.*

6. *வளையொலி முன்கைம டந்தையொர் பாக*
　　*மாயவன் வாழ்கொளி புத்தூர்த்*
　*தளையவிழ் மாமலர் தூவித்*
　　*தலைவன தாளிணை சார்வோம்.*

7. *மடனெடு மாமலர்க் கண்ணியொர் பாக*
*மாயவன் வாழ்கொளி புத்தூர்த்*
*தடமல ராயின தூவித்*
*தலைவன தாள்நிழல் சார்வோம்.*

8. *வயல்விரி நீலநெ டுங்கணி பாக*
*மாயவன் வாழ்கொளி புத்தூர்ச்*
*சயவிரி மாமலர் தூவித்*
*தாழ்சடை யானடி சார்வோம்.*

9. *வரியர வல்குல்ம டந்தையொர் பாக*
*மாயவன் வாழ்கொளி புத்தூர்*
*விரிமல ராயின தூவி*
*விகிர்தன சேவடி சேர்வோம்.*

10. *வண்டமர் பூங்குழல் மங்கையொர் பாக*
*மாயவன் வாழ்கொளி புத்தூர்த்*
*தொண்டர்கண் மாமலர் தூவத்*
*தோன்றிநின் றானடி சேர்வோம்.*

கடிகமழ் மாமலரும் விரைகமழ் மாமலரும் தாணெடு மாமலரும், காரிடு மாமலரும் இனமலர் ஏய்ந்தனவும் தளையவிழ் மாமலரும், தடமல ராயினவும் சயவிரி மாமலரும் விரிமலராயினவும் தூவித் தொழும் திருவடிவணக்கச் சிறப்பு இருந்தவாறு என்னே!

## 23

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தமது வழிநடைச் சிவ வழிபாட்டில் திருவாவடுதுறைத் திருத்தலத்தில் தங்கியிருந்தார். தாதையாராகிய சிவபாதவிருதயர் சீர்காழிக்குச் செல்வதற்கு சிந்தை மனம் வரித்தார். வேள்விக்குரிய அரும்பொருளைப் பெறுதல் வேண்டும் என்று சண்பையர் தலைவர் எதிரில் நின்று எடுத்து இயம்பினார். தந்தையார் மொழியக் கேட்டலும் தனயனார் முன்னைநாளில் தாம் மொழிந்தமையை நினைவு கூர்ந்தார். திருவருளைத் திருவுளங் கொண்டார். "அந்த மில்லாத பொருள் ஆயுள்ளது திருவாவடு துறையுள் எமது இறைவருடைய திருவடித் தலங்கள் அன்றோ" என்னும் சிந்தனையை உள்ளத்தில் உணர்ந்து எழுந்தார்.

இறைவனுடைய திருவடிகள் என்றும் அழிவில்லாதன. குறைவில்லாதன, நிறைவாக நிற்பன. பண்டும் இன்றும் என்றும் உள்ளன. எந்தையாருடைய அடித்தலங்களை வழுத்தும் பொருட்டுத் திருமடத் திலிருந்தும் எழுந்தருளினார். திரு ஆவடுதுறைத் திருக்கோயிலினுள் சென்றருளினார்.

தேவாதி தேவர் மகிழ்ந்தருளும் திருமுன்பு சென்று நின்றார். பெரும் நிதியினை வேண்டினார்க்குக் கொடுப்பதற்கு பொருள் ஒன்றும் இல்லேன். மெய்ப்பொருளாகும் பெருமானாருடைய திருவடிகளே அன்றிப் பற்றுக்கோடு பிறிதொன்று உணரேன்.

இறைவனுடைய பேரருளினை வினாவும் தன்மையான கருத்துக் கொண்ட செந்தமிழ்ப் பதிகத்தினைப் பாட எடுத்து அருளினார். நிறைந்த பேரன்பால் வள்ளலாருடைய திருவடி இணையை வாழ்த்தினார். செந்தமிழ் மாலையில் தொடுத்த ஒவ்வொரு திருப்பாடலிலும் திருவடிகளை ஏத்தும் இன்பமே இன்பம். அன்பே அன்பு. திருவருளே திருவருள் - காண்க.

*1. இடரினும் தளரினு மெனதுறுநோய்*
*தொடரினு முனகழ றொழுதெழுவேன்*
*கடறனி லமுதொடு கலந்த நஞ்சை*
*மிடறினி லடக்கிய வேதியனே*
*இதுவோ வெமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்*
*அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே*

*2. வாழினும் சாவினும் வருந்தி னும்போய்*
*வீழினும் உனகழல் விடுவே னல்லேன்*

*3. தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்*
*அம்மலர் அடியலால் அரற்றா தென்நா*

*4. கையது வீழினும் கழிவுறினும்*
*செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்*

*5. வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்*
*எந்தாயுன் அடியலால் ஏத்தாதென் நா*

*6. வெப்பொடு விரவியோர் வினைவரினும்*
*அப்பாவுன் னடியலால் அரற்றாதென்நா*

*7. பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்*
*சீருடைக் கழல்அலாற் சிந்தைசெய்யேன்*

*8. உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்*
*ஒண்மல ரடியலால் உரையாதென் நா*

*9. பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்*
*அத்தாவுன் அடியலால் அரற்றாதென் நா*

மானுட வாழ்க்கையில் வாராத துன்பம் எது வந்தாலும் திருவடி ஞானத்தை நான் மறவேன் என்னும் அமுத வாக்கை இதயம் குளிர உறுதியோடு உணர்த்தி அருளுகின்றார் - வேதநெறி தழைத்தோங்க

மிகுசைவத் துறைவிளங்கப், பூதபரம்பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தமுத சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்.

சிவஞானசம்பந்தப் பிள்ளையாருடைய திருவடி ஞானத்திற்கு ஏற்பத் தந்தையாருடைய பெயரையும் ஈண்டு ஒப்பிட்டுப் பார்த்தல் மிகப் பொருத்தம். சிவபெருமானுடைய திருப்பாதத்தை இருதயத்தில் தரித்தவர் சிவபாதவிருதயர்.

ஆளுடைய பிள்ளையார் அங்கணருடைய அடிமலர் அகலா அன்பினை அருள்மழையாக அள்ளிச் சொரிந்தார். ஆவடுதுறை வள்ளல் அருளாது ஒழிவாரா?

இறைவருடைய திருவருளினால் சிவபூதம் விரைவில் வந்தது. பலிபீடத்தின் உச்சியின் மேல் ஆயிரம் பசும் பொன் கிளி ஒன்றினை வைத்தது.

"வைத்த இக்கிளி பொன் கொண்டது. எடுக்க எடுக்கக் குறையாத பொன் இது. இறைவன் உமக்கு அருள் செய்ததாகும்."

அவ்வார்த்தை கேட்டுச் சிவபிரானைச் சேவித்தார் சிவஞானக் கன்று. அப்பொற்கிளியைத் தந்தையார் கையில் சிவயாகம் செய்யும் பொருட்டு ஒப்புவித்தார் முத்தமிழ் வித்தகர்.

பெருகிய தமிழ்விரகினன் திருக்கழுமல சிவனடி பரவிய பிணை மொழியன இவை:

1. *நறையணி மலர்நறு விரைபுல்கு*
   *நலமலி கழறொழல் மருவுமே.*

2. *மணிபடு கறைமிட றனைநல*
   *மலிகழ லிணைதொழன் மருவுமே.*

3. *கனைகட லடைகழு மலமமர்*
   *கதிர்மதி யினனதிர் கழல்களே.*

4. *கழுமல மமர்கன லுருவின*
   *னடியிணை தொழுமவ ரருவினை*
   *எழுமையு மில.*

5. *இமையவர் தொழுகழு மலமம*
   *ரிறைவன தடிபர வுவர்தமை*
   *நமையல வினைநல னடைதலி*
   *லுயர்நெறி நனிநணு குவர்களே.*

## 24

எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட் டெமையாளும் சம்பந்தன் காழியர் கோன் அடியார்களிடத்தில் ஆரா அன்பு மிக்கவர். அடியார் இடுக்கண்டு தரியாதவர். அடியவர்களுடைய துன்பங்களைத் துடைத்தருளச் சிவபெருமானுடைய திருவடிகளினிடமாக வேண்டுதல் செய்வதில் முன்னிற்பவர்.

திருநெடுங்களம் என்னும் திருத்தலத்தில் மேவியுறைந்தருளும் ஒப்பிலாநாயகி உடனுறையும் நித்தியசுந்தரர் பெருமானிடத்தில் பத்தியோடு குறையுடையார் குற்றம் ஓராமல் கொள்கையினா லுயர்ந்த நிறையுடையார் இடர்களை விண்ணப்பிக்கும் பண்ணிசை பரித்த தண்தமிழ் தொடர் இவை:

*1. பொன்னடியே பரவிநாளும்*
*பூவொடு நீர் சுமக்கும்*
*நின்னடியார் இடர்களையாய்*
*நெடுங்களமே யவனே.*

*2. தலைபுரிந்த பலிமகிழ்வாய்*
*தலைவநின்றா ணிழற்கீழ்*
*நிலைபுரிந்தா ரிடர்களையாய்*
*நெடுங்களமே யவனே.*

*3. . . . . . . தொழுகழலே வணங்கித்*
*தாங்கிநில்லா வன்பினோடுந்*
*தலைவநின்றா ணிழற்கீழ்*
*நீங்கிநில்லா ரிடர்களையாய்*
*நெடுங்களமே யவனே.*

*4. அருத்தனாய ஆதிதேவ*
*னடியிணையே பரவும்*
*நிருத்தகீத ரிடர்களையாய்*
*நெடுங்களமே யவனே.*

*5. கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான்*
*கேடிலாப்பொன் னடியின்*
*நீழல்வாழ்வா ரிடர்களையாய்*
*நெடுங்களமே யவனே.*

*6. துஞ்சலில்லா வாய்மொழியாற்*
*றோத்திரநின் னடியே*
*நெஞ்சில் வைப்பா ரிடர்களையாய்*
*நெடுங்களமே யவனே.*

திருக்கரவீரம் என்னும் திருக்கோயிலுள் குடிகொண்டிருப்பவர் பிரத்தியட்சமின்னம்மை சமேத கரவீரநாதர். அப்பெருமானுடைய திருவடிப் பெருமையை உலகவர்க்கு உரைக்கும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய நற்றமிழ் இவை. அவற்றைப் படிப்பார்க்கு இல்லையாம் பாவமே.

1. *அரியு நம்வினை யுள்ளன வாசற*
   *பெரிய வன்கழல் பேணவே.*

2. *தங்கு மோவினை . . . . . .*
   *சங்க ரன்கழல் சாரவே.*

3. *ஏதம் வந்தடை யா*
   *நாதன் பாத நணுகவே.*

4. *பறையு நம்வினை யுள்ளன பாழ்பட*
   *இறைய வன்கழ லேத்தவே.*

5. *கழலி னாருறை யுங்கர வீரத்தைத்*
   *தொழவல் லார்க்கில்லை துக்கமே.*

திரு அம்பர் மாகாளத்தில் அருளாட்சி ஆள்பவர் பட்சநாயகி உடனுறை பரமர் காளகண்டேசுவரர். அப்பெருமானாருடைய திருவடிகளைச் சார வினை சாரா. அல்லல் அடையா, "வெருநீர் கொளவோங்கும் வேணு புரந்தன்னுள் திருமா மறைஞான சம்பந்தன உருகி உரை செய்யும் ஒண்தமிழ் இவை:

1. *சடையான் கழலேத்தச்*
   *சாரா வினைதானே.*

2. *ஊனார் தலைதன்னிற்*
   *பலிகொண் டுழல் வாழ்க்கை*
   *ஆனான் கழலேத்த*
   *வல்ல லடையாவே.*

3. *நரையார் விடையூரு*
   *நம்பான் கழனாளும்*
   *உரையா தவர்கண்மே*
   *லொழியா வூனம்மே.*

4. *எந்தை கழலேத்த*
   *இடர்வந் தடையாவே.*

5. துணியா ருடையினான்
துதைபொற் கழனாளும்
பணியா தவர்தம்மேற்
பறையா பாவம்மே.

6. விண்டார் புரம்வேவ
மேருச் சிலையாகக்
கொண்டான் கழலேத்தக்
குறுகா குற்றம்மே.

7. கிளருஞ் சடையண்ணல்
கேடில் கழலேத்தத்
தளரும் முறுநோய்கள்
சாருந் தவந்தானே.

8. இலையார் திரிசூலப்
படையான் கழனாளும்
நிலையா நினைவார்மேல்
நில்லா வினைதானே.

9. இறையான் கழலேத்த
வெய்தும் மின்பம்மே
அருள் ஆக மருள் மாய சிவனடி சிந்தை
செய்மின்.

## 25

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடையத் திறம்பயில் ஞானசம்பந்தன செந்தமிழ் கொண்டு இமையவர் கோனடிக்கண் கும்பிடுவோம் வாரீர்!

கைவினை செய்து சிவபெருமான் திருவடி சேவிக்கச் செய்வினை தீவினை வந்து தீண்டப்பெறமாட்டாது. ஞானத்தமிழால் அவ்வுண்மையை நிலைநாட்டுதும்.

1. கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டபெ
றாதிரு நீலகண்டம்.

2. பூவினைக் கொய்து மலரடி
போற்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா

*3. கண்ணிமை யாதன மூன்றுடை*
*யீருங் கழலடைந்தோம்*
*திண்ணிய தீவினை தீண்டப்பெறா*

*4. சொற்றுணை வாழ்க்கை துறந்துந்*
*திருவடி யேயடைந்தோம்*
*செற்றெமைத் தீவினை தீண்டப்பெறா*

*5. பிறப்பில் பெருமான் திருந்தடிக்*
*கீழ்ப்பிழை யாதவண்ணம்*
*பறித்த மலர்கொடு வந்துமை*
*யேத்தும் பணியடியோம்*
*சிறப்பிறித் தீவினை தீண்டப்பெறா.*

*6. கருவைக் கழித்திட்டு வாழ்க்கை*
*கடிந்துங் கழலடிக்கே*
*உருகி மலர்கொடு வந்துமை*
*யேத்துது நாமடியோம்*
*செருவிலித் தீவினை தீண்டப்பெ*
*றாதிரு நீலகண்டம்.*

*7. பூக்கமழ் கொன்றைப் புரிசடை*
*யீரடி போற்றுகின்றோம்*
*தீக்குழித் தீவினை தீண்டப்பெ*
*றாதிரு நீலகண்டம்.*

அடியார் ஈட்டம் கூட்டமாகிக் கூடி ஆற்றும் வழிபாடாக அமைந்திருப்பது அத்திருப்பதிகம், நாமடியோம், போற்றுகின்றோம் போன்ற பதப்பொருள் பன்மை விகுதிப் பொருளைப் புலப்படுத்தின.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் உலகவர் உய்ந்து கடைத்தேறுவதற்கு நல்லுபதேசம் செய்வது போலத் திருமயேந்திரப்பள்ளியுள் அரவரை அழகனை அமுதவாக்கு என்னும் தேன்மழை பொழிந்துள்ளார்.

வடிவாம்பிகை உடன் உறை திருமேனியழகர் திருவடிகளைப் பணிந்து உய்ம்மின்கள் என்று பணித்தருளும் பரிவினை ஒரு தரம் பணியலாமே — பரமுனிவர் பாதங்களை.

**நம்பனார் கழலடி ஞானசம் பந்தன்சொல்**
**நம்பர மிதுவென நாவினால் நவில்பவர்**
**உம்பரார் எதிர்கொள உயர்பதி அணைவது**
**உறுதி அன்றோ!**

1. அரவரை அழகனை அடியிணை பணிமினே
2. செண்டுசேர் விடையினான் திருந்தடி பணிமினே
3. ஆங்கிருந் தவன்கழல் அடியிணை பணிமினே
4. எங்கள்நா யகன்றன திணையடி பணிமினே
5. கைத்தல மழுவனைக் கண்டடி பணிமினே
6. அந்தமிழ் அழகனை அடிபணிந் துய்ம்மினே
7. அடல்விடை யுடையவன் அடிபணிந் துய்ம்மினே
8. அரவமர் சடையனை அடிபணிந் துய்ம்மினே
9. யோகனைந் தவன்கழல் உணர்ந்திருந் துய்ம்மினே
10. இடமுடை ஈசனை இணையடி பணிமினே

கன்னி மதில் மருங்குமுகில் நெருங்குகமு மலமூதூர் கவுணிய குல தீபராதலினால் மேலாம் சைவம் விளங்கச் சிவன் கழலில் சிந்தை செலுத்தச் செப்புகின்றார் செந்தமிழ். கந்தமார் பொழிற் காழியுள் ஞானசம்பந்தன் நல்ல செந்தண் பூம்பொழிற் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடிச் சந்தமாச் சொன்ன செந்தமிழ் செப்பிச் சப்புங்கள். சிவலோகத்தில் சிவபெருமான் திருவடி சேரலாம் எனத் திருக்கடைக் காப்பில் வைத்தருள்வார்.

1. ..........வெண் ணெய்ப்பெரு மானடி
ஞானமா கந்நினை வார்வினை
யாயின நையுமே

2. . . . . . வெண் ணெய்ப்பெரு மானடி மேவியே
அடைந்துவா ழும்மடி யாரவர் அல்லல் அறுப்பரே

3. . . . . . வெண் ணெய்ப்பிரான்
பால வண் ணன்கழ லேத்தநம் பாவம்ப றையுமே

4. . . . . . வெண் ணெய்ப்பி ரான்விரை யார்கழல்
சிந்தைசெய் வார்வினை யாயின தேய்வது திண்ணமே

5. வெண் ணெய்ப்பிரான் னடிமேவவே
தங்குமேன் மைசர தந்திரு நாளுந்த கையுமே

6. . . . . . வெண்ணெய்ப் பெருமானடி
கண்டிரைத் தும்மன மேமதி யாய்கதி யாகவே

7. சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடி
உன்னிநீ டம்மன மேநினை யாய்வினை ஓயவே

8. “. . . . . சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடி
உற்று நீநினை யாய்வினை யாயின ஓயவே

*9. . . . . . . சிக்கல் வெண்ணெய்ப் பெருமான்செழு*
*மாமறைப் பட்டன் சேவடி*
*யேபணி மின்பிணி போகவே*
*திருச்சிக்கலில் வெண்ணெய்ப் பிரானடி*
*வாழ்த்தும் வாழ்த்தே — வாழ்வு மிகுத்து வரும்.*

## 26

ஞானத்தின் திருவுருவம் நான்மறையின் தனித் துணையும் வானத்தின் மிசை அன்றி மண்ணில் வளர் மதிக் கொழுந்தும் தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும் கானத்தின் எழுபிறப்புமான காழிநகர்க் கற்பகம் அனையார் திருமாகறல் மாதேவருடைய திருவடிகளை உணர்த்தும் பண்பு பத்தியை வளர்க்கும் பாவத்தைப் போக்கும், முத்தியைக் கொடுக்கும், முன்வினையைக் கெடுக்கும். தொல்வினை இல்லையாகும் எளிதில்.

கடைகொள்நெடு மாடமிக வோங்குகமழ் வீதிமலி காழியர்கோன் அடையும்வகை யாற்பரவி யரனையடி கூடுசம்பந்தன் புவனநாயகி உடனுறை அடைக்கலங் காத்தநாதர் மாகறலுளார் அடிகளை ஆதரித்து ஏத்திய அருந்தமிழ் பத்தும் வல்லார்கள் தொல் வினைகள் உடன் நில்லகில்லாவே.

*1. செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள்*
*தீவினைகள் தீருமுடனே*

*2. அலைகொள்புன லேந்துபெரு மானடியை*
*யேத்த வினை யகலுமிகவே*

*3. பாலையன நீறுபுனை வானடியை*
*யேத்தவினை பறையு முடனே*

*4. கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி*
*செஞ்சடையி னானடியையே*
*நுங்கள்வினை தீரமிக ஏத்தி*
*வழிபாடு நுகரா வெழுமினே*

*5. நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி*
*யாரைநலி யாவினைகளே*

*6. ஐயனடி சேர்பவரை அஞ்சியடை*
*யாவினைகள் அகலுமிகவே*

7. சாயவிர லூன்றியஇ ராவணன
நின்ற பெருமான் ஆயபுக
ழேத்தும்அடி யார்கள்வினை
யாயினவும் அகல்வதெளிதே

8. ஆலும்விடை யூர்தியுடை அடிகளடி
யாரையடை யாவினைகளே.

பூமலர் இட்டுப் பாதமலர் பணிவதற்கு எளியதாய் பாமலர்த் தொகுப்பு இவை. தொண்டரானீர் பாடுமின், பணிமின், பரவுமின், தொழுது சூடுமின் திருவடிப் போது.

1. முதல்வன் பாதமே பற்றா நின்றாரைப்
பற்றா பாவமே.

2. சிற்றம் பலமேய இறைவன் கழலேத்தும்
இன்பம் இன்பமே.

3. செல்வன் கழலேத்துஞ்
செல்வம் செல்வமே.

4. பெருமான் கழலற்றாற்
பேணா துள்ளமே.

5. நட்டப் பெருமானை
நாளுந் தொழுவோமே.

6. கழற் சேவடிகை தொழக்
கோலத்தாயரு ளாய்.

7. காதலாற்கழற் சேவடிகை தொழ
அம்பலத்துறை வான்அடியார்க்
கடையா வினையே.

8. கழற் சேவடிகைதொழ
இல்லையாம் வினைதான்.

9. சிற்றம்பலம் மேயினாய்கழ லேதொழு.
தெய்துதும் மேலுலகே

10. காதலாற்கழற் சேவடிகைதொழ
உற்றவருலகின் னுறுதிகொள வல்லவரே.

11. இன்புறும் எந்தை இணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே.

12. நாதனை நல்லூர்ப் பெருமணம் மேவிய
வேதன தாள்தொழ வீடெளி தாமே.

13. சூலம்வல் லான்கழல் சொல்லு வோமே.

14. கொன்றைமாலை வார்சடை யான்கழல்
வாழ்த்து வோமே.

15. ". . . . . கடம்பூரில் தானமர் கொள்கையி னானைத்
தாள்தொழ வீடெளி தாமே,

16. ". . . . . கடம்பூரில் பைங்கண்வெள் ளேற்றண்ணல்
பாதம் இரவும் பகலும் பணிய
இன்பம் நமக்கது வாமே.

17. புலியதளாடை புனைந்தான் பொற்கழல்
போற்றுதும் நாமே.

18. புலியதளா டையினான்றன் புனைகழல்
போற்றல் பொருளே.

19. அணங்கி னோடிருந் தானடி
யேசர ணாகுமே.

20. ஆளும் ஆதிப்பி ரானடி
கள்ளடைந் தேத்தவே
கோளும் நாளவை போயறும்
குற்றமில் லார்களே.

21. புலியின் ஆடையி னானடி
யேத்திடும் புண்ணியர்
மலியும் வானுல கம்புக
வல்லவர் காண்மினே.

22. எம்பி ரானிமை யோர்தொழு
பைங்கழல் ஏத்துதல் செய்வோமே.

23. மருத வானவர் வழிபடு மலரடி
வணங்குதல் செய்வோமே.

24. எயிலெய்தவன் நிரைகழல் பணிவோமே.

25. நாதனார் திருவடி
நாளும்நின் றேத்துமே.

## 27

26. . . . . . . கோட்டாற்றில் இருந்த
எம்பெரு மானை யுள்கி
இணையடி தொழு தேத்தும் மாந்தர்கள்
வருந்து மாறறியார் நெறிசேர்வர் வானூடே.

27. ". . . . . . கோட்டாற்றுள் என்றும்
மன்னிய எம்பி ரான்கழல்
ஏத்தி வானர சாள வல்லவர்
பொன்று மாறறியார்
புகழார்ந்த புண்ணியரே.

28. அடிகளாரத் தொழுதேத்த நின்றவ் வழகன்

29. தொழுகழல் உற்றவர் உறுபிணி யிலரே

30. தொழுகழல் உள்ளுதல் செயநலம் உறுமே

31. எங்கள்பெம்மான் அடிபரவ நாளுமிடர் கழியுமே

32. . . . . பூம்புக லூர்த்தொண்டர் போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும்
வர்த்தமா னீச்சரத் தாரே.

33. கன்னலில் தோள் சிறுத்தொண்டன்
கணபதீச் சரமேய இன்னமுதன்
இணையடிக்கீழ் எனதல்லல் உரையீரே.

34. அண்ணல் சேவடி யடைந்தனம்
அல்லலொன் றிலமே.

35. ஆதி சேவடி யடைந்தனம்
அல்லலொன் றிலமே.

36. அறவன் சேவடி யடைந்தனம்
அல்லலொன் றிலமே.

37. அத்தன் சேவடி யடைந்தனம்
அல்லலொன் றிலமே.

38. ஆடு வானடி யடைந்தனம்
அல்லலொன் றிலமே.

39. பரமேட்டி பாதம் காலையும் மாலையும் போய்ப்
பணிதல் கருமமே.

40. . . . . நம்பான்றன் அடிநினைந்து
மாலூருஞ் சிந்தையர்பால்
வந்தூரா மறுபிறப்பே.

41. தஞ்சமில்லாத் தேவர்வந்துன் தாளிணைக்கீழ்ப்
பணிய நஞ்சையுண் டாய்.

42. "தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை.

43. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்.

44. விமலனார் கமலமார் பாதர்.

45. குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

46. முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே.

47. அல்லல் ஆசறுத் தரனடி யிணைதொழும்
அன்பராம் அடியாரே.

48. அடிகளை யடிபணிந் தரற்றுமின் அன்பினால்
இடிபடும் வினைகள் போய் இல்லைய தாகுமே.

49. . . . . . புன வாயிலில் இருந்தவன் தன்கழல்
ஏத்துவார் கட்கிட ரில்லையே.

50. நாதனை யடிதொழ நன்மை யாகுமே.

51. ஞானனை யடிதொழ நன்மை யாகுமே.

52. நந்தியை யடிதொழ நன்மை யாகுமே.

53. வினைநாசனை யடிதொழ நன்மை யாகுமே.

54. பெருந்தகை யடிதொழப் பீடை யில்லையே.

55. *நறுமலர் அடி தொழ நன்மை யாகுமே.*

56. *அறைமல்கு கழல்தொழ அல்லல் இல்லையே.*

57. *பூவணம் கண்டவர் அடிதொழு தேத்தல் கன்மமே.*

58. *வானவர்க ளேத்தி யடிபணியும்*
*திருநணாவே.*

59. *தேனார் மலர்கொண் டடியார்*
*அடி வணங்குந் திருநணாவே.*

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய சிந்திப்பரிய திருவடிப் பெருமை,

மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணாமையோடு பெரிதும் தொடர்பு பூண்டது, ஞானக்குழந்தையின் தந்தையார் சிவபிரானுடைய பாதத்தை இருதயத்தில் பதித்தவர். நற்றமிழ் வல்ல ஞானப் பிள்ளையார் முன்னைய நாளில் பண்டு திருவடி மறவாப் பான்மையர்.

இந்நாளில் "எந்தையார் இணையடி யென்மனத் துள்ளவே" என்னும் அமுத வாக்கு அகச் சான்று பகரும்.

தவமுதல்வர் சம்பந்தர் தாம், பவமதனை யறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் உணர்த்தும் திருப்பெருகு சிவஞான சிவனடிச் சிந்தையாளர்.

போதம் தழுவும் நிலை முடிந்தமையினால் சிவானந்த அத்துவித முத்தி கூடியருளுவதற்கு, (3151)

மணவாட்டியுடனாக அழிவில்லாத சிவபெருமானுடைய திருவடிகளைச் சேர்வேன் என்னும் ஆசைகொண்டார் (3140)

முன்னை நாளில் தமது திருவடியில் ஆளாகக் கொண்டமைக்கு அமைவாக நவமலர் திருவடியை அடைவிக்கும் மெய்யுணர்வு திருவுள்ளத்தில் அடையப் பெற்றார் (3142)

முத்தமிழ் விரகர் திருவடி மறவாப் பான்மையோராய் திருவடி நீழலில் புக்கு ஒன்றி உடனானார் என்னும் உண்மை சிந்தனையின் பாற்படும்.

## 28

திருநாவுக்கரசு நாயனார் திரு அதிகைக் கெடில வீரட்டானத்தில் உறையும் திரிபுரசுந்தரி அம்மை உடனான திருவீரட்டேசுவரர் திருவடிகளைத் தலையினால் வணங்கி, வாயினால் வாழ்த்திக் கைகளால் கூப்பிக் கால்களால் வலம் வருதலும் தம்பிரான் திருவருளால் தமிழோடிசை பாடல் சாத்தும் உள்ளுணர்வு உணரப்பெற்றுப் பாமாலை பாடியருள்வார். அக்கணமே "வயிற் றினகம் படியே குடரோ டுதொடக் கிமுடக் கியிட ஆற்றாத சூலைநோய் அகன்றது. மருணீக்கியார் மாதேவருடைய கருணைப் பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைத்தார்.

"மயிர்ச் சாந்து மணம் கமழும் நறிய கூந்தலினையுடைய திரிபுரசுந்தரி அம்மையாருடைய நித்தமணாளருடைய திருவடித் தாமரைகளை வந்து அடையும் இந்தப் பெருவாழ்வினைப் பெறத் தந்த சூலைநோயினுக்கு நான் செய்யும் கைம்மாறு தான் என்னுளது?" என்று மகிழ்ந்து தொழுதார்.

திருநாவுக்கரசு நாயனாருடைய வயிற்றினிடத்துத் தங்கிய கொடிய சூலைநோய் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்க வைத்தது. வணங்கிய நாவரசருக்குச் சிவபெருமான் தமிழோடிசை பாடப் பணித்தார். பதிகம் பாடிய பாவலருக்குச் சிவபெருமான்:

**"பாவுற் றலர்செந் தமிழின் சொல்வளப்**
**பதிகத் தொடைபா டியபான் மையினால்**
**நாவுக் கரசென் றுலகே ழினுநின்**
**னன்னா மநயப் புறநண் ணுக"**

என்று எல்லோரும் வியப்படைய மேகந் தவழும் வானிடமாக அசரீரி அமுதவாக்கு ஒலித்தது.

வாகீசமுனிவர் மருணீக்கியானார், மருணீக்கியார் தருமசேனர் ஆனார். அன்றிலிருந்து திருநாவுக்கரசு என்னும் நன்னாமத்தினரானார்.

"இத்தனை நீண்ட காலமும் சித்தத்தினுள் விளங்கிய தீவினையே அடையத்தக்க பெரும்பேறு இதுவோ! என்று அன்று முதலாக இறைவனுடைய புகழையே பாமாலை பாடும் பணியாக ஏன்று கொண்டருளினார். மதுரவாக்கில் சேர்வாகும் தீந்தமிழா நாற்பத்தொன் பதினாயிரம் திருப்பதிகளைத் திருநாவுக்கரசு நாயனார் நவின்றருளினார். அவ்வுண்மைக்கு அகச் சான்றாகச் சுந்தரமூர்த்தி நாயனாருடைய அர்ச்சனை பாட்டேயாகும் திருவாக்கில் காண்க.

**"இணைகொள் ஏழெழு நூறிரு பனுவல்**
**ஈன்ற வன்திரு நாவினுக் கரையன்"** (7-65-2)

பரசமயப் பற்றறுத்தவரிடத்தில் படையுடை மன்னனுடைய மந்திரிகளும் படைவீரர்களும் சென்று அழைத்த போதில், "நாமார்க்கும் குடியல்லோம்" என்று அரசனுடைய ஆணைக்கு அஞ்சாது அறைந்தார்.

**"கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்க்**
**கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே"**

நாம் அரசர்களுக்கு எல்லாம் மேலான அரசரான சிவபெருமானுடைய நறுமணமலரடிக்கு மீளா அடிமை ஆளானோம் என்று தமது திருவடி ஞானத்தைத் தெரிவித்தருளினார் - திருநாவுக்கரசுநாயனார்.

பல்லவ மன்னவன் திருநாவுக்கரசுப் பெருந்தகையாரை நீற்றறையினுள் இருத்தினான். நாயனார் அம்பலத்தில் ஆடுகின்ற திருவடி மலர்களை நிழலாகச் சிரமேற் தாங்கி அமர்ந்திருந்தார்.

முதல்வனை முன்னி இருந்த வாகீச முனிவருக்கு வெப்பமுடைய நீற்றறை இளவேனிற் பருவமாக இனித்தது. தண்ணிய இளந்தென்றலாகக் குளிர்ந்தது, செங்கழுநீர்த் தடாகம் போன்று தண்ணளி செய்தது. முழுமதியின் நிலாக் குழுமை செய்தது. யாழின் ஒலியாகச் சுகம் செய்தது. பெருமானுடைய திருவடி நீழல் அருள் மழை பொழிந்தது.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈச னெந்தை யிணையடி நீழலே.**

இவ்வாறு அரசனுடைய வெப்பறையில் இருந்து ஒப்புமை இல்லாத செப்பமான திருப்பதிகத்தைத் தட்பமாக இசைத்து அருளுகின்றார் பாவேந்தர்.

இறைவனுடைய இணையடி நீழலின் இனிமையை என்னென்பது! வாய் இனிமை வாயோடு நின்று விடும். திருவடி இனிமை அழிவற்றது; என்றும் நிலைத்து நிற்பது; மனத்தினால் சுவைப்பது; அறிவினால் உணர்வது.

கற்ற கல்வியி னும்மினி யானை (7-56-5) என்பது சுந்தரமூர்த்தி நாயனாருடைய தோழமைத் தமிழ்.

திருநாவுக்கரசு நாயனார் திருவிடைமருது திருக்குறுந்தொகை ஒன்றில் திருவடி இனிமையை எடுத்து இயம்புவார். கனியினும் கரும்புக் கட்டியினும் பாவையர் நல்லாரினும் தனிமுடி அரசினும் இனிமையானவன் இடைமருது ஈசன்.

**கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும்**
**பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்**
**தனிமு டிகவித் தாளு மரசினும்**
**இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே.**

அவை தாம் புறத்தால் வரும் - இனிமையான இன்பங்கள் - அகத்து இன்பம் தற்கிழமையானது. தற்கிழமை இனிமைக்குப் பிற இனிமை எதுவும் எதிராக மாட்டாது. ஒருவருக்கு தன்னை விட இனியாராகப் பிறிது ஒருவர் இருக்க இயலாது. தன்னிலும் இனியானாக ஒருவன் இருக்கின்றான். உள்ளிருந்து உயிர்ப்பாகப் புறம் போந்தும் புக்கும் நிற்கும் இன்னம்பர் ஈசன் என்று இன் தமிழ் பாடுவார் நல்ல நாவரசர்.

**என்னி லாரும் எனக்கினி யாரில்லை**
**என்னி னும்மினி யானொரு வன்னுளன்**
**என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்**
**கென்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே —**

புறத்துள்ள வெப்ப அக்கினி அகத்து நின்று குளிர்ந்து இனிக்கும் ஈசன் முன்பு எம்மாத்திரம்?

## 29

மெய்யடியாராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய பொய்யா வாக்கு அமுதம் இது:

**"உள்ளம் உள்கி உகந்து சிவனென்று**
**மெள்ள வுள்க வினைகெடும் மெய்ம்மையே"**

இந்தத் திருவாய்மொழியின் பெருவாய்மைக்குத் திருநாவுக்கரசு நாயனாருடைய திவ்விய சரிதமே அகச் சான்றாகும் அது வருமாறு:

பாதகத்தில் முதிர்ந்த சமணர்கள் அரசனுடைய ஆணைப்படி திருநாவுக்கரசு நாயனாருக்குத் தீய நஞ்சு கலந்து சமைத்த பாற்சோற்றை உண்ணுமாறு ஊட்டினார்கள். "எங்கள் சிவபெருமானுடைய அடியவர்களுக்கு நஞ்சும் அமுதமே ஆகும் என்று 'மெள்ள உள்கி' உரனுடையோராக வெஞ்சமணர் இடுவித்த நஞ்சமுதை மிசைந்திருந்தார்.

நஞ்சு கலந்த வஞ்சனைப் பாற்சோற்றினால் துஞ்சாச் செயல் கண்ட அமணர்கள் அஞ்சினார்கள்.

அந்நிகழ்வினைச் சேக்கிழாருடைய ஆக்கம் மிக்க அருந்தமிழ் திருவருள் தேக்கி வைத்துப் பாடும் பான்மை இது.

**"பொடியார்க்குந் திருமேனிப்**
**புனிதர்க்குப் புவனங்கண்**
**முடிவாக்கும் துயர்நீங்க**
**முன்னைவிட மமுதானாற்**
**படியார்க்கு மறிவரிய**
**பசுபதியார் தம்முடைய**
**வடியார்க்கு நஞ்சமுத**
**மாவதுதா னற்புதமோ.** (1370)

திருநாவுக்கரசுநாயனார் வெஞ்சமணர் இட்ட நஞ்சமுதம் உண்டருளியதும், வெவ்விடம் அமுதமான அற்புதமும் ஆகிய நிகழ்வுகளுக்கு நாவரசருடைய நல்ல அமுதவாக்கு அகச் சான்றாக அமையும்.

"காலையிலும் மாலையிலும் நள்ளிரவிலும் தொடர்ச்சியை மறக்கலாகாது. நாளும் உள்ளம் உருகி திருவைந்து எழுத்து ஓதினால் சிவபெருமானுடைய திருவடிகளில் அன்பதாகும். வஞ்சனையால் சமணர் வழக்கமில்லாத பாற்சோறு சமைத்துத் தந்தார்கள். திருநனிபள்ளி அடிகளார் நஞ்சினை அமுதம் ஆக்குவித் தருளினார்.

**துஞ்சிருள் காலை மாலை**
**தொடர்ச்சியை மறந்தி ராதே**
**அஞ்செழுத் தோதின் நாளும்**
**அரனடிக் கன்ப தாகும்**
**வஞ்சனைப் பாற்சோ றாக்கி**
**வழக்கிலா அமணர் தந்த**
**நஞ்சமு தாக்கு வித்தார்**
**நனிபள்ளி அடிகளாரே.** (4-70-5)

நினைத்ததை முடிக்கும் சூழ்ச்சியில் வல்ல சமணர்கள் வாகீசத் திருவடிகள் மீது அரசனுடைய பட்டத்து யானையை ஏவிட்டார்கள். ஒப்பற்ற வலிமை மிக்க அந்த யானை – யமன் யானை உருவத்தில் வருவது போல வந்தது. மதநீர் மழை போலச் சொரிய மலை போன்ற யானை தமது எதிரில் வரக்கண்டார் பார் வாழத் திருவீதிப்பணி செய்யும் பண்பாளர் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட செம்மலார் அஞ்சினாரல்லர். அகன்று ஓடுவதற்கு வழி தேடினாரல்லர். திருஞானச் செம்மலார் இடபத்தின் மேல் விளங்குகின்ற சிவபெருமானுடைய பொன்னார்ந்த திருவடிகளைச் சிந்தையிற் கொண்டார். திருவருள் பெருவெள்ளத்தில் மூழ்கி நின்றனர் பெரியோர். சேக்கிழார் அமுதமான அருள்வாக்கை அள்ளிச் சொரிகின்றார்.

**சேவிற்றிகழ் பவர்பொற்கழ**
**றெளிவுற்றனர் பெரியோர்** (1379)

**"வெஞ்சுடர் மூவிலைச் சூல**
**வீரட்டர் தம்மடி யோநாம்**
**அஞ்சுவ தில்லை யென்றென்றே**
**யருந்தமிழ் பாடி யறைந்தார்** (1381)

**"சுண்ணவெண் சந்தனச் சாந்து"**
**தொடுத்த திருப்பதி கத்தை**
**. . . . . ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவ தியாதொன்று மில்லை**
**யஞ்ச வருவது மில்லை!"** என்று
மண்ணுல குய்ய வெடுத்து மகிழ்வுடனே
அருந்தமிழ் பாடி யறைந்தார். (1381)

கோபாவேசமாக வந்த கொலைக் கூற்று யானை அன்பு மிக்க அடியவரை முன்வலமாக வந்தது. தவவேந்தர் எதிரில் தாழ்ந்தது. எட்டுத் திக்கிலுள்ளவர்களும் காணும்படி பட்டத்து யானை நிலத்தில் வீழ்ந்தது. நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமரை வணங்கி, எழுந்தது. அவ்வேழம் அருந்தமிழ் வேந்தரை அகன்று அப்பால் சென்றது.

அரன் அடியாரை அஞ்சு வித்து அலைக்க வந்த அடல் ஆனை அரன் அடிக்கு அன்பதாகும் அஞ்செழுத்து உண்மையில் அழுந்தி நின்ற அன்பருக்கு அஞ்சிய அற்புதம் ஆர் அறிய வல்லார்?

## 30

**"தருமசேனனை இனிச் செய்வது என்ன? சொல்லுமின்"** என்று சமணரிடத்தில் அரும் பெரும் பாவத்த அரசன் வினாவினான்.

**". . . . . சூழ்ச்சி முடிக்குந் தொழிலோர்**
**கல்லுடன் பாசம் பிணித்துக்**
**கடலிடைப் பாய்ச்சுவ தென்றார்.** (1387)

அது கேட்ட அரசன் அத்தொழில் ஆற்றும் ஆட்களை அழைத்தான். "தீமை செய்த தருமசேனனைத் தப்பவிடாதீர்கள். ஒரு கல்லினோடு சேர்த்துக் கயிற்றினால் கட்டுங்கள். ஒரு படகில் ஏற்றிச் செல்லுங்கள். ஒலிக்கும் கடலினுள் வீசுங்கள். எறிந்து விழுத்தி விடுங்கள்" என்று கட்டளை இட்டான்.

அவ்வினை மாக்களுடன் அருகந்த வெவ்வினையாளர்களும் விரைந்தார்கள். செம்மை நலம் அறிந்த திருநாவுக்கரசர் திருவுள்ளம் சிறப்பச் செம்மைநலம் அறியாத சிதடருடன் சென்றார்.

"**பௌவத்தின் மன்னவன் சொன்ன படிமுடித் தாரப் பதகர்**". (1389)

ஒப்பில்லாத ஆழமுடைய கடலினுள்ளே புக்க தொண்டுறைப் புடைய தண்தமிழ் வேந்தர், சோதி வானவன் பொற்றுணைத் திருந்தடியைப் பொருந்தக் கைதொழுது, நற்றுணையான நமச்சிவாயப் பதிகத்தைக் கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் இருந்து சொற்றுணை வேதியன் என்று எடுத்துத் தேனினும் இனிய செந்தமிழ் பாடியருளினார்.

செப்பிய வண்டமிழ் தன்னாற் சிவனஞ் செழுத்துந் துதிக்கும் அஞ்செழுத்தை அன்பொடு பற்றிப் பதிகம் பாடும் இயல்பைச் சேக்கிழார் பாடும் இன்தமிழ் இது.

**சொற்றுணை வேதிய னென்னுந் தூயமொழி**
**நற்றமிழ் மாலையா நமச்சி வாயவென்**
**றற்றமுன் காக்குமஞ் செழுத்தை யன்பொடு**
**பற்றிய வுண்வினாற் பதிகம் பாடினார்** (1391)

பாமாலை முதலாவது பாடலில் "சோதி வானவன் பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழுது அமுதத் தேன் இசை மழைத் தமிழ் பொழிந்த நாவின் மன்னவனார் நமச்சிவாயப் பத்தாவது பாடலில் மாதோர் பாகத்தன் பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழுது நிறைவு செய்த நேர்மைத் திருவருள் துணை நினைதொறும் நினைதொறும் நெஞ்சில் நின்று நீங்கா இன்பம் பயக்கும் நுட்பம் நுகர்தற் பாலது.

அடியார் இட்ட மலர் மாலைகளால் அழகுபடுத்தப்பட்ட சிந்திப்பரிய திருவடிகளைப் பொருந்தக் கைகள் கூப்பித் தொழ — நாப்பிணைந் தழுவிய நமச்சிவாயப் பத்தேத்தகரிய கடலினுள் கல் மிதந்தது.

மிதக்கும் கல் தெப்பமானது. நாவரசருடைய திருமேனியைப் பிணைத்திருந்த கயிறு கட்டவிழ்ந்தது. மெய்ப் பெருந்தொண்டர் கடலினுள் கல் கலமாக விளங்கித் தோன்றியருளினார். கருணையே உருவமான திருநாவுக்கரசு நாயனாரைத் தனது அலைகளாகிய கரங்களால் ஏந்தித் தன்னுடைய தலையின் மீது தாங்கிக் கொள்ளத் தரங்க வேந்தனும் முன்னாளில் தலையாய தவத்தைச் செய்திருந்தனன்.

தாங்கிய வருணதேவன் நாயனாரை திருப்பாதிரிப் புலியூர்த் திருத்தலத்தின் பக்கமாக எழுந்தருள்வித்தனன். எழுந்தருளிய அன்பரை மெய்யடியார்கள் எல்லாம் கூடி மகிழ்ச்சியினால் ஆரவாரஞ் செய்தார்கள். அடியவர்களுடைய 'அரகர' என்னும் ஆனந்த ஓசை போல அலை நீர்ப் பெருங்கடலும் ஆரவாரித்தது.

தொழுந்தகை நாவினுக்கரசரும் தொண்டர்கள் முன்பு எழுந்தருளினர். செழுந் திருப்பாதிரிப் புலியூர்த் திங்கள்வெண் கொழுந்தணி சடையனைக் கும்பிட்டார். அன்புற விழுந்து எழுந்தார்.

"**தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே**" என்று எவ்வுயிர்க்குஞ் சான்றா மொருவனை, "**ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாகி**" என எடுத்துத் தண்டமிழ் மாலைகள் சாத்தி அருளினார்.

திருப்பாதிரிப் புலியூர்த் திருப்பதிகத்தில் திருநாவுக்கரசு நாயனார் சிவபெருமானுடைய திருவடிப் பெருமையைச் சிந்தையில் தாங்கி வந்தனை செய்யத் தகுவன.

1. *தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே,*

2. *பற்றாய் இருந்திடப் போதுநெஞ் சே*
   *இந்தப் பாரை முற்றும்*
   *சுற்றாய் அலைகடல் மூடினுங்*
   *கண்டேன் புகல்நமக்கு*
   *உற்றான் உமையவட் கன்பன்*
   *திருப்பா திரிப்புலியூர்*
   *முற்றா முளைமதிக் கண்ணி*
   *யினான்றன் மொய்கழலே.*

3. *மாயமெல் லாமுற்ற விட்டிருள்*
   *நீங்க மலைமகட் கே*
   *நேயம் நிலாவ இருந்தா*
   *னவன்றன் - திருவடிக்கே*
   *தேய மெல்லாநின் றிறைஞ்சுந்*
   *திருப்பா திரிப்புலியூர்*
   *மேய நல்லான் மலர்ப்பாத*
   *மென்சிந்தையுள் நின்றனவே.*

4. *கருவாய்க் கிடந்துன் கழலே*
   *நினையுங் கருத்துடையேன்.*

5. *பாதிரிப் புலியூர்க் கண்ணாய் நுதலாய்*
   *கழல்நங் கருத்தில் உடையனவே.*

6. *புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா*
   *வுன்னடி யென்மனத்தே*
   *வழுவா திருக்க வரம்தர*
   *வேண்டும்.*

7. *மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்*
   *விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ் சே*
   *திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்*
   *கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே.*

8. *திருந்தா அமணர்தந் தீநெறிப் பட்டுத் திகைத்துமுத்தி*
   *தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன்.* (4-95-1,2,4,6,7,8,9,10)

## 31

"தொல்கலையின் பெருவேந்தர் திருக்காளத்திப் பொன்முகலித் திருநதியின் புனிதநெடுந் தீர்த்தத்தின் முன் முழுகினார். தாணுவினை யம்மலைமேற் றாள்பணிந்த குறிப்பினால் கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலங் காணுமது காதலித்தார் கலைவாய்மைக் காவலனார்".

திருக்கயிலாய மலையினை நோக்கிக் கற்சுர வழியாகச் செல்லும் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகள் பரடுவரையும் தசை தேய்ந்தன. தமது இரண்டு கைகளாலும் தாவிச் சென்றனர். கைகளும் தேய்ந்து சிதைவுற்றன. மார்பினால் வருந்தி உந்திச் சென்றார். மார்புத் தசைகள் தேய்ந்தன. எலும்புகளும் முறிந்தன. அக்காட்டு வழியில் இரவும் பகலும் புரண்டு புரண்டு சென்றார். உந்திச் செல்லும் முயற்சியும் தப்புறச் செயலற்றுத் தமிழ் ஆளியார் தனித்துத் தங்கினார்.

அந்த வேளையில் கயிலை நாயகர் புனல் நிறைந்த தடாகத்தினுடன் ஓர் முனிவராம் படி வந்து முன்நின்றார்.

"உமது உறுப்பு எல்லாம் சிந்தி அழியவும் இப்பாலை நிலத்தில் என்ன கருதி வந்தீர்?" என்று வினாவினார்.

"பார்வதி அம்மையாரோடு வட கயிலாயத்தில் பரமேசுவரன் எழுந்தருளி இருக்கும் காட்சியைக் கண்டு கும்பிடுவதற்குக் காதல் கொண்டேன்" என்றார் மருணீக்கியார்.

"இனி உமக்குக் கடன் இங்கிருந்து மீள்வதேயாகும்." சிவபிரான் திருவாய் மலர்ந்தருளக் கேட்டு,

"என்னை ஆளும் நாயகருடைய கயிலைக் கோலத்தைக் கண்டு கும்பிட்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்று மறுத்துரைத்தார் மருணீக்கியார்.

தொண்டர் துணிவறிந்து அண்டர் நாயகர் அசரீரியாக அருளிச் செய்கின்றார்.

"ஓங்கும் நாவுக்கரசனே! இப்பொய்கையில் மூழ்குவாய். நீ நம்மைக் கயிலையிருந்தவம் முறைமையைப் பழுதில்லாத திருவையாற்றில் திகழக் காண்பாய்" என்று பணித்தருள் செய்தார்.

அவ்வாறாக ஆளுடைய அரசுகள் பொய்கையில் மூழ்கினார். தவமுனிவர் தாம் உமையம்மையாரை ஒரு பாகத்தில் கொண்டருளும் சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருவையாற்றில் ஒரு வாவியின் மீது வந்து தோற்றினார். அது கண்டு உலகெலாம் உருகி வியந்தது.

கலை வாய்மைக் காவலனார் கண்ணுதலாருடைய கயிலைக் காட்சியைக் கண்டு களிபேருவகையில் திளைத்தார்.

வாக்கின் மன்னவனார் வெள்ளிமலையின் மீது மரகதக் கொடியுடன் விளங்கும் பவளைமலை போன்று இடது பாகத்தில் இடங்கொண்ட பார்வதி தேவியாருடன் வீற்றிருந்த வள்ளலாரை முன் கண்டனர்.

கயிலை மேய நாதர் தமது துணையுடன் வீற்றிருந்தருளத் தூய தொண்டனார் தொழுது எதிர் நின்றார். கயிலாயக் காட்சியைச் சேய்மையாம் படி மறைத்தருளினார். திருவையாற்றுத் திருக்கோலக் காட்சி விளங்கித் தோன்றியது.

நாவுக்கரசு நாயனார் "**மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும்**" என்று எடுத்தருளினார் தண்தமிழ் பதிகம்.

எடுத்த திருப்பதிகத்தில் அடுத்துவரும் பதினொரு திருப்பாடல் களிலும் பிடியொடு களிறு வரக் கண்டார். கோழி பெடை யொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டார். வரிக்குயில் பேடையொ டாடி வைகி வரக் கண்டார். சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்டார். பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வரக் கண்டார். வண்ணப் பகன்றிலொ டாடி வைகி வருவன கண்டார். இடிகுர லன்னதொர் ஏனம் இசைந்து வரக் கண்டார். கருங்கலை பேடையொ டாடிக் கலந்து வருவன கண்டார். நற்றுணைப் பேடையொ டாடி நாரை வரக் கண்டார். பைங்கிளி பேடையொ டாடிப் பரந்து வரக் கண்டார். இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டார்.

விலங்கினங்களையும் பறவையினங்களையும் பயிலும் பேடைகளோடு பார்த்தாலும் - கண்டு அறியாத பரம்பொருளுடைய திருவடிகளையே கண்டு கொண்டார்.

கலைவாய்மைக் காவலனார் வெளிப்படையாகக் களிறும் பிடியுமாக வரக் கண்டேன் என்று அருளுகின்றார். களிற்றினுடைய அல்லது பிடியினுடைய பாதங்களைக் கண்டேன் என்றாரல்லார். கண்டறியாத அவர் திருப்பாதங் கண்டேன் என்று தமிழிசை பாடுகின்றார்.

இந்த நுட்பம் என்ன?

காணும் பொருள் எதுவாகவும் இருக்கலாம், காணுங் கண்ணும் எப்படிப்பட்டதாகவும் இருக்கலாம். பொருளையும் கண்ணொளியையும் இணைத்துப் புலப்படுத்தும் திருவருட் சத்தி உண்மையை

உணர்த்தினால் பொருள் உண்மையை உணரலாம். அவ்வுண்மைக்குத் திருமுறைகளில் அகச் சான்று காணலாம்.

**"சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவனரு ளாலே அவன்தாள் வணங்கி -**
**"காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே**
**காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே**
**"அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்**
**இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்**
**இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே**
**" திருப்பெருந் துறையுறை சிவனே**
**ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை**
**யாருன்னை அறியகிற் பாரே.**

திருநாவுக்கரசு நாயனாருடைய திருவாக்கில், 'கண்டேன் அவர் திருப்பாதம்' என்னும் விடை இறுப்பதற்கு வினாப் போல அல்லவா அமைகிறது. திருவாத வூரடிகளாருடைய மணி வார்த்தை.

**"திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே**
**யாவரும் அறிவரியாய்**
**"மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்?"**

திருநாவுக்கரசு நாயனார் திருவையாறு காந்தாரப் பண் பாடல் பதினொன்றிலும் திருவடி அடையாளம் பதித்தருளுகின்றார்.

**"கண்டே னவர்திருப் பாதங்**
**கண்டறி யாதன கண்டேன்**
**கண்டே னவர்திருப் பாதங்**
**கண்டறி யாதன கண்டேன்**
**கண்டே னவர்திருப் பாதங்**
**கண்டறி யாதன கண்டேன்** (4-3-1-11)

## 32

'எம்பிரான் சம்பந்தன், வம்பறா வரிவண்டு மணநாற மலரும், மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணாதவர்.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்டவர் திருநாவுக்கரசு நாயனார். எம்பெருமக்கள் இருவரும் சிவ அன்பு நிறைந்த உள்ளத்தினர் கள்.

**"செம்புலப் பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"** (குறு — 40)

ஆளுடைய பிள்ளையார் "அப்பரே" என்று அகங் குழைவார். ஆளுடைய அரசுகள் "அடியேன் பிள்ளாய்!" என்று அகம் மகிழ்வார்.

இருவரும் ஒரு சந்தர்ப்பத்தில், 'வெள்ளநீர்த் திருத்தோணி வீற்றிருந்த இன்னமுதின் திருவடிகள் வணங்கும் விருப்பினுடன், செஞ்சடை வானவர் கோயில் சென்று சேர்ந்தார்கள்.

உள்ளம் நிறை காதலுடன் "விமானம் தன்னை வலங்கொண்டு தொழுதுவிழுந் தெழுந்த வெல்லைச் சண்பைவரு பிள்ளையா ரப்ப ருங்க டம்பிரா னாரைநீர் பாடீர்" என்றார். (1451)

பாவேந்தர் 'பார்கொண்டு மூடி' என்னும் பரிவுறுசெந் தமிழ்மாலை பத்தியோடும் பாடியருளினார். பதிகப் பாமாலைப் பாக்கள் ஒவ்வொன்றிலும், ஊழிப் பெருவெள்ளத்தில் தேவர்கள் பறை உருத்தாங்கி அருவுருவப் பெருமானுடைய திருவடிகளைத் தாங்கினார்கள். சிந்திப்பரிய திருவடிப் பெருமையை வந்தித்துச் சிந்திக்க வைக்கும் திறனைக் கண்டு புந்தியில் கொள்க.

1. *பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட*
*ஞான்றுநின் பாதமெல்லாம்*
*நாலஞ்சு புள்ளினம் ஏந்தின என்பர்*
*கால்கொண்ட வண்கைச் சடைவிரித்*
*தாடுங் கழுமலவர்*

2. *. . . . . . கழுமலத்துள்*
*அடைவார் வினைக ளவைஎள்க*
*நாடொறும் ஆடுவரே.*

3. *விரைவாய் நறுமலர் சூடிய*
*விண்ணவன் தன்னடிக்கே*
*வரையாப் பரிசிவை நாடொறும்*
*நந்தமை ஆள்வனவே.*

4. *நிருத்தம் பழம்படி யாடுங்*
*கழல்நம்மை ஆள்வனவே.*

5. *சந்தித்த கால மறுத்துமென்*
*றெண்ணி யிருந்தவர்க்கு*
*முந்தித் தொழுகழல் நாடொறும்*
*நந்தமை ஆள்வனவே.*

6. . . . . . . . கமுமலவர்
அலருங் கழலடி நாடொறும்
நந்தமை ஆள்வனவே.

7. ....... உனைவந் தடைந்தார்
அமரர் அடியிணைக்கீழ்
நடையும் விழவொடு நாடொறும்
மல்கும் கமுமலத்துள்
விடையன் தனிப்பதம் நாடொறும்
நந்தமை ஆள்வனவே.

8. . . . . . நீண்டிருவர்
சிரமப் படவந்து சார்ந்தார்
கழலடி காண்பதற்கே
அரவக் கழலடி நாடொறும்
நந்தமை ஆள்வனவே

9. கரையார் கடல்சூழ் இலங்கையர்
கோன்றன் முடிசிதறத்
தொலையா மலரடி ஊன்றலும்
உள்ளம் விதிர்விதிர்த்து - (4-82)

ஆளுடைய அரசுகள் அரனார் அடிநிழற் கீழது தன் ஆருயிர் என்னும் அருமை திருவடிப் பெருமைக்கு உருக்கொடுக்கும் அழகை அறிந்து அடிமலர்களை அன்போடு அருச்சித்து அருளுக்கு ஆளாவோம்.

10. . . . . . திரிபுர மூன்றையும் ஓரம்பினால்
அட்டான் அடிநிழற் கீழதன்
றோஎன்றன் ஆருயிரே.

11. . . . . . முழுவுல கொடுமண் விண்ணுமற்றும்
ஆவான் அடிநிழற் கீழதன்
றோஎன்றன் ஆருயிரே.

12. . . . . . பெரியார் பிறப்பறுப் பானென்றும்
தன்பிறப்பை அரியான்
அடிநிழற் கீழதன்
றோஎன்றன் ஆருயிரே.

13. . . . . . அடிகள் அடிநிழற் கீழதன்
றோஎன்றன் ஆருயிரே.

14\. . . . . . . தனஞ்சயன் சேணா ரகலங்
கணை ஒன்றினால் அறுத்தான்
அடிநிழல் கீழதன்
றோஎன்றன் ஆருயிரே.

15\. . . . . . . வியனுல கேழும் விளங்க
விழுமியநூல் ஆய்ந்தான் அடிநிழற்
கீழதன்றோ என்றன் ஆருயிரே.

16\. சாம்பர் வெண்ணீ றணிந்தான்
அடிநிழற் கீழதன் றோஎன்றன் ஆருயிரே.

17\. . . . . . . அந்திவட் டத்தொளி யானடிச்
சேர்ந்ததென் ஆருயிரே.

18\. . . . . . . அகத்தான் அடிநிழற் கீழதன்
றோஎன்றன் ஆருயிரே

19\. எம்மான் இவனென் றிருவரும் ஏத்த
எரிநிமிர்ந்த அம்மான் அடிநிழற்
கீழதன் றோஎன்றன் ஆருயிரே.

20\. குழலும் முழவொடு மாநட மாடி
உயரிலங்கைக் கிழவன் இருபது தோளும்
ஒருவிர லால்இறுத்த அழகன் அடிநிழற்
கீழதன் றோஎன்றன் ஆருயிரே. (4-84)

## 33

21\. பூந்துருத் திம்மகிழும் ஆலனை ஆதி புராணனை
நானடி போற்றுவதே.

22\. அறிவுடை ஆதி புராணனை
நானடி போற்றுவதே

23\. நீல மிடற்றனை
யானடி போற்றுவதே

24\. கண்மூன் றுடையனை
யானடி போற்றுவதே

25\. நக்கனை நங்கள் பிரான்றனை
நானடி போற்றுவதே

26\. திருவுடைத் தேச மதியனை
யானடி போற்றுவதே

27. அன்றியும் செய்த பிரானை
யானடி போற்றுவதே

28. நந்தியை நங்கள் பிரான்றனை
நானடி போற்றுவதே

29. மிக்கநல் வேத விகிர்தனை
நானடி போற்றுவதே

30. என்னிற வெந்தை பிரான்றனை
யானடி போற்றுவதே. (4 – 88)

31. ... அடியேனை ஐயாறன் அடிமைக்களே
செறிவித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே.

32. சேர்வித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே

33. நோக்கின வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே

34. பெருக்கின வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே

35. தொழுவித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே

36. தொடர்வித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே

37. தொடக்கின வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே

38. சிறப்பித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே

39. மயக்கின வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழெனையே

40. பொறுத்துமிட் டார்தொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ் எனையே (4 – 91)

ஐயாறன் அடித்தலம் சிந்திப்பதற்கு அரியன. சிந்திப்பவர்க்கு இன்பத்தை முந்திக் கொடுப்பன. முத்தி அளிப்பன. ஒன்று திரண்டு பற்றி நின்ற மாயை கன்மங்களாகிய தொல் வினையைத் தொலைப்பன. அரவு சுற்றி அந்திப்பிறை அணிந்து ஆடுகின்ற ஐயாற்றுப் பெருமானாருடைய திருவடிமலர்கள்.

41. *சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச்*
*சிறந்து செந்தேன்*
*முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன*
*மொய்த்திருண்டு*
*பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன*
*பாம்பு சுற்றி*
*அந்திப் பிறையணிந் தாடுமை*
*யாறன் அடித்தலமே.*

42. *இழித்தன ஏழேழ் பிறப்பும்*
*அறுத்தன என்மனத்தே*
*பொழித்தன போரெழிற் கூற்றை*
*யுதைத்தன போற்றவர்க்காய்க்*
*கிழித்தன தக்கன் கிளரொளி*
*வேள்வியைக் கீழமுன்சென்*
*றழித்தன ஆறங்க மானஐ*
*யாறன் அடித்தலமே.*

43. *மணிநிறம் ஒப்பன பொன்னிறம்*
*மன்னின மின்னியல்வாய்*
*கணிநிற மன்ன கயிலைப்*
*பொருப்பன காதல்செய்யத்*
*துணிவன சீலத்த ராகித்*
*தொடர்ந்துவி டாத தொண்டர்க்*
*கணியன சேயன தேவர்க்கை*
*யாறன் அடித்தலமே.*

44. *இருள் தரு துன்பப் படல*
*மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்*
*பொருள்தரு கண்ணிழந் துண்பொருள்*
*நாடிப் புகலிழந்த*
*குருடரும் தம்மைப் பரவக்*
*கொடுநர கக்குழிநின்று*
*அருள்தரு கைகொடுத் தேற்றுமை*
*யாறன் அடித்தலமே.*

45. எழுவாய் இறுவாய் இலாதன
வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன
மாநர கக்குழிவாய்
விழுவா ரலர்தம்மை வீழ்ப்பன
மீட்பன மிக்கஅன்பொ
டழுவார்க் கமுதங்கள் காண்கஐ
யாறன் அடித்தலமே.

46. துன்பக் கடலிடைத் தோணித்
தொழில்பூண்ட தொண்டர்தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந்
திறத்தன மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி
செய்யுமப் பொய்பொருந்தா
அன்பர்க் கணியன காண்கஐ
யாறன் அடித்தலமே.

34

47. களித்துக் கலந்ததோர் காதற்
கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்றஇப்
பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி
யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்குமஐ
யாறன் அடித்தலமே.

48. திருத்திக் கருத்தினைச் செவ்வே
நிறுத்திச் செறுத்துடலை
வருத்திக் கடிமலர் வாளெடுத்
தோச்சி மருங்குசென்று
விருத்திக் குழக்கவல் லோர்கட்கு
விண்பட்டிகை யிடுமால்
அருத்தித் தருந்தவ ரேத்துமஐ
யாறன் அடித்தலமே.

49\. பாடும் பறண்டையு மாந்தையும்
ஆர்ப்பப் பரந்துபல்பேய்
கூடி முழவக் குவிகவிழ்
கொட்டக் குறுநரிகள்
நீடுங் குழல்செய்ய வையம்
நெளிய நிணப்பிணக்காட்
டாடும் திருவடி காண்கஐ
யாறன் அடித்தலமே.

50\. நின்போல் அமரர்கள் நீண்முடி
சாய்த்து நிமிர்த்துகுத்த
பைம்போ துழக்கிப் பவளந்
தழைப்பன பாங்கறியா
என்போ லிகள்பறித் திட்ட
இலையும் முகையுமெல்லாம்
அம்போ தெனக்கொள்ளும் ஐயன்ஐ
யாறன் அடித்தலமே.

51\. மலையார் மடந்தை மனத்தன
வானோர் மகுட மன்னி
நிலையா விருப்பன நின்றோர்
மதிப்பன நீள்நிலத்துப்
புலையாடு புன்மை தவிர்ப்பன
பொன்னுல கம்மளிக்கும்
அலையார் புனற்பொன்னி சூழ்ந்தஐ
யாறன் அடித்தலமே.

52\. பொலம்புண்ட ரீகப் புதுமலர்
போல்வன போற்றியென்பார்
புலம்பும் பொழுதும் புணர்துணை
யாவன பொன்னனையாள்
சிலம்புஞ் செறிபா டகமுஞ்
செழுங்கிண் கிணித்திரளும்
அலம்பும் திருவடி காண்கஐ
யாறன் அடித்தலமே.

53. உற்றா ரிலாதார்க் குறுதுணை
யாவன ஓதிநன்னூல்
கற்றார் பரவப் பெருமையுடையன
காதல் செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி
வானகந் தான்கொடுக்கும்
அற்றார்க் கரும்பொருள் காண்கஜ
யாறன் அடித்தலமே.

54. வானைக் கடந் தண்டத் தப்பால்
மதிப்பன மந்திரிப்பார்
ஊனைக் கழித்துய்யக் கொண்டருள்
செய்வன உத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே
யுதிப்பன நங்கையஞ்ச
ஆனை யுரித்தன காண்கஜ
யாறன் அடித்தலமே.

55. மாதிர மாநில மாவன
வானவர் மாமுகட்டின்
மீதன மென்கழல் வெங்கச்சு
வீக்கின வெந்நமனார்
தூதரை யோடத் துரப்பன
துன்பறத் தொண்டுபட்டார்க்
காதர மாவன காண்கஜ
யாறன் அடித்தலமே.

56. பேணித் தொழுமவர் பொன்னுல
காளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக்
கொடுத்திமை யோர்முடிமேல்
மாணிக்கம் ஒத்து மரகதம்
போன்று வயிரமன்னி
ஆணிக் கனகமும் ஒக்கும்ஜ
யாறன் அடித்தலமே.

57. ஓதிய ஞானமும் ஞானப்
பொருள் களும் ஒலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு
மாவன விண்ணும்மண்ணும்
சோதியும் செஞ்சுடர் ஞாயிறும்
ஒப்பன தூமதியோடு
ஆதியும் அந்தமு மானஐ
யாறன் அடித்தலமே.

58. சுணங்கு முகத்துத் துணைமுலைப்
பாவை சுரும்பொடுவண்
டணங்குங் குழலி யணியார்
வளைக்கரங் கூப்பிநின்று
வணங்கும் பொழுதும் வருடும்
பொழுதும்வண் காந்தளொண்போ
தணங்கும் அரவிந்தம் ஒக்கும்ஐ
யாறன் அடித்தலமே.

## 35

59. சுழலார் துயர்வெயிற் சுட்டிடும்
போதடித் தொண்டர் துன்னும்
நிழலா வனவென்று நீங்காப்
பிறவி நிலைகெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவ
காலவ னங்கடந்த
அழலார் ஒளியன காண்கஐ
யாறன் அடித்தலமே.

60. வலியான் தலைபத்தும் வாய்விட்
டலற வரையடர்த்து
மெலியா வலியுடைக் கூற்றை
உதைத்துவிண் ணோர்கண் முன்னே
பலிசேர் படுகடை பார்த்துப்பன்
னாளும் பலரிகழ
அலியா நிலைநிற்கும் ஐயன்ஐ
யாறன் அடித்தலமே. (4 – 92 – 93)

61. மன்னு மலைமகள் கையால்
வருடின மாமறைகள்
சொன்ன துறைதொறுந் தூப்பொரு
ளாயின தூக்கமலத்
தன்ன வடிவின அன்புடைத்
தொண்டர்க் கமுதரும்பி
இன்னல் களைவன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

62. பைதற் பிணக்குழைக் காளிவெங்
கோபம்பங் கப்படுப்பான்
செய்தற் கரிய திருநடஞ்
செய்தன சீர்மறையோன்
உய்தற் பொருட்டுவெங் கூற்றை
யுதைத்தன யும்பர்க்கெல்லாம்
எய்தற் கரியன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

63. சுணங்குநின் றார்கொங்கை யாள்உமை
சூடின தூமலரால்
வணங்கிநின் றும்பர்கள் வாழ்த்தின
மன்னு மறைகள் தம்மில்
பிணங்கிநின் றின்னன என்றறி
யாதன பேய்க்கணத்தோ
டிணங்கிநின் றாடின இன்னம்ப
ரான்றன் இணையடியே.

64. ஆறொன் றியசம யங்களின்
அவ்வவர்க் கப்பொருள்கள்
வேறொன் றிலாதன விண்ணோர்
மதிப்பன மிக்குவமன்
மாறொன் றிலாதன மண்ணொடு
விண்ணகம் மாய்ந்திடினும்
ஈறொன் றிலாதன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

65. அரக்கர்தம் முப்புரம் அம்பொன்றி
னாலட லங்கியின்வாய்க்
கரக்கமுன் வைதிகத் தேர்மிசை
நின்றன கட்டுருவம்
பரக்கவெங் கானிடை வேடுரு
வாயின பலபதிதோ
றிரக்க நடந்தன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

66. கீண்டுங் கிளர்ந்தும்பொற் கேழல்முன்
தேடின கேடுபடா
ஆண்டும் பலபல வூழியு
மாயின ஆரணத்தின்
வேண்டும் பொருள்கள் விளங்கநின்
றாடின மேவுசிலம்
பீண்டுங் கழலின இன்னம்ப
ரான்றன் இணையடியே.

67. போற்றுந் தகையன பொல்லா
முயலகன் கோபப்புன்மை
ஆற்றுந் தகையன ஆறு
சமயத் தவரவரைத்
தேற்றுந் தகையன தேறிய
தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

68. பயம் புன்மை சேர்தரு பாவந்
தவிர்ப்பன பார்ப்பதிதன்
குயம்பொன்மை மாமல ராகக்
குலாவின கூட வொண்ணாச்
சயம்புவென் றேதகு தாணுவென்
றேசதுர் வேதங்கள்நின்
றியம்புங் கழலின இன்னம்ப
ரான்றன் இணையடியே.

69. அயன்நெடு மால் இந்திரன் சந்தி
ராதித்தர் அமரரெல்லாம்
சயசய என்றுமுப் போதும்
பணிவன தண்கடல்சூழ்
வியன்நில முற்றுக்கும் விண்ணுக்கும்
நாகர் வியன்நகர்க்கும்
இயபர மாவன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

70. தருக்கிய தக்கன்றன் வேள்வி
தகர்த்தன தாமரைப்போ
துருக்கிய செம்பொன் உவமன்
இலாதன வொண்கயிலை
நெருக்கிய வாளரக் கன்தலை
பத்தும் நெரித்தவன்றன்
இருக்கியல் பாயின இன்னம்ப
ரான்றன் இணையடியே. (4 – 95)

## 36

71. மருட்டுயர் தீரஅன் றர்ச்சித்த
மாணிமார்க் கண்டே யற்காய்
இருட்டிய மேனிவளைவாள் எயிற்றெரி
போலுங் குஞ்சிச்
சுருட்டிய நாவில்வெங் கூற்றம்
பதைப்ப வுதைத்துங்ஙனே
உருட்டிய சேவடி யான்கட
வூருறை உத்தமனே.

72. உதைத்தெழு சேவடி யான்கட
வூருறை உத்தமனே.

73. உரப்பிய சேவடி யான்கட
வூருறை உத்தமனே.

74. உறுக்கிய சேவடி யான்கட
வூருறை உத்தமனே.

75. உழக்கிய சேவடி யான்கட
வூருறை உத்தமனே.

76. ஓடிவந்த காலனைக் காய்ந்த பிரான்கட
வூருறை உத்தமனே.

77. உடறிய சேவடி யான்கட
வூருறை உத்தமனே.

78. ஊன்றிய சேவடி யான்கட
வூருறை உத்தமனே. (4 – 108)

79. மாணிக் குயிர்பெறக் கூற்றை யுதைத்தன
மாவலிபால் காணிக் கிரந்தவன் காண்டற் கரியன
கண்ட தொண்டர் பேணிக் கிடந்து பரவப் படுவன
பேர்த்து ம ஃ தே
மாணிக்க மாவன மாற்பே றுடையான் மலரடியே.

80. கருடத் தனிப்பாகன் காண்டற் கரியன
காதல் செய்யில்
குருடாக்கு முன்னே குடிகொண் டிருப்பன
கோலமல்கு
செருடக் கடிமலர்ச் செல்விதன்
செங்கம லக்கரத்தால் வருடச் சிவப்பன
மாற்பே றுடையான் மலரடியே. (4 – 109)

81. பொடிகள் பூசிய பூந்துருத் திந்நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே.

82. பூத்த நீள்பொழிற் பூந்துருத் திந்நகர்
தீர்த்தன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

83. பூத நாயகன் பூந்துருத் திந்நகர்
காதி சேவடிக் கீழ்நா மிருப்பதே

84. பூவின் நாயகன் பூந்துருத் திந்நகர்
தேவன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

85. பொன்பொ னார்செல்வப் பூந்துருத் திந்நகர்
நம்பன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

86. புல்லம் பேசியும் பூந்துருத் திந்நகர்
செல்வன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

87. பொருத்த னாகிலும் பூந்துருத் திந்நகர்
திருத்தன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

88. பொருத நீர்வரு பூந்துருத் திந்நகர்
சதுரன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

89. பொதுவின் நாயகன் பூந்துருத் திந்நகர்க்
கதிபன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

90. ..... பூந்துருத் திந்நகர்ப் படிக்கொள்
சேவடிக் கீழ்நா மிருப்பதே (5 – 32)

91. முன்ன மேநினை யாதொழிந் தேனுனை
இன்னம் நானுன சேவடி ஏத்திலேன்
செந்நெ லார்வயல் சூழ்திருக் கோளிலி
மன்ன னேஅடி யேனை மறவலே.

92. விண்ணு ளார்தொழு தேத்தும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கு மருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
அண்ண லாரடி யேதொழு துய்ம்மினே.

93. நாளும் நம்முடை நாள்கள் அறிகிலோம்
ஆளும் நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீர் நையாதே
கோளி லிஅரன் பாதமே கூறுமே

94. அழல்கை யான்அம ருந்திருக் கோளிலிக்
குழக னார்திருப் பாதமே கூறுமே

95. கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலிச்
சூல பாணிதன் பாதந் தொழுமினே

96. ஆற்ற னைஅம ருந்திருக் கோளிலி
ஏற்ற னாரடி யேதொழு தேத்துமே

97. கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே

98. கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலி
நீல கண்டனை நித்தல் நினைமினே

99. இரக்க மாகிய வன்திருக் கோளிலி
அருத்தி யாயடி யேதொழு துய்ம்மினே. (5 – 58)

## வேறு

கேடு மூடிக் கிடந் திடந்துண்ணும் நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளிலி ஈசனைப்
பாடு மின்னிர வோடு பகலுமே.

(ஐந்தாம் திருமுறை)

## 37

100. அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
101. அருமறையான் சென்னிக் கணியாமடி
102. சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
103. சாந்தார்கட் கெல்லாஞ் சரணாமடி
104. பரவுவார் பாவம் பறைக்கும் மடி
105. பதினெண் கணங்களும் பாடும்மடி
106. திரைவரவு தென்கெடில நாடன்னடி
107. திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி
108. கொடுவினையா ரென்றுங் குறுகாவடி
109. குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும்மடி
110. படுமுழவம் பாணி பயிற்றும்மடி
111. பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தவடி
112. கடுமுரணே றூர்ந்தான் கழற்சேவடி
113. கடல்வையங் காப்பான் கருதும்மடி
114. நெடுமதியங் கண்ணி யணிந்தானடி
115. நிறைகெடில வீரட்டம் நீங்காவடி
116. வைதெழுவார் காமம்பொய் போகாவடி
117. வஞ்சவலைப் பாடொன் றில்லாவடி
118. கைதொழுது நாமேத்திக் காணும்மடி
119. கணக்கு வழக்கைக் கடந்தவடி
120. நெய்தொழுது நாமேத்தி ஆட்டும்மடி
121. நீள்விசும்பை யூடறுத்து நின்றவடி
122. தெய்வப்புனற் கெடில நாடன்னடி
123. திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி
124. அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி
125. அழகெழுத லாகா அருட் சேவடி
126. சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி
127. சோமனையுங் காலனையுங் காய்ந்தவடி

128. பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி
129. பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி
130. திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி
131. திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி
132. ஒருகாலத் தொன்றாகி நின்றவடி
133. ஊழிதோ றூழி உயர்ந்தவடி
134. பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும்மடி
135. புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
136. இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும்மடி
137. இன்புற்றார் இட்டபூ ஏறும்மடி
138. திருவதிகைத் தென்நடில நாடன்னடி
139. திருவீரட் டானத் தெஞ் செல்வன்னடி
140. திருமகட்குச் செந்தா மரையாமடி
141. சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும்மடி
142. பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்றவடி
143. புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
144. உருவிரண்டு மொன்றோடொன் றொவ்வாவடி
145. உருவென் றுணரப் படாதவடி
146. திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
147. திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி
148. உரைமாலை யெல்லா முடையவடி
149. உரையால் உணரப் படாதவடி
150. வரைமாதை வாடாமை வைக்கும்மடி
151. வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும்மடி
152. அரைமாத் திரையில் லடங்கும்மடி
153. அகலம் அளக்கிற்பார் இல்லாவடி
154. கரைமாங் கலிக்கெடில நாடன்னடி
155. கமழ்வீரட் டானக் காபாலியடி
156. நறுமலராய் நாறு மலர்ச்சேவடி
157. நடுவாய் உலகநா டாயவடி
158. செறிகதிரும் திங்களுமாய் நின்றவடி
159. தீத்திர ளாயுள்ளே திகழ்ந்தவடி
160. மறுமதியை மாசு கழுவும்மடி
161. மந்திரமுந் தந்திரமும் ஆயவடி
162. செறிகெடில நாடர் பெருமானடி
163. திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி

164. அணியனவுஞ் சேயனவு மல்லாவடி
165. அடியார்கட் காரமுத மாயவடி
166. பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி
167. பற்றற்றார் பற்றும் பவளவடி
168. மணியடி
169. பொன்னடி
170. மாண்பாமடி
171. மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி
172. தணிபாடு தண்கெடில நாடன்னடி
173. தகைசார் வீரட்டத் தலைவன்னடி
174. அந்தா மரைப்போ தவர்ந்தவடி
175. அரக்கனையும் ஆற்றல் அழித்தவடி
176. முந்தாகி முன்னே முளைத்தவடி
177. முழங்கழலாய் நீண்டவெம் மூர்த்தியடி
178. பந்தாடு மெல்விரலாள் பாகன்னடி
179. பவளத் தடவரையே போல்வானடி
180. வெந்தார் சுடலைநீ றாடும்மடி
181. வீரட்டங் காதல் விமலன்னடி (6 — 6)

## 38

திருநாவுக்கரசு நாயனார் திருச்சத்திமுற்றம் என்னும் திருத்தலத்தில், "குன்ற மகள்தன் மனக்காதல் குலவும் பூசை கொண்டருளும் என்றும் இனிய பெருமானிடத்தில் விண்ணப்பித்து அருளுகின்றார்.

"எம்பிரானே! இயமன் வந்து உயிரினைக் கொண்டு போவதன் முன்னம் தேவரீருடைய பூவார்ந்த திருவடி அடையாளம் படும்படி எனது தலையின் மேல் பொறித்து வைத்தருள்க" என்று திருப்பதிகம் பாடியருளினார்.

**"கோவாய் முடுகி யடுதிறற்**
**கூற்றங் குமைப்பதன்முன்**
**பூவா ரடிச்சுவ டென்மேற்**
**பொறித்துவை"**

திருச்சத்திமுற்றத்தில் சிவக்கொழுந்து செம்மையாளருடைய வேண்டு தலைத் திருவுளங் கொண்டார்.

"திருநல்லூரில் வாவா உன்னுடைய நினைப்பதனை நிறைவேற்று கின்றோம்" என்றருளிச் செய்தார்.

அவ்வார்த்தை கேட்டு மகிழ்ந்த வாகீசவள்ளலார் நன்மை பெருகும் திருவருள் வழியே நல்லூரை வந்து அணைந்தார். நிலை பெற்ற திருத்தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழுந்தார். சிவபெருமான், "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்று திருவாய் மலர்ந்து அருளினார். சிவபெருமான் செம்மையாளர் சென்னியின் மீது தமது சேவடிகளைச் சூட்டியருளினார்.

**நன்மைபெரு கருணெறியே**
**வந்தணைந்து நல்லூரின்**
**மன்னுதிருத் தொண்டனார்**
**வணங்கிமகிழ்ந் தெழும் பொழுதில்**
**உன்னுடைய நினைப்பதனை**
**முடிக்கின்றோ மென்றவர்தஞ்**
**சென்னிமிசைப் பாதமலர்**
**சூட்டினான் சிவபெருமான்.** (1460)

என்று சேக்கிழார் அரிதினும் அரிதான அந்நிகழ்வினை அருந்தமிழால் ஆராதித்து அகங் குழைவார்.

பேராளப் பெருந்தகையார் திருநல்லூர்ப் பெருமான் தமக்குச் செய்த பேரருளை நினைத்து உருகி, மன நிறைவும் அக மலர்ச்சியும் பெற்றுக் குறைவில்லாத செல்வத்தைப் பெற்றுக் களிக்கும் வறியான் ஒருவன் போல மனம் மகிழ்வில் திளைத்தார்.

"நனைந்தனைய திருவடி என்தலைமேல் வைத்தார், நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே" என்று திருத்தாண்டகம் புனைந்து போற்றி செய்தார்.

தம்மை நினைந்து உருகும் அடியார்களை மேன்மேலும் அன்பு பெருகி நெகிழ வைத்தார். தீய பிறவியிற் செலுத்தும் தீய வினைகள் நிலையாமல் நீங்க வைத்தார். கோபமிக்க கயாசுரனுடைய ஈருரியைப் போர்வையாகக் கொண்டார். சடாமுடியினிடமாக நிலாவுமிழும் மதிக் கொழுந்து வைத்தார். தேவர்கள் சிறப்பினோடும் முடியில் அணிந்த தெய்வப் புதுமலர்கள் இதழ் விரிவன. விரியும் பூவில் தேன் சொரியும். அத்தேன் தேவர்பிரானுடைய திருவடிகளை நனையச் செய்யும். நல்லூர் எம்பெருமானார் தேன் நனைந்த திருவடிகளை என் தலைமேல் நல்லவாறு வைத்தருளினார்.

182. நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற இனமலர்கள்
போத விழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

183. நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

184. நாடேறு திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

185. நல்லருளால் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

186. நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

187. நற்றவர்சேர் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

188. நாறுமலர்த் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

189. நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

190. நன்றருளுந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

191. நாம்பரவுந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. (6 — 14)

## 39

192. ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

193. அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

194. மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே
மலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
சினந்திருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

195. அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தேனுற்ற சொல்மடவாள் பங்கன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

196. கழற்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்ணார் மழுவாட் படையாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

197. பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

198. பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

199. நண்ணி யடியென்மேல் வைத்தாய் நீயே
தேவ ரறியாத தேவன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

200. வாரா வுலகருள வல்லாய் நீயே
தொண்டிசைத்துன் அடிபரவ நின்றாய் நீயே
தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்சிலைக்கோர் சரம்கூட்ட வல்லாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

201. தொண்டாய் அடியேனை ஆண்டாய் நீயே
தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்டோள்விட் டெரியாட லுகந்தாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

202. ஒண்தா மரையானும் மாலுங் கூடித்
தேரும் அடியென்மேல் வைத்தாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (6—38)

203. அம்பொன்னை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

204. ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

205. அத்தனை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

206. ....சுடர் பொற் காசின் ஆணியை
ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

207. அருமணியை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

208. ஆற்றானை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

209. எம்மானை என்மனமே கோயிலாக இருந்தானை
என்புருகும் அடியார் தங்கள் அம்மானை
ஆவடுதண் துறையுள் மேய அரனடியே
அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

*210. ஐயானை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.*

*211. ஆண்டானை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.*

*212. அந்தணனை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.*

*213. ....... நீசனேன் உடலுறுநோ யான தீர
அரித்தானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.* (6–46)

## 40

தமது நிலையில் நின்றும் பிறழாது ஒருமைப்பட்ட உணர்வினை யுடைய நாயனார் பெருமையினை ஏழு உலகங்களும் அறிந்து துதித்தன. அன்பு அகலாத பத்தியே வடிவமாகி விளங்கும் திருநாவுக்கரசு நாயனார் திருப்புகலூர்ச் சிவபெருமானுடைய மெய்ப்பொருளினைப் பொருந்த அணையும் நிலைமை அணித்தாக ஆங்கு இனிது அமர்ந்திருந்தார்.

சிவபெருமானுடைய திருவடிகளில் அறிவு இச்சை செயல் அடங்கிய அறிவினால்,

"தன்னுடைய சரணான தமியேனைப் புகலூரன் என்னையினிச் சேவடிக்கீழிருத்திடும்" என்னும் முன்னைப் பிறவியின் உணர்வு சேரத் திருவிருத்தம் பல பாடியருளினார்.

**"தன்னைச் சரணென்று தாளடைந் தேன்ற னடியடைய"**

இந்தப் பூவுலகம் முதலாக, எல்லா உலகங்களும் துதிக்க, நிலைபெற்ற திருத்தாண்டகத் திருப்பதிகத்தை, "**புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்**" என்று நிறைவாக எடுத்துப் பாடியருளி, அடைதற்கரிய சிவானந்த ஞானவடிவமாக, சிவபெருமானுடைய திருவடியின் நீழலில் ஆண்ட அரசு அமர்ந்து அருளினார்.

அந்த ஆனந்தத் திருவருள் நிகழ்வை நினைவூட்டும் சேக்கிழார் பெருமானுடைய தெய்வத் தமிழ் இன்பம் இது:-

மண்முதலா முலகேத்த
மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே
போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த
ஞான வடிவேயாகி
யண்ணலார் சேவடிக்கீ
ழாண்டவர சமர்ந்திருந்தார். (1692)

214. எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போதுணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்பூகலூர் மேவிய புண்ணி யனே.

215. சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே.

216. ....... வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேற் றரவ றுத்தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

217. அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

218. போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

219. புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

220. பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

*221. கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.*

*222. பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.*

*223. பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (6 — 99)*

## 41

**"பொய்யாத்தமிழ் ஊர னுரைத்தன வல்லார்
பெய்யே பெறுவார்கள் தவநெறி தானே."**

இது நம்பியாரூரர் நவிலும் நல்லமுத வாக்கு. சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருவெண்ணெய் நல்லூரில் சிவபெருமான் ஆகாய வெளியில் உமையம்மையாரோடும் இடப வாகனத்தில் எழுந்தருளி வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தருளினார்.

வணங்கி நின்ற வன்றொண்டரைப் பார்த்துப் பரம்பொருள் பகருகின்றார்.

"*நீ வலிந்து பேசியதால் வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றாய். நமக்கு அன்பினால் சிறந்த அர்ச்சனையாவது பாடலேயாகும். ஆதலால் இவ்வுலகில் நம்மைத் துதித்துச் சொற்றமிழ் பாடுவாயாக*" என்று வேதம் பாடும் வாயால் விளம்பி அருளினார் வெண்ணெய் நல்லூர் வேதியனார்.

"கோதிலா அமுதே! குணப் பெருங் கடலே! நாயேன் எதை அறிந்து என்ன சொல்லிப் பாடுவேன்" என்று இரங்கினார் ஆரூரர்.

"நீ மணப்பந்தலில் என்னைப் பித்தன் என்று பேசினாய். என்பெயர் பித்தன் என்று பாடுவாய்" என்று அடி எடுத்துக் கொடுத்தார் எம்பெருமானார்.

"பித்தாபிறை சூடி" என்று அடி எடுத்து அன்றிலிருந்து ஆரூரர் ஆரா அமுதை அள்ளூறு தீந்தமிழால் பாடிப் பரவிப் பணிந்து பாமாலை அணிந்து அழகனுடைய அழகை அனுபவித்து ஆனந்தித்தருளினார்.

**"நறவம் பூம்பொழில் நாவ லூரன்
வனப்பகை யப்பன் சடையன்றன்
சிறுவன் வன்றொண்டன் ஊரன் பாடிய"**

பாமாலைப் பாட்டுக்களில் சிந்திப்பரிய சிவபெருமானுடைய திருவடிப் பெருமைச் சிந்தனையில் சிலவற்றை வந்திக்கத் தந்து சிந்தனையில் சேர்த்துவோம்.

1. *அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத*
   *அவனைக் காப்பது காரண மாக*
   *வந்த காலன்தன் ஆருயி ரதனை*
   *வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்*
   *எந்தை நீஎனை நமன்தமர் நலியின்*
   *இவன்மற் றென்னடி யான்என விலக்கும்*
   *சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்*
   *செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.*

2. *செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்*
   *செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.*

3. *பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன்*
   *பூம்பொ ழில்திருப் புன்கூர் உளானே.*

4. *குற்றஞ் செய்யினும் குணம்எனக் கருதும்*
   *கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்.*

5. *சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன்*
   *செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.*

6. *அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யாதனை*
   *அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு*
   *திகைப்பொன் றின்றிநின் திருவடி அடைந்தேன்*
   *செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.*

7. *தீர்த்த னேநின்தன் திருவடி அடைந்தேன்*
   *செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.*

8. *தேவ தேவநின் திருவடி அடைந்தேன்*
   *செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.*

9. *செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன்*
   *செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே (7 - 54)*

10. *தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்*

11. *திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்*

12. *இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்*

13. *இளையான் றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்*

14. வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
15. விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
16. அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
17. இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
18. ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
19. கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
20. கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
21. மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
22. எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
23. அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
24. மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
25. முருகனுக்கும்
26. உருத்திர பசுபதிக்கும் அடியேன்
27. செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
28. அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
29. திரு நின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
30. பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
31. பெருமிழலைக் குறும்பர்க்கும்
32. பேயார்க்கும் அடியேன்
33. ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
34. ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
35. அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
36. வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
37. ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
38. நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
39. நாட்டமிகு தண்டிக்கும்
40. மூர்க்கற்கும் அடியேன்
41. அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்.

42

42. மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
43. சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
44. செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டர்க் கடியேன்
45. கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
46. கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
47. ஆர்கொண் வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
48. பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
49. பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
50. மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
51. விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
52. கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன்
53. கலியன்
54. கழற் சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
55. ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
56. கணம்புல்ல நம்பிக்கும்
57. காரிக்கும் அடியேன்
58. நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
59. தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
60. அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
61. காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
62. மடல் சூழ்ந்ததார் நம்பி இடங்கழிக்கும்
63. மன்னவனும் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
64. பொன்னடிக்கே மனம்வைத்தபுகழ் துணைக்கும் அடியேன்
65. அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
66. பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
67. பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
68. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
69. திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
70. முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
71. முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
72. அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்

73. மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
74. வரிவளையாள் மானிக்கும்
75. நேசனுக்கும் அடியேன்
76. தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
77. திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன் (7–39)

78. அத்தா ஆலங் காடாஉன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

79. ஐயா ஆலங் காடாஉன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

80. ஆண்டா ஆலங் காடா உன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

81. அறிவே ஆலங் காடா உன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

82. ஆலங் காடா உன்னுடைய
அடியார்க் கடியேன் ஆவேனே.

83. அண்ணா ஆலங் காடா உன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

84. அண்டா ஆலங் காடாஉன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

85. ஆள்வாய் ஆலங் காடா உன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

86. அம்மா ஆலங் காடா உன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

87. பத்தர் சித்தர் பலர்ஏத்தும்
பரமன் பழைய னூர்மேய
அத்தன் ஆலங் காடன்றன்
அடிமைத் திறமே அன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச்
சிறுவன் ஊரன் ஒண்தமிழ்கள்
பத்தும் பாடி ஆடுவார்
பரமம் அடியே பணிவாரே. (7–51)

88. திருவும்மெய்ப் பொருளுஞ் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள் என் றெண்ணி
ஒருவரை மதியா துறாமைகள் செய்து
மூடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

89. ......... திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

90. பண்பநின் னடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

91. பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய்
பாசுப தாபரஞ் சுடரே.

92. ...... மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

93. பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

94. ....... எல்லியும் பகலும்
பணியது செய்வேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

95. பைம்பொனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

96. பட்டனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

97. பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. (7 – 69)

98. தெய்வத்தினை வழிபாடுசெய் தொழுவார்அடி தொழுவார்
அவ்வத்திசைக் கரசாகுவர் அலராள்பிரி யாளே.

99. அலையார்சடை உடையான் அடி தொழுவார்பழு துள்ளம்
நிலையார் திகழ் புகழால் நெடு வானத்துயர் வாரே.

100. மெய்வைத்தடி நினைவார்வினை தீர்தல்லெளி தன்றே
"பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கே ஒத்த தேவர்பிரான்"

## 43

101. காலையிலும் மாலையிலும் கடவுள்அடி பணிந்து
கசிந்தமனத் தவர்பயிலுங் கலயநல்லூர் காணே.

102. ஏரிக் கனகக் கமலமலர் அன்ன சேவடி
ஊரித் தனையும் திரிந்தக் காலவை நோங்கொலோ.

103. மந்தி கடுவனுக் குண்பழம் நாடி மலைப்புறம்
முந்தி அடிதொழ நின்ற சீர்முது குன்றரே.

104. தடங்கை யால்மலர் தூய்த்தொழு வாரைத்
தன்னடிக் கேசெல்லு மாறுவல் லானை.

105. செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும்
விரவிய சடைமுடி அடிகளை நினைந்திட்
டழுமலர்க் கண்ணிணை அடியவர்க் கல்லால்
அறிவரி தவன்திரு அடியிணை இரண்டும்.

106. முன்ன மேஉன சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்.

107. உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை
உள்ளத் தால் உகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையும் இன்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே.

108. சேடு லாம்பொழில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைத் திருவடி யிணைதான்
நாடெ லாம்புகழ் நாவலூ ராளி
நம்பி வன்றொண்ட னூரன் உரைத்த
பாட லாந்தமிழ் பத்திவை வல்லார்
முத்தி யாவது பரகதிப் பயனே.

109. திருவும் வண்மையும் திண்திறல் அரசும்
சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு
மருவி கோச்செங்க ணான்தனக் களித்த
வார்த்தை கேட்டுநுன் மலரடி அடைந்தேன்.

110. பத்தி செய்தஅப் பரசுரா மற்குப்
பாதங் காட்டிய நீதிகண் டடைந்தேன்.

111. ஏதஞ் செய்தவர் எய்திய இன்பம்
யானுங் கேட்டுநின் இணைஅடி அடைந்தேன்

112. கோடு நான்குடைக் குஞ்சரங் குலுங்க
நலங்கொள் பாதம்நின் றேத்திய பொழுதே
பீடு விண்மிசைப் பெருமையும் பெற்ற
பெற்றி கேட்டுநின் பொற்கழல் அடைந்தேன்

113. இறைவன் எம்பெருமான் என்றெப் போதும்
ஏத்தி ஏத்திநின் றஞ்சலி செய்துன்
அறைகொள் சேவடிக் கன்பொடும் அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே.

114. புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றிஎன் றன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே.

115. திகழும் நின்திருப் பாதங்கள் பரவித்
தேவ தேவநின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே.

116. ஆர்வத் தோடும்வந் தடியிணை அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே.

117. மிக்க நின்கழ லேதொழு தரற்றி
வேதி யாஆதி மூர்த்திநின் அரையில்
அக்க ணிந்தஎம் மான்உனை அடைந்தேன்

118. கல்லி யல்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்லியர் வானவர் வணங்கநின் றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே.

119. அரவந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளே.

120. உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை

121. தீவினை செற்றிடும் என்று
அடித்தவம் அல்லால் ஆரையும் அறியேன்.

122. உள்ளமும் உருகும்
ஒண்மலர்ச் சேவடி காட்டாய்

123. அடிகளை அடிதொழப் பன்னாள்
வாயினாற் கூறி மனத்தினால் நினைவான்

124. நானே லும்மடி பாடுதல் ஒழியேன்
நாட்டியத் தான்குடி நம்பீ

125. ........ பொன்னடி பரவ மாட்டேன்
மறுமையை நினைய நல்லே னல்லேன்

126. உம்மடி அடைந்தவர்க் கடிமைப்
பட்டே னாகிலும் பாடுதல் ஒழியேன்.

127. நடப்பீ ராகிலும் நடப்பன் உம் அடிக்கே
நாட்டியத் தான்குடி நம்பீ

128. ........ உள்ளமுள் ளளவும்
உய்வான் எண்ணிவந் தும்மடி அடைந்தேன்

129. அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்

130. பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்

131. பெட்ட னாகிலும் திருவடிப் பிழையேன்

132. பிழைப்ப னாகிலும் திருவடிக் கடிமை
ஒட்டி னேன்.

133. ..... ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார்
எம்மையும் ஆளுடையாரே.

134. அடித்தவம் அல்லால் ஆரையும் அறியேன்

135. அங்கம் நான்மறை யால்நிறை கின்ற
அந்த ணாளர் அடியது போற்றும்
நங்கள் கோனைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே.

136. நற்ப தத்தைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே.

137. ஆடிய மாநடத்தான் அடிபோற்றி

138. அறவ னார்அடி சென்று சேர்வதற்
கியாது மையுற வில்லையே

139. தவத்தை ஈட்டிய தம்மடி யார்க்குச்
சிந்தித் தற்கெளி தாய்திருப் பாதஞ்
சிவலோ கந்திறந் தேற்றவல் லானை

140. அன்பரல்லால் அணிகொள் கொன்றை
அடிக ளடிசேரார்.

## ~44~

வஞ்ச நெஞ்சு அணுகாத சிந்திப்பரிய பெருமைத் திருவடிகள் தம்மைத் தெய்வப் புலமை மிக்க சேக்கிழார் பெருமான் பாடிய பெரிய புராணத்தில் கண்டவாறு சிலவற்றைக் காட்ட முனைகின்றோம்.

1. "அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திருமேனி முதல்வன் அம்பலத்தில் ஆடும், அடியார் உள்ளத்தில் மலர்கின்ற சிலம்பு அணிந்த திருவடிகளை வாழ்த்துவோம்; வணங்குவோம்.

2. ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றாடொழ.

3. சம்பு வின்னடித் தாமரைப் போதலால்
எம்பிரா னிறைஞ்சா யி ஃ தென் னெனத்
தம்பிரா னைத்தன் னுள்ளம் தழீஇயவன்
நம்பி யாரூர னாந்தொழும் தன்மையான்

4. கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்
செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையன் மானிட மாய்மயங் கும்வழி
ஐய னேதடுத் தாண்டருள் செய்யென.

5. இரு வர்க்குமரி யாரொருவர் வந்தார்
6. தண்டொருகை கொண்டுகழ றள்ளுநடை கொள்ள வந்து
7. விரைந்து சென்று, மாலயன் றொடரா தானை
வலிந்துபின் றொடர லுற்றார்
8. .... என்று முன்னே தண்டுமுன் றாங்கிச் சென்றான்

9. ...அங்கணரும்,முதுவடிவின் மறையவராய் முன்னொருவ ரறியாமே
பொதுமடந்தி னுட்புகுந்து பூந்தாரான் றிருமுடிமேற்
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போற்பயின்றார்.

10. "…. அருமறையோய் யுன்னடியென்
சென்னியில் வைத்தனை" என்ன.

11. அங்குமவன் றிருமுடிமேன் மீட்டுமவர் தாணீட்ட

12. வையகம் பொலிய மறைச்சிலம் பரற்ற
மன்னுளே மாலயன் றேட
ஐயர்தாம் வெளியே யாடுகின் றார்.

13. போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம்
போற்றி போற்றி

14. சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

15. ஆதியு முடிவு மில்லா
வற்புதத் தனிக்கூத் தாடு
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடு நலத்தின் மிக்கார்

16. நடந்துவேட் கோவர்தம் மனையை நண்ணினார்.

17. வாலிதா நிலைமை காட்ட
முன்புபோல் மனையில் வந்தார்.

18. தில்லைவா ழந்தணர்கள் வந்திருந்த திருந்தவையின்
எல்லையிலான் முன்செல்ல

19. "……… தந்தொண்டர்
மருத வண்ணமுங் காட்டுவான் வந்தார்"

20. ………. மாதவன் சேவடி பணிந்து
திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்

21. …… வழித்துணை யாகி யுள்ளார்
கழிபெருங் காதல் காட்டிக்
காரிகை யுடன்போம் போதில்

22. அருமறை முனிவர் சாய்க்கா டதன்மருங் கணைய மேவி

23. நற்ற வத்தவர் வேட மேகொடு
ஞால முய்ந்திட நண்ணினார்.

24. வஞ்ச வல்வினைக் கறுப்பறு மனத்தடி யார்கள்
நெஞ்சி னீங்கிடா வடிமலர் நீணிலம் பொலிய
25. ... வந்தமர் நீதியார் திருமடங் குறுக.
26. தெண்திரைப் பொன்னிநீர் ஆடவென் றகன்றார்
27. வான நீர்மழை பொழிந்திட நனைந்துவந் தணைந்தார்.
28. உள்ளநிலைப் பொருளாய உம்பர்பிரான் தாம் அணைவார்
29. ..... தம்முடைய குளிர்கமலத்
தடிநீடும் மனத்தன்பர் தம்மனையின் அகம்புகுந்தார்.
30. அணங்கிவள்தன் மயிர்நமக்குப்
பஞ்சவடிக் காம் என்றார்
பரவஅடித் தலம் கொடுப்பார்
31. அந்நிலைமை கண்டன்பர்க் கருள்புரிவான்
வந்தணைந்தார்.
32. இந்தவுடற் கிடர் செய்தீர் என்று கொடுத் தேகினார்
33. ...... தொண்டர் தாம்காணும்
படியால் அணைந்தார் நெடியோனும்
காணா அடிகள் படிதோய
34. அம்பி காவல் லவர்செய்ய
அடித்தா மரையின் கீழ்வீழ்ந்தார்.
35. தொண்ட னார்தம் துயர்நீக்கத்
தூத னாராய் எழுந்தருள
36. பொருவில் அன்பர் விடுந்தூதர்
புனித வீதி யினிற்போத
37. சீலம் உடைய மறைமுனிவ ராகித்
தனியே சென்றணைந்தார்.
38. பொன்புரி சடையார் மாதர்
புனிதமா ளிகையிற் சென்றார்.
39. தூதினில் ஏகித் தொண்டரை ஆளும் தொழில்கண்டே
40. திருவாரூர், மன்னவனார், அம் மறையவ
னார்பால் வந்துற்றார்.
41. ....... வீதி விடங்கப் பெருமாள்தம்
பொன்திகழ் வாயிற் கோயில் புகுந்தார் புவிவாழ.

## 45

42. .......... விடையவர்தாம்
சித்தமகிழ் வயிரவராய்த் திருமலைநின்
றணைகின்றார்.

43. பயன்தவத்தால் பெறும்புவியும்
பாததா மரைசூட

44. தெருள் பொழிவண் தமிழ் நாட்டுச்
செங்காட்டங்குடிச் சேர்ந்தார்.

45. அண்ணலார் திருவாத்தி அணைந்தருளி
அமர்ந்திருந்தார்.

46. ஒப்பி லாரும் யான் அங்குப்
போகின் றேன் என் றுடன் போந்தார்.

47. கூட வந்து மறையவனார்
திருப்பைஞ் ஞீலி குறுகியிட
வேடம் அவர்முன் மறைத்தலும்

48. குன்றவில் லாளி யாரும்
கூடலை யாற்றூர் ஏறச்
சென்றதிவ் வழிதான் என்று
செல்வழித் துணையாய்ச் செல்ல

நெஞ்சில் அன்பினில் விளைந்த ஆரமுதின் திருவருள் திருவடித் தாமரைகள் மண்மிசைப் பொருந்த நடந்தருளிய நலப்பாடுகள் பெரிய புராணம் எடுத்துப் பாடும் அருமையில் அரியன. சிந்திப்பரிய திருவடிப் பெருமையிற் பெருமை. பேராயிரம் பேசி விண்ணோர் பரவும் ஆரா அமுது நடந்தருளியமைக்குச் சுந்தரமூர்த்தி நாயனாருடைய தோழமைத் தமிழ் சொல்லும் அகச்சான்று அறியத் தருகின்றோம்.

49. வாயாடி மாமறை ஓதிஓர் வேதியன் ஆகிவந்து

50. ...... புரிகுழல் உமையோடும்
கொடிஅணி நெடுமாடக்
கூடலை யாற்றூரில்
அடிகள் இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே.

51. ஐயனிவ் வழி போந்த அதிசயம் அறியேனே
52. ஆர்வன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே
53. அந்தணன் வழிபோந்த அதிசயம் அறியேனே
54. ஆதிஇவ் வழிபோந்த அதிசயம் அறியேனே
55. அத்தன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே
56. அழகன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே
57. அறவன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே
58. ஆலன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே
59. கூடலை யாற்றூரில் கொடியிடை யவளோடும்
ஆடலு கந்தான் அதிசயம் இது.

60. தாயவ ளாய்த்தந்தை ஆகிச்
சாதல் பிறத்தலின்றிப்
போயகலா மைத்தன் பொன்னடிக்
கென்னைப் பொருந்தவைத்த வேயவனார்
என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வாலறிவன்
நன்றாஅள் தொழும் நன்மை நவில்வாம்.

61. மெய்ப்பொருள் நாயனாருக்கு
அண்ட வானவர்கட் கெட்டா அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவா றிடைய றாமல் கும்பிடும் கொள்கை ஈந்தார்

62. விறன் மிண்ட நாயனார்,
தக்க வகையால் தம்பெருமான்
அருளி னாலேதாள் நிழற்கீழ்
மிக்க கணநா யகராகும்
தன்மை பெற்று விளங்கினார்.

63. கடவூரில் கலைய நாயனார்
சிவபத நிழலிற் சேர்ந்தார்.

64. மும்மையா லுலகாண்ட மூர்த்தி நாயனார்
நாதன் கழற் சேவடி நண்ணினர்.

65. முருக நாயனார்
தங்கள் பெருமான் அடிநீழல்
தலையாம் நிலைமை சார்வுற்றார்

66. செம்மையே திருநாளைப் போவார் நாயனார்
சுந்தரத்தா மரைபுரையுந் துணையடிகள் தொழுதிருக்க
அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்தர் அருள்புரிந்தார்

67. திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரைய நாயனார்
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசு அமர்ந்திருந்தார்.

68. பெருமிழலைக் குறும்ப நாயனார்,
மூல முதல்வர் திருப்பாதம் அணைவார் கயிலை முன்னடைந்தார்.

69. காரைக்காலம்மையார்
குலவியதாண் டவத்தில் அவர்
எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றும் இருக் கின்றார்.

70. ஒரு நம்பி யப்பூதி யடிகளார்
..... திருத்தில்லை மன்றுள் ஆடும்
நவ்வியங் கண்ணாள் பங்கர்
நற்கழல் நண்ணி னாரே

71. ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீலநக்க நாயனார்
மறையவர் வாழிசீ காழி
ஒருவர் தந்திருக் கல்லியா ணத்தினி லுடனே
திரும ணத்திறம் சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார்

72. அருநம்பி நமிநந்தி யடிகள் நாயனார்
திருவாரூர் மன்னர் பாத நீழல்மிகும்
வளர்பொற் சோதி மன்னினார்

73. ஏயர்கோன் கலிக்காம நாயனார்
செங்கண்மால் விடையார் பாதம்
சேர்ந்தனர் சிறப்பினோடும்

74. நம்பிரான் திருமூல நாயனார்
சென்னிமதி அணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை
தன்னில் அணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்

75. நாட்டமிகு தண்டியடிகள் நாயனார்
மின்னும் சடையார் அடிநீழல்
மிக்க சிறப்பின் மேவினார்.

46

76. சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலி நாயனார்
ஈசர் தாள்நிழல் தங்கி னாரே

77. ஆர்கொண்ட வேற் கூற்றுவ நாயனார்
உமையாள் கணவன் அடிசேர்ந்தார்

78. பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்சோழ நாயனார்
செக்கர்நெடுஞ் சடைமுடியார் சிலம்பலம்பு சேவடியின்
அக்கருணைத் திருநிழற்கீழ் ஆராமை அமர்ந்திருந்தார்.

79. மெய்யடியா னரசிங்க முனையரைய நாயனார்
பைவளர்வாள் அரவணிந்தார் பாதமலர் நிழல்சேர்ந்து
மெய்வகைய வழிஅன்பின் மீளாத நிலைபெற்றார்

80. கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்ப நாயனார்
களத்தில் நஞ்சம் அணிந்தவர்தாள்
நிழற்கீழ் அடியா ருடன் கலந்தார்

81. கழற்சத்தி நாயனார்
வைய முய்ய மணிமன்று ளாடுவார்
செய்ய பாதத் திருநீழல் சேர்ந்தனர்

82. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்
பரமர்திரு வடிநிழற்கீழ்
மன்னுசிவ லோகத்து வழிஅன்பர் மருங்கணைந்தார்

83. துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலார் நாயனார்
சிவபெருமான் அடிநிழற்கீழ்ப்
புகலமைத்துத் தொழுதிருந்தார்

84. கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க நாயனார்
திருவருட் சிறப்பி னாலே செய்யசே வடியின் நீழல்
பெருகிய உரிமை யாகும் பேரருள் எய்தினாரே

85. மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழி நாயனார்
இறைவர் மலரடியின் நிழல்சேர்ந்தார்

86. தஞ்சை மன்னவனாம் செருத்துணை நாயனார்
செய்ய பொன்மன்றுள்
எடுத்த பாத நிழலடைந்தே
இறவா இன்பம் எய்தினார்

87. புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடிப்
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணை நாயனார்,
பொன்னாட்டின் அமரர்தொழப்
புனிதரடி நிழல்சேர்ந்தார்

88. மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசலார் நாயனார்
பொன்புனை மன்று ளாடும்
பொற்கழல் நீழல் புக்கார்

89. வரிவளையாள் மானியார், ஈசர்
அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார்

90. நேச நாயனார்
அரனடி நீழல் சேர்ந்தார்

91. தென்னவனா யுலகாண்ட செங்கணார் நாயனார்
....... இமையவர்கள் அடிபோற்ற
மேவினார் திருத்தில்லை வேந்தர்திரு வடிநிழற்கீழ்

92. திருநீல கண்டத்துப் பாண நாயனார்
பானற் களத்தார் பெருமணத்தில்
உடனே பரமர் தாளடைந்தார்

**"ஏரிக் கனகக் கமல மலர் அன்ன சேவடி**
**ஊரித் தனையுந் திரிந்தக் காலவை நோங்கொலோ"**

என்று வள்ளலார் திருவடி மலர்கள் திரிவதைக் கண்டு வருந்து கின்றார் வன்றொண்டர்.

**"தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும் நாடுவன்"** என்று நம்பியாரூரர் நினைந்துருகும் நறுமலர்ப் பாதங்களை நாளிலும் பொழுதிலும் நினைந்து நைந்து உருகு வோமாக.

"மதிசூடி வானவர்கள் தங்கட் கெல்லாம் நாதனே என்று என்று பரவி நாளும் நைந்துருகி வஞ்சகமற்ற அன்பு கூர்ந்து வாதனையால் முப்போதும் பூநீர் கொண்டு வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக் காதன்மையால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே காணும் கன்றாப்பூர் நடுதறியைக் கைப்போது மலர் தூவிக் காதலித்துத் தெய்வத் தமிழ் சொல்லிச் சேவித்து அல்லல் அறுப் போமாக.

இறைவன் பெயர்களை ஒவ்வொன்றாகக் கூறி மலர்தூவி அருச்சித்தல் ஆகமவழக்கு ஓங்கி விளங்கும் தென்திசைக்கே சிறப்பாக உரியது என்பர் ஆகமம் அறிந்த அறிஞர்கள்.

நூறு ஆயிரம் இலட்சம் கோடியாக நாமங்களைக் கூறி அருச்சிக்கும் சிறப்பு நெறி நின்று நாமும் ஒழுகி நலம் பல படைப்போமாக.

**"நானேல் உன்னடியே நினைந்தேன் நினைதலுமே**
**ஊனேல் இவ்வுடலம் புகுந்தாயென் ஒண்சுடரே"**

**"நிலையாய் நின்னடியே நினைந்தேன் நினைதலுமே**
**தலைவா நின்னினைப் பணிந்தாய் சலமொழிந்தேன்"**

**"செய்வினைஒன் றறியாதேன்**
**திருவடியே சரணென்று**
**பொய்யடியேன் பிழைத்திடினும்**
**பொறுத்திடநீ வேண்டாவோ"**

*முற்றும்.*




வடிவேல்

ாடுவன்"
ாளிலும்

ு என்று
னயால்
யத்திக்
்றாப்பூர்
் தமிழ்

லர்தூவி
சிறப்பாக

்சிக்கும்



# சிவாகம சாரம்

ஆணவம் அநாதியே ஆன்மாவைப் பந்தித்தது. ஆன்மா சார்ந்ததன் வண்ண மாகும். ஆன்மா மலக்கலப்பினால் பல உடம்புகளை எடுத்து மூவுலகங்களிலும் உழன்று திரியும். ஆன்மாவினுடைய நல்வினைத் தீவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்களை இறைவன் பிறவி தோறும் அளந்து தருவார்.

ஆன்மா பிராரத்த வினையைத் துய்க்கும் காலத்தில் மன அழுக்கால் மேலும் உடம்பு எடுத்து உற்பவிப் பதற்கு ஏதுவாகிய ஆகாமிய வினைகளையும் சேகரித் துக் கொள்ளும் ஆன்மா முற்றறிவில தாதலினால் அனுபவிக்கும் வினையைத் தானாக அறிய மாட்டாது.

வினைகள் அசேதன மாதலினால் தானாக ஆன்மாவை அடைய மாட்டாது. முற்றறிவுடைய முழுமுதல் பரம் பொருளே நன்னெறி உணராத ஆன்மாவையும் வினைப் பயன்களையும் காலக்கிரமத்தோடு பொருந்த அறிந்து புசிப்பிக்கக் கூட்டுவர்.

ஆன்மாவினுடைய வினைப்போகம் அற்ற போது நித்தியமாகிய நிரதிசய இன்பவாழ்வு நல்குவர்.

இருவினை ஒப்படைந்த மலபரி பாகர்கள் என்றும் இன்பம் பெருகும் சிவலோக வாழ்வு சித்திக்கக் கருணை புரிவார் கண்ணுதல் கடவுள். (இவை சில)

ஜய்ராம் பிறின்ரேஸ். வெலிங்டன் சந்தி. யாழ்நகர்.